பக்கங்கள் : 20+XIII = இருபத்தெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 மார்கழி 10 சனிக்கிழமை (25.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 29

மூன்றாவது மனித சங்கிலிப் போராட்டம்

## கொடிகாமத்தில் நேற்று ஒன்றுதிரண்ட மக்கள் மழைத் தூறல் மத்தியிலும் உரிமைக்கோஷம்

- உதயன் கொடிகாமம் செய்தியாளர் -

கொடிகாமம்,டிசெ.25

சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்துமாறு கோரியும் -

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை விடுதலைப் புலிகளிடம் கையளிக்குமாறு கேட்டும் -

அரசின் யுத்த முன்னெடுப்புக்களைக் கண்டித்தும் கொடிகாமத்தில் நேற்று மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் நடத்தப்பட்டது

தென்மராட்சி பொது அமைப்புகளின் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்பட்ட மூன்றாவது மனித சங்கிலிப் போராட்டம் இதுவாகும்.

இந்த மனித சங்கிலிப் போராட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக ஆரம்பமாகியது.

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த தேசிய

(20 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரிலும் மனித சங்கிலிப் போர்

வவுனியா,டிசெ.25

அரசு மேற்கொண்டுவரும் யுத்த ஆயத்தங்களைக் கைவிட்டு சமாதான முயற்சிகளைத் துரிதப்படுத்தவேண்டும் எனக்கோரி வவுனியா நகரிலும் மாபெரும் மனித சங்கிலிப் போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இப்போராட்டத்தை வவுனியாவிலுள்ள பொது அமைப்புகள் இணைந்து நடத்தவுள்ளன.

(20 ஆம் பக்கம் பார்க்க)

வர்ணப் பக்கங்கள் அடங்கிய நத்தார் சிறப்பிதழ் உள்ளே....

# பிரதான வீதிகளில் திங்கள் முதல் மனித சங்கிலிப் போராட்டங்கள்!

## பேச்சுக்கு வரமறுத்து போருக்குத் தயாராகும் அரசின் போக்குக்கு ஒன்றுதிரண்டு எதிர்ப்பு

-உதயன் அலுவலகச் செய்தியாளர்கள்-

யாழ்ப்பாணம்,டிசெம்பர்25

**சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வருமாறு விடுதலைப் புலிகளின் தலைமை விடுத்திருக்கும் அழைப்பை அசட்டைசெய்து, தமிழ்மக்கள் மீது சர்வதேச சக்திகளின் உதவியுடன் போரைத் திணிக்க முயலும் அரசின் போக்கைக் கண்டித்து வடக்கில் நடத்தப்பட்டுவரும் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் அடுத்த வாரம் முதல் விஸ்தரிக்கப்படுகின்றன. இதன் ஒரு கட்டமாக யாழ். நகரின் பிரதான தெருக்களில் திங்கட்கிழமை தொடக்கம் நான்கு நாள்களுக்குத் தொடர்ச்சியான மனித சங்கிலிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவிருக்கின்றன.**

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டு போர் நிறுத்த உடன்பாடு முறியும் ஆபத்தான கட்டத்தில் தமிழ்மக்களின் சமாதான வேட்கையை வெளிப்படுத்துகின்ற நோக்கில் சாத்வீக வழியில் - அமைதியான முறையில் - மக்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருவது தெரிந்ததே.

இதன் முதற்கட்டமாக இந்த வாரம் தென்ம

(20 ஆம் பக்கம் பார்க்க)



வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், அபிமானிகள், செய்தியாளர்கள், விநியோக முகவர்கள் அனைவருக்கும் உதயனின் நத்தார் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

## பேச்சுக்குத் தெளிவான நிகழ்ச்சி நிரல் தர அரசைக் கோருகின்றனர் புலிகள்!

உத்தியோகபூர்வ பதில் நேற்று சொல்ஹெய்ம் மூலம் அறிவிப்பு

கொழும்பு, டிசெ.25

அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதாயின், அதற்கான தெளிவான - துலக்கமான - திட்டவட்ட வரையறைகளைக் கொண்ட நிகழ்ச்சி நிரலை முன்வையுங்கள்.

அரசுக்கு இவ்வாறு உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கிறார்கள் விடுதலைப் புலிகள்.

பேச்சுக்கு அரசு கடந்த வாரம் சமர்ப்பித்த நிகழ்ச்சி நிரலை நிராகரித்து. நேற்றுத் தாம் அனுப்பிய பதிலிலேயே விடுதலைப் புலிகள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்த நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அமைதிப் பேச்சுக்காக அரசு முன்வைத்த நிகழ்ச்சி நிரலை அப்போது பாலசிங்கத்திடம் சமர்ப்பித்திருந்தார்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் பதில் உடனே அரசுக்கு!

லண்டன்.டிசெ.25

அமைதிப் பேச்சுக்காக இலங்கை அரசு கடந்தவாரம் சமர்ப்பித்த நிகழ்ச்சி நிரலைப் புலிகள் நிராகரித்திருக்கின்றமை தொடர்பான தகவல் நேற்று உடனேயே இலங்கை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டதாக அறியவந்தது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

### சட்ட உதவிமன்ற அலுவலகம்முன்பாக யாழ். அன்னையர்கள் நேற்று மறியல்

யாழ்ப்பாணம்.டிசெ.25

யாழ். நான்காம் குறுக்குத்தெருவில் உள்ள சட்ட உதவி மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் முன்பாக நேற்று மறியற் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

யாழ். மாவட்ட அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேராட்டத்தில் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

### தேவாலயங்களில் நேற்றிரவு நத்தார் ஆராதனை

யாழ்ப்பாணம்.டிசெ.25

நத்தார் திருநாள் பிரார்த்தனைகள் குடாநாட்டிலுள்ள கத்தோலிக்க தேவாலயங்களில் நேற்று நள்ளிரவு நடைபெற்றன.

யாழ். மரியன்னை பேராலயத்தில் யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை விசேட வழிபாடுகளை நிகழ்த்தினார்.

ஆயிரக்கணக்கானோர் இந்தப் பிரார்த்தனையில் பங்குகொண்டனர்.

இதேவேளை -

(20 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அவசர வேண்டுகோளை நிராகரித்தால் போர் மூளும் ஆபத்து!

நத்தார் செய்தியில் யாழ். ஆயர் கவலை தெரிவிப்பு



யாழ்ப்பாணம்.டிசெ.25

பேச்சு நடத்தவருமாறு கேட்டு விடுதலைப் புலிகளின் தலைவர், அரசுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டால் போர் மூளும் சூழல் தவிர்க்கமுடியாததாகிவிடும்.

- இவ்வாறு தமது நத்தார் திருநாள் செய்தியில் கவலை வெளியிட்டிருக்கின்றார் யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம்.

இனியும் போரையும் அதன் கொடூர

(20 ஆம் பக்கம் பார்க்க)

## உரிமை மறுக்கப்பட்டோருக்கு சேவைசெய்ய உறுதி பூணுவோம்!

தென்னிந்தியத் திருச்சபை பேராயரின் செய்தி



யாழ்ப்பாணம்.டிசெ.25

திக்கற்றவர்களுக்கும், உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கும் சேவை செய்வதற்கு நம்மை நாமே இந்த நத்தார் திருநாளில் அர்ப்பணம் செய்து கொள்வோமாக.

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் அதி.வண.எஸ். ஜெபநேசன் விடுத்திருக்கும் நத்தார் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(20 ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் நேற்று நடைபெற்ற மனித சங்கிலிப் போராட்டத்தின் போது...



(படங்கள்: வசந்தன், சிவரூபன்)

# பேச்சு இழுத்தடிக்கப்பட்டு இராணுவ பலம் மழுங்கடிக்கப்படுவதைப் பொறுக்கமுடியாது

## கொடிகாமம் மனித சங்கிலிப் போரில் கஜேந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம்,டிசெ.25

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்காமல் இழுத்தடித்து விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தை மழுங்கடிக்கும் அரசின் முயற்சிகளை இனிமேலும் பொறுத்துக்கொள்ளமுடியாது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்.

தென்மராட்சிப் பொது அமைப்புகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கொடிகாமத்தில் இடம்பெற்ற மூன்றாவது மனித சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளுக்கும் - அரசிற்கும் இடையிலான சமாதானப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் தமிழ் மக்களுக்கான இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப்படவில்லை. இந்த நிலைமை தொடர்ந்து செல்ல அனுமதிக்க முடியாது. அவ்வாறு விடுவோமானால் எமது தமிழ்த்தேசியம் பாதிக்கப்படும்.

ஸ்ரீலங்கா பேரினவாத அரசு தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்க முன்வரவேண்டும். அதனை நிராகரிக்கும் பட்சத்தில் ஆயுதப் போராட்டத்தின் மூலம் எமது விடுதலையைப் பெற்றெடுக்க வேண்டியது தவிர்க்கமுடியாததாகிவிடும். இதனை எமது தேசியத் தலைவர் தமது மாவீரர் தின உரையில் நன்கு தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு, விடுதலைப் புலிகளின் இராணுவ பலத்தைச் சீர்குலைக்கும் ஒரு கைங்கரியத்தில் ஈடுபட்டுவருகின்றது. அரசின் இந்தச் செயலுக்கு மக்களாகிய நாம் இடங்கொடுக்கக் கூடாது. அதேநேரம் எமது விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்த எமது தலைவர் தயாராக இல்லை.

போரின்மூலம் எமது மண்ணை மீட்கவேண்டுமா? அல்லது அகிம்சை வழியில் மீட்கவேண்டுமா? என்பதனை மக்கள்தான் சிந்திக்கவேண்டும். எமது மக்களையும் தேசியத் தலைமையையும் தொடர்ந்தும் ஏமாற்றும் விதமான நடவடிக்கைகளிலேயே ஜனாதிபதியும் அவரின் கீழ் செயற்படும் அரசும் ஈடுபட்டுவருகின்றது. அதன் ஒரு கட்டம்தான் இலங்கையிலுள்ள சகல பல்கலைக்கழகங்களின் மாணவர் பிரதிநிதிகளையும் பட்டதாரிகளையும் அழைத்துத் தமது மாளிகையில் கலந்துரையாடல் நடத்தியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. இதன் மூலம் சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்கு ஜனாதிபதி முனைகின்றார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற யுத்தக்கொடுமைகளுக்குப் பின்னரும் கூட எமக்குரிய தீர்வைத் தருவதற்கு பேரினவாதம் தயாராக இல்லை.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் எமக்குரிய தீர்வை வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் எமக்குரிய ஒரே ஒரு மார்க்கம் ஆயுதப் போராட்டம்தான். அது மக்கள் கையில்தான் உள்ளது.

நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புச் சார்பாக கடந்த தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு சென்றுள்ளபோதும் அதன்மூலம் மக்களுக்கு வேண்டிய இந்தச் சலுகைகளையும் எம்மால் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

எமது மக்களுக்கு இராணுவத்தினரால் பிரச்சினைகள் ஏற்படுத்தப்படும்போது அதனைக் கண்டித்தும், எமது விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தினையும், அவசியத்தையும் வற்புறுத்தி நாடாளுமன்றத்தில் கூச்சல், குழப்பங்களை ஏற்படுத்தி அதன் செயற்பாடுகளைக் குழப்புவதனைத் தவிர வேறு மார்க்கம் எமக்கு இல்லை.

இத்தகைய செயற்பாடுகளில் நாம் ஈடுபடும்போது எம்மை நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றுவதற்கும் கைதுசெய்து சிறைகளில அடைப்பதற்கும் அரசு முனையலாம். எது நடந்தாலும் எமது மக்களின் விடிவிற்காக நாம் அனைவரும் நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்போம்.

மக்கள் இப்பொழுது முன்னெடுக்கும் எழுச்சிப் போராட்டங்கள் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. விடுதலைப் புலிகள் இராணுவ பலத்துடன் இருக்கின்றார்கள். அவர்களது பலத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் மக்கள் அவர்களுக்குப் பின்னால் அணிதிரண்டு அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். அதன்மூலம் எமது அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

அரசு, விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் பேசுவதனை விடுத்து இறுதித் தீர்வு அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்று கூறுகிறது. அதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

விடுதலைப் புலிகள் கோரும் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அவர்களிடம் கையளித்து அதனை முழுமையாக நடைமுறைப் படுத்திய பின்னரே கலந்தாலோசிக்கமுடியும். அதுவரை எமது போராட்டம் தொடரும். - என்றார்.

(எ-5-74)

## கல்விக் கல்லூரி டிப்ளோமாதாரிகளுக்கு கொழும்பில் ஜனவரி மாதம் பட்டமளிப்பு

சாய்ந்தமருது,டிசெ.25

தேசிய கல்விக் கல்லூரிகளில் கடந்த2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரை ஆசிரியர் கல்வியிலான டிப்ளோமா பட்டம் பெற்று வெளியேறியவர்களுக்கான பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கின்றது.

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படவிருக்கும் இப்பட்டமளிப்பு விழாவில் நாட்டிலுள்ள 14 தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயின்ற 14 ஆயிரம் டிப்ளோமா பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றுக்கொள்வர். (எ-க)

## நத்தார் மகிழ்ச்சி இல்லமெங்கும் பரவட்டும்! அமைச்சர் டக்ளஸ் வாழ்த்துச் செய்தி

கொழும்பு,டிசெ.25

துன்பத்தில் ஆழ்ந்திருந்த மக்களை அதிலிருந்து விடுவித்து நல்வழிகாட்ட இயேசு பிரான் மண்ணுலகில் மனிதராய் அவதரித்த நன்நாளையே இன்று கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

அதேபோல், வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களின் மனங்களிலும் என்றென்றும் தீமை இருள் மறைந்து ஒளிமயமான எதிர்காலம் ஒன்று உதயமாகவேண்டும் என்பதே எமது அவாவாகும்

- இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கே.என்.டக்ளஸ் தேவானந்தா, தாம் விடுத்துள்ள நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்கு - கிழக்கு மக்கள் இன்று எதிர்நோக்கிவரும் எல்லையற்ற துன்பங்களில் இருந்து மீண்டு சுபீட்சமும், வளமான எதிர்காலமும் கிடைக்க சம்பந்தப்பட்ட அனைவரும் அயராது பாடுபடவேண்டும்.

நத்தார்ப் பண்டிகையைக் கொண்டாடும் அனைத்துக் கிறிஸ்தவ மக்களுக்கும் எமது மனங் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம் - என்றுள்ளது.

(எ)






## சமாதானத்தை நிரந்தரமாக்க ஒன்றிணைந்து செயற்படுவோம்!

### யாழ். படைத் தளபதி நத்தார் செய்தி

யாழ்ப்பாணம்,டிசெ.25

சமாதானம் என்ற வார்த்தை மட்டுப்படுத்தப்பட்டதாக இல்லாமல் அதனை நிரந்தரமாக்கிக் கொள்வதற்கு சகலரும் கடமையுடனும் பொறுப்புடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

- இவ்வாறு தாம் விடுத்திருக்கின்ற நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கின்றார் யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் எஸ்.பி.தென்னக்கோன்.

அந்த நத்தார் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலகெங்கும் வாழும் கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்கள் கௌரவத்துடனும், பக்தியுடனும், சந்தோசத்துடனும் இயேசுபிரான் பிறப்பைக் கொண்டாடும் நத்தார் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வாழும் கத்தோலிக்க பக்தர்களுக்காக நத்தார் வாழ்த்துச் செய்தியைத் தெரிவிப்பதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நான் பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன்.

இயேசு பிரானுடைய பிறப்பு, முன்னோடியான சிந்தனையுடையது. உலகத்தைப் படைதத சர்வமும் நிறைந்த கடவுள் தன்னுடைய மகனை மனிதனுக்குச் சேவை செய்யவே உலகத்திற்கு அனுப்பிவைத்தார். அது உண்மையிலேயே பெரியதோர் அன்பளிப்பாகும்.

இந்த நாட்டில் கிறிஸ்தவ மார்க்கம் பரவியது போர்த்துக்கேயரின் வருகையுடன். அப்படி என்றால் 1505ஆம் ஆண்டளவில் நடந்தது என்று சாட்சிகள் உள்ளன.

விசேடமாக கரையோர பிரதேசத்தில் வாழும் மக்கள் கிறிஸ்தவ மார்க்கத்தை பிரபல்யமாகக் கடைப்பிடிக்கிறார்கள். அன்றில் இருந்து இந்த நாட்டில் பரவிய கிறிஸ்தவ மார்க்கம் இன்று இலங்கையில் லட்சக்கணக்கான மக்கள் மிகவும் பக்தியுடனும், அன்புடனும் கொண்டாடும் மார்க்கமாகத் திகழ்கின்றது.

பல வருடங்களுக்கு முன்பு கிறிஸ்தவ போதனைகள் இலங்கையில் மிகத் துரிதமாக இடம்பெற்று, புத்துயிர் பெற்று வந்தன.

1948ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து, இலங்கை சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க அஹிம்சை வழியில் போராடியபோது கிறிஸ்தவ மக்கள் பெரும் பங்களித்தார்கள். அதேபோன்று கிறிஸ்தவ மக்கள் சகல இன மக்களுடனும் ஏனைய மதத் தலைவர்களுடனும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவும் செயற்பட்டு நாட்டின் அபிவிருத்திக்காக சொல்லிலும், செயலிலும் பெரும் பங்காற்றினார்கள்.

இவ்வுலகில் உதித்த சகல மதத் தலைவர்களும், போதகர்களும் தர்மத்தையே போதனை செய்தார்கள். அதைப்போல் இயேசு பிரானும், இவ்வுலகில் உதித்தநாள் முதல் அயலவரை நேசியுங்கள், அடுத்தவர்கள் மீது இரக்கப்பட்டு கருணை காட்டுங்கள் என்று போதனை செய்தார்.

மனித சமுதாயத்தில் கலவரங்கள், வன் செயல்கள், கொடியதன்மை, இரத்தக்களரி மற்றும் போராட்டங்கள், புரட்சிகள் போன்றன இடம்பெற்றகாலத்திலேயே இயேசுபிரான் இவ்வுலகில் பிறந்தார். அன்று முதல் அவர் போதித்ததும் சமாதானத்தின் பெறுமதியையே.

இவ்வுலகில் அமைதி இல்லாத இடத்தில் வாழமுடியாது என்பதை அவர் அப்போதே அறிந்திருந்தார். அதனால்தான் சமாதானக் குமரன் என்றும் அவரை நாம் அழைக்கின்றோம். அவர் கிறிஸ்து தர்மத்தை இனம், குலம், வேறுபாடு இல்லாமல் அகில உலக மக்களுக்குமே போதனை செய்தார்.

சகலரும் ஒற்றுமையுடனும், ஐக்கியத்துடனும் வாழ்வதற்கு வழிகாட்டிய இயேசுபிரான் அடுத்தவர்களைப் பழிவாங்கவும் வைராக்கியத்துடன் செயற்படவும், ஒருவக்கொருவர் பொறாமை கொள்ளவும் அனுமதிக்கவில்லை. அதற்கேற்ப இந்நாட்டில் நிரந்தர சமாதானம் உருவாகும் வகையில் தற்போதைய சமாதானத்தைத் திடப்படுத்த இந்த நல்ல நாளைப் பயன்படுத்துவோம்.

இன்றைய தினத்தில் உங்களைப் போலவே தென்னிலங்கைளில் வாழும் சிங்கள, பேக்கர் இன மக்களும் நத்தார் தினத்தைக் கொண்டாடுகிறார்கள் என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். அவர்களும் நீங்களும், கொண்டாடுவது இயேசுபிரானுடைய பிறப்பையே.

இன்று நீங்கள் சந்தோஷமாகக் கொண்டாடுவதுபோல் தென்பகுதி மக்களும், பெற்றோர்களும் பிள்ளைகளும், உறவினர்களும் எவ்வளவு சிறப்பாக யேசு பிறப்பைக் கொண்டாடுகிறார்கள் தெரியுமா? சமாதானம் என்ற வார்த்தை இற்றைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வார்த்தையாக இல்லாமல் அதை நிரந்தரமாக்கிக்கொள்ள சகலரும் கடமையுடனும் பொறுப்புடனும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

இன்றைய நத்தார் தினத்தை சகலரின் மத்தியில் ஒற்றுமை ஏற்பட்டு நிரந்தர சமாதானம் உருவாக மனமாரப் பிரார்த்தனை செய்கிறேன். - என்றுள்ளது.

(4)

உதயன்

## மேய்ப்பர் வழியில் பின்தொடர்வோம்!

சமாதான பிரபு - மனுக்குலத்தின் மேய்ப்பர் - தேவ தூதன் - இயேசு திருவவதாரம் எடுத்த தினம் இன்று. அதனைப் பூவுலகு கிறிஸ்தோயத் திருநாளாகக் கொண்டாடுகின்றது.

இற்றைக்கு 2004 ஆண்டுகளுக்கு முன்னர் புனித பெத்தலேகயில் நமது இறைதூதர் இயேசு பிறப்பதை 'உன்னதங்களில் கடவுளுக்கு மகிமை உண்டாகுக! பூவுலகில் நன்மனதுடையோருக்கு அமைதி உண்டாகுக!' - என்று வானதூதர்கள் அறிவித்தனர்.

மகிமையிலிருக்கும் தேவனுக்கு உகந்தது நிரந்தர சமாதானம் அந்தச் சமாதானத்தை - அமைதியை - நிலைநாட்டுவதே தேவதூதனின் வாழ்வுப்பணியாயிற்று.

ஏறத்தாழ இறைதூதன் பிறப்பெடுத்த காலத்தில் தென்கிழக்காசியாவில் தோன்றி வாழ்ந்த - தமிழ்த்திருமறையைத் தந்த - செந்நாப் போதகர் திருவள்ளுவர், 'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' - என்றார். அதேகாலத்தில், வானுறையும் தெய்வம் பெத்தலேகயில் பிறந்து வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிச்சென்ற வரலாற்றை மறுபுறத்தில் நமது வையகம் கண்டது.

'இருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டனர்; மரண நிழல்படும் நாட்டினுள்ளோருக்கு ஒளி உதித்தது; சுடர்வீசிற்று' - இறை இயேசுவின் பிறப்புக் குறித்து முன்னறிவிக்கப்பட்ட வாசகங்கள் இவை.

ஆனால், ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை இந்தக் கிறிஸ்தோயத் திருநாள் இம்முறை அப்படி ஒருநம்பிக்கையைத் தருவதாக அமையவில்லை என்பதுதான் இறைதூதனின் போதனையைப் பின்பற்றுகின்ற - அவன் காட்டிய வழியில் வாழ்வை முன்னெடுக்கின்ற - அவர்களின் ஆதங்கம்.

மக்களுக்கு நன்மையும், சுபீட்சமும், அமைதியும், சமாதானமும் கிட்டுவதற்காகப் பாடுகளைச் சுமந்தார் இறைதூதர்.

ஆனாலும், ஈழத்தமிழர்களுக்கு அந்தச் சமாதானமும் அமைதியும் கிட்டாமல் எட்டாக்கனியாகவுள்ளன.

'கஷ்டப்பட்டோர் பேறுபெற்றவர்கள். ஏனென்றால் மகிமையில் உள்ள ஆண்டவரின் ஆசீர்வாதம் அவர்களுக்கு உண்டு' - என்பது உன்னத வாக்கியம்.

கஷ்டத்தின் பின்னர், சுபீட்சமும், அமைதியும் பேறுமிக்க வாழ்வும் கிட்டும் என்ற தளராத நம்பிக்கையோடு காத்திருக்கின்றார்கள் தமிழர்கள்.

ஈழத்தமிழர்களின் அண்மைக்கால அரசியல் வாழ்வில் கிறிஸ்தோயத் திருநாள்களும், அதையொட்டி வரும் பண்டிகைக்காலங்களும் குறிப்பிடத்தக்கவை.

புதிய மிலேனியம் ஆண்டின் கிறிஸ்தோயக் காலத்தில்தான், அமைதித் தீர்வுக்கு ஒரு வாய்ப்பளிக்கும் விதத்தில் ஈழத் தமிழர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளான விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக மோதல்களை நிறுத்தி, யுத்தநிறுத்தத்தை அறிவித்தனர். ஆனால், அப்போது ஆட்சியிலிருந்த சந்திரிகா அரசு அந்த அறிவிப்பை உதாசீனம் செய்து புறந்தள்ளியது. அதனால், கொடூர யுத்தம் தொடர்ந்தது.

ஆனால், அடுத்த நத்தார் பண்டிகை - 2001 டிசெம்பரில் - புதிய நம்பிக்கையோடும் எதிர்பார்ப்புக்களோடும் வந்தது. அச்சமயத்தில் புதிதாக அரசுப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசு, அவ்வேளையில் மீண்டும் ஒருதடவை ஒருதலைப்பட்சமாகப் புலிகளின் தலைமை அறிவித்த யுத்தநிறுத்தத்தைத் தானும் சாதகமாக ஏற்றுக்கொள்வதாகப் பிரகடனப்படுத்தியது. அதன் விளைவாக தீர்வுக்கான நம்பிக்கைக் கீற்று அந்த நத்தாரில் தென்பட்டது. இலங்கைத்தீவில் நீண்ட காலத்தின்பின் அமைதியோடும், சமாதானத்தோடும் கிறிஸ்மஸ்தினம் கொண்டாடப்பட்டது.

2002 நத்தார் பண்டிகையும் அமைதி முயற்சிகளுக்கான பேச்சு முயற்சிகளுக்கு மத்தியில் நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் கழிந்தது.

ஆனால், 2003 கிறிஸ்தோயத் திருநாளை சமாதானத்தை நோக்கிய அவநம்பிக்கையோடு சந்திக்கவேண்டியவர்களானார்கள் தமிழர்கள்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையின் கீழ் ஒன்றுதிரண்ட பௌத்த - சிங்கள - மேலாண்மைவாதத்தின் எழுச்சியின் கீழ் அமைதி முயற்சிகள் நசுங்கிப்போயின. நிலைமை இன்று இன்னும் மோசமாகிவிட்டது.

எந்த நேரத்தில் போர் ஆரம்பிக்கும், அமைதிகாக்கும் சுடுகலன்கள் எப்போது கனன்றுகொள்ளத்தொடங்கும் என்ற அச்சத்தோடும், பீதியோடும், அவலத்தோடும் நத்தார் நிகழ்வை எளிமையாகவும், இறைதியானம், ஜெபங்களோடும் மட்டும் கொண்டாடும் சூழ்நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இன்றைய நிலையில் இறைமகன் இயேசுவின் வழியை அரசியல் தலைவர்கள் பின்பற்றினால்தான் நமக்கும் நமது இலங்கைத் தீவுக்கும் மீட்சி கிட்டும் என்ற ஐதார்த்தம் சகலராலும் உணரப்பட்டிருக்கின்றது.

ஆரம்பம்முதல் இறுதிவரை இறைதூதரின் பணி சமாதானத்தை அறிவிக்கும் சேவையாகவே அமைந்தது என நற்செய்தியைப் பரப்பும் ஏடுகள் நமக்குப் பகர்கின்றன.

சமாதானத்தைத் தன் சொல்லாலும் செயலாலும் முன்னெடுத்து அதற்காக ஒப்புயர்வில்லா பணிபுரிந்த நமது மேய்ப்பர், தனது உடலையும், உணர்வையும் கூட அதற்காகவே அர்ப்பணித்தார்.

அவர் காட்டிய உன்னதவழியில் நம் அரசியல் தலைவர்கள் தம் பணி தொடர்வார்களானால் நாட்டுக்கும் சமாதானம் கிட்டும்; அவர்களும் மேன்மையடைவார்கள்.

'அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்; கடவுளினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர்.' - என்றார் இறைதூதர்.

நாட்டின் தலைவர்கள் கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்ட பேற்றைப் பெற்றுக்கொள்ளத் தயாராவார்களானால் நாட்டுக்கு அமைதிகிட்டும். அதற்காகவே மக்கள் காத்திருக்கின்றார்கள்.

# ஆக்கிரமிப்புப் படையோடு அமெரிக்கா கைகோர்ப்பது தமிழர்களுக்கு ஏமாற்றம்

## பெண்கள் பண்பாட்டு மையம் அறிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.25

தாங்கள் வீடுகளில் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ விரும்புகின்ற தமிழ் மக்கள், தங்கள் நிலங்களை ஆக்கிரமத்து நிற்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் அமெரிக்கப்போர் வல்லுநர்கள் கைகோர்த்துச் செயற்படுவதைக் கண்டு பெரும் விசனமும் வேதனையும் அடைகின்றனர்.

பெண்கள் பண்பாட்டு மையம் விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க இராணுவ வல்லுநர்களின் ரகசிய விஜயங்கள் தொடர்பாகப் பெண்கள் பண்பாட்டு மையம் இந்த அறிக்கையை விடுத்திருக்கிறது.

பெண்கள் பண்பாட்டு மையத்தின் சார்பில் அதன் இணைப்பாளர் மனோகரன் கிருஷ்ணவேணி விடுத்திருக்கும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அமெரிக்கப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் யாழ். குடாநாட்டுக்கு இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு பாதுகாப்பு நிலை குறித்து ஆராய்ந்து சென்றுள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்செய்தி தற்போதைய யுத்தமுமற்ற சமாதானமுமற்ற வெற்றுச் சூழலில் தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு சாதகம் இல்லாமல் யுத்தத்தைத் திணிப்பதாக உள்ளனவெனத் தமிழ் மக்கள் சந்தேகம் அடைகின்றனர். வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கென அரசு 7000 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளமை; சமாதானப் பேச்சில் கவனத்தைக் குவிப்பதை விட்டு பதவிகளைப் பாதுகாக்கும் தங்கள் தனிப்பட்ட நலன்களை முதன்மைப்படுத்திச் செயற்படுதல்; தனிப்பட்ட நலன்களுக்காக அரசமைப்பை மாற்ற முயற்சித்தல், ஆளையாள் பழிவாங்கும் நடவடிக்கைகளில் பிரதான கட்சிகளின் மனம் ஈடுபடல்; ஜே.வி.பி. மக்களிடையே இன வெறியைத் தூண்டும் விதமாக செயற்படல்; சமாதனப் பேச்சில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேக்கு எதிரான உணர்வுகளை மக்கள் மத்தியில் கிளப்புதல்... அரசின் இத்தகைய செயற்பாடுகள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் இருந்தும் தீர்வுக்காக நேர்மையாக உழைப்பதில் இருந்தும் அவர்களைத் தூர விலகச் செய்கின்றன. தமிழ் மக்களுக்கு உரியதை வழங்க முடியாதவர்களாகத் தெற்கு விளங்குகிறது. இத்தகையதொரு நிலைமையில் யுத்தத்தைத் திணிப்பதுதான் அரசுக்குரிய இலகுவான மார்க்கமாக இருக்கக்கூடும் என்று தமிழ் மக்கள் சந்தேகமடைகின்றனர்.

யுத்தமேகம் சூழ்ந்திருக்கும் ஒரு சூழலில் அமெரிக்க இராணுவ வல்லுநர்கள் சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து நிற்பது (சேர்ந்து நிற்கும் படங்களை பத்திரிகைகளில் தமிழ் மக்கள் காண்கிறார்கள்) தமிழ் மக்களுக்கு வெறுப்பையும் விசனத்தையும் தருகிறது.

தமிழ் மக்கள் வேண்டுவதெல்லாம் தங்கள் தங்கள் வீடுகளில் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதையே. தங்கள் குடியிருப்பு நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்தபடி நிற்பதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. அத்தகைய ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் அமெரிக்க இராணுவ வல்லுநர்கள் கைகோர்த்து நிற்பதைப் பெண்கள் பண்பாட்டு மையம் கண்டிக்கிறது. இத்தகைய செயல்களைக் கைவிடுமாறு தமிழ் மக்களது வாழ்வுரிமையின் பேரால் அமெரிக்காவைக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# 14 இந்தியப் படகோட்டிகள் நீதிமன்றத்தினால் விடுதலை

யாழ்ப்பாணம்,டிசெ.25

இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 14 இந்திய மீன்பிடி படகோட்டிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

தமிழகம் இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்களான எ.செல்வமணி, கே.குமார், எம்.கண்ணன், ஜி.ராஜகோபால் வி.சந்திரபோஸ், பி. இராமலிங்கம், எஸ். அர்ச்சுனா, எஸ்.சக்திவேல், எஸ்.செல்வமணி, எஸ். ஜெயசீலன், பி.பாலமுருகன், ஏ.கோடிலிங்கம் ஏ.பாலகுமார், எஸ்.சுரேஸ்குமார் ஆகிய பதின்னான்கு பேருமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இந்த வருடம் டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி நெடுந்தீவு கடற் பிரதேசத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட பத்துப்பேரும்.

காங்கேசன்துறைக் கடற்பரப்பில்வைத்து ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட நான்குபேரும் இவர்களில் அடங்குவர்.

சட்டமா அதிபரின் பணிப்புக்கமைய ஊர்காவற்றுறை மற்றும் மல்லாகம் நீதிமன்றங்களினால் இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் நேற்றுமுன்தினம் மாலை காங்கேசன்துறை கடற்படைத் தளபதி லெப்டினட் லக்ஸ்சிறிலிடம் யாழ். சிறைச்சாலையில் வைத்து கையளித்தார். இவர்கள் அனைவரையும் நேற்று தமிழகக் கடற்படையினரிடம் கையளிப்பதற்குரிய ஏற்பாடுகளை இலங்கை கடற்படையினர் செய்திருந்தனர்.

(ஐ-7)

# தபால் ஊழியர்களின் வேலை நிறுத்தம்; அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை

## யாழ். அஞ்சலக வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

17 அம்சக் கோரிக்கையை முன்வைத்து நாடளாவிய ரீதியில் நாளை 26 ஆம் திகதி தபால் ஊழியர்கள் மேற்கொள்ளவுள்ள தொடர்ச்சியான வேலை நிறுத்தம் தொடர்பாக எதுவித அறிவித்தல்களும் யாழ். பிரதம அஞ்சல் அலுவலகத்துக்கு அகில இலங்கை தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தால் வழங்கப்படவில்லை.

-இவ்வாறு யாழ். பிரதம அஞ்சல் அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வேலை நிறுத்தம் தொடர்பான அறிவித்தல்கள் கிடைத்தால் நாமும் அவர்களுடன் இணைந்து தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை-

இந்தப் போராட்டம் தொடர்பாக அமைச்சின் செயலாளருக்குத் தாங்கள் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளதாக அகில இலங்கைத் தபால் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கைத் தபால் தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் சங்கத்தில் ஐயாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். எனவே இவர்களின் வேலை நிறுத்தத்தால் தபால் தொலைத் தொடர்புகள் முற்றாக ஸ்தம்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(8-7)

# வல்லைப் பாலம் இன்று மூடப்படமாட்டாது

யாழ்ப்பாணம், டிசெ.25

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வல்லைப் பாலத்தினூடான போக்குவரத்துகள் இன்று வழமைபோல முழு நேரமும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக இன்று இரவு 8.00 மணிமுதல் நாளை அதிகாலை 5.00 மணிவரை பாலத்தினூடான போக்குவரத்துகள் தடைசெய்யப்பட்டிருக்கும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று திருத்த வேலைகள் இடம்பெறமாட்டாது என்றும்-

எனவே பாலத்தின் ஊடான போக்குவரத்து வழமைபோல இடம்பெறும் என்றும்-

பாலம் புனரமைப்புக்குப் பொறுப்பான திட்டப் பொறியியலாளர் எம்.தில்லைநாதன் அறிவித்திருக்கிறார்.

(ஐ)

### உதயவாக்கு

மனிதநேயம் மிக்க
மனிதர்களே உலகில்
போற்றப்படுவர்-

### நாளை

*மார்கழி 11*
*ஞாயிற்றுக்கிழமை*
*(26.12.2004)*
*திதி: பூரணை*
*முன்னிரவு. 08.44*
*நட்சத்திரம் : மிருகசீரிடம்*
*மு.ப.11.53*
*சுபநேரம்: 09.27 - 10.57*
*ராகுகாலம்: 04.57- 06.27*
*(பழையநேரப்படி)*

# திருவாதிரை உற்சவ தேர்த்திருவிழா

காரைநகர்,டிசெ.25

ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோயிலின் திருவாதிரை உற்சவ தேர்த்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறவுள்ளது.

நாளை அதிகாலை முதல் சிவன், ஐயனார் ஆகிய மூலமூர்த்திகளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து முற்பகல் 10.00மணிக்கு பஞ்சரத பவனி இடம்பெறும்.

பின்னிரவு 2.00மணி தொடக்கம் ஆருத்திரா அபிஷேகமும், மறுநாள் காலை 6.00மணிக்கு ஆருத்திரா தரிசனமும் இடம்பெற்று பிற்பகல் 3.00மணிக்கு திருவூடல் உற்சவமும் மாலை 5.00மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

இந்த உற்வசத்தில் இசை நாதமழை பொழிவதற்காகத் தமிழகத்தில் இருந்து எட்டுப்பேர் அடங்கிய தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் காரைநகருக்கு வருகைதந்துள்ளனர். இவர்களுடன் இணைந்து ஈழத்தின் பிரபல தவில், நாதஸ்வரக் கலைஞர்களும் இசை நாதமழை பொழிய உள்ளனர்.

இந்த உற்சவத்திற்கு வருகை தரும் அடியார்களின் நலன் கருதி வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர் சாலையும், சிற்றூர்திகள் சேவைகள் சங்கமும் யாழ்நகரில் இருந்து ஆயைம்வரை நேரடி பஸ்சேவையை நடத்திவருகின்றன.

கடந்த ஆண்டு சுமார் 50 ஆயிரம் மக்கள் இவ் உற்சவத்திற்கு வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(8-73)

## தேவை

Off Set மெசின் இயக்குநர்கள் அல்லது பழகுபவர்கள் தேவை.

**திருக்கணித பதிப்பகம்,**
114, டச்சு வீதி,
சாவகச்சேரி.
(40065)


# பாடசாலை உபகரணங்கள் வழங்குவதற்கு ஏற்பாடுகள்

பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் கல்வி மற்றும் கழக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளான மாணவர்களுக்கு இலவச பாடசாலை உபகரணங்கள், புலமைப் பரிசில் கொடுப்பவை ஆகியவற்றை எதிர்வரும் ஜனவரி மாத முற்பகுதியில் வழங்குவது என்று தீர்மானித்துள்ளது.

சங்கத் தலைவர் அ.பெனடிற் தலைமையில அண்மையில் நடைபெற்ற சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொது முகாமையாளர் சி.குணரட்ணம் தெரிவித்தார்.

இதேவேளை, விபத்தில் சிக்கி தொழில் இழந்தவர்கள், குடும்பத் தலைவரை இழந்த விதவைப் பெண்கள் ஆகியோருக்கு உடுபுடைவைகளும் வழங்கப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)


## தாதியர் தேவை

நெல்லியடி, பருத்தித்துறையில் இயங்கும் MBBS வைத்தியர்களின் வைத்தியர் சேவை மற்றும் ஆய்வு கூட நிலையங்களிற்கு பயிற்றப்பட்ட தாதியர் OR பயில விரும்பும் பெண்கள் தேவை.
சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
நாளை (26.12.2004) ஞாயிறு காலை 9.00 மணி.
02.01.2005 ஞாயிறு காலை 9.00 மணி
தொடர்பு:- சிவராம் மெடிசின்ஸ் & லாப் சேர்விஸ்
மத்திய மகா வித்தியாலய வீதி,
நெல்லியடி
(40028)


### கோண்டாவில் ஐயப்பன் ஆலயத்தில் நாளை மகரஜோதி

யாழ்ப்பாணம்,டிசெ.25

கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்பன் ஆலயத்தின் மகரஜோதி மண்டலப் பூர்த்திவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இன்று சனிக்கிழமை மாலை நெய்த் தேங்காய் நிரப்புதல் நடைபெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் சபரீச ஐயப்ப ஆலய சுவாமிமார்கள் பஜனை செய்து, அங்குவைதது இருமுடிகட்டி கே.கே.எஸ்.வீதியால் பாதயாத்திரையாக சுன்னாகம் ஐயனார் ஆலயத்தைச் சென்றடைவர். பின்னர் அங்கு விசேட பஜனை இடம்பெறும.

அதனைத் தொடர்ந்து பாதயாத்திரையாகக் கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தை வந்தடையும் இவர்கள் அங்கு பதினெட்டுப்படி ஏறி, நெய் அபிஷேகததில் பங்குகொள்வர்.

தொடர்ந்து அன்றைய தினம் இரவு 7 மணிக்கு விசேட படிப் பூசை மற்றும் பஜனை என்பன நடைபெறும். (எ)

### திருவாசக விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்மாவட்ட அலுவலகம் திருவாசகவிழாவை நடத்திவருகிறது.

நாளை பிற்பகல் 5 மணிக்கு மட்டுவில் மாகாளி அம்பாள் தேவகோட்டத்தில் நடைபெறவுள்ள திருவாசக விழாவில் 'கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே' என்னும் பொருளில் வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் கந்த சத்தியதாசன் சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தொடர்ந்து மட்டுவில் மாகாளி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் திருவாசகப் பண்ணிசை இடம்பெறும். (எ-204-203)


Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 7550458 முதல் 7562951 வரை
சீட்டிழுப்பு இல. 96 திகதி 23-12-2004

வெற்றி எண்கள் **2 3 9 3 7 6** சுப்பர் எண் **08**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,49,10,150/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,49,10,150/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 5,000/- | 5,55,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,097 | 500/- | 5,48,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,940 | 50/- | 5,47,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,08,426 | 10/- | 10,84,260/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 113 | 1,000/- | 1,13,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,097 | 100/- | 1,09,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,834 | 20/- | 2,16,680/- |
| மொத்தம் | 1,32,646 | | 53,66,740/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,66,740/-

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,52,14,375/-**

தொடர் இல. 6599031 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 டிசம்பர் 27 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான ... வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

7556904-3-70
7558286-8-06
7555373-5-13
7559855-0-80
7555566-4-43
7561685-9-28
7552871-1-30
7558933-8-27

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செயிற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இனிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்



## யாழ் வோச் வேக்ஸ்

சகல மணிக்கூடுகளின்
விற்பனையாளரும் திருத்துநரும்.

இல.55, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 0777 733066

## யாழினி வீடியோ சென்ரர்

இல.259, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5816
பழைய புதிய CDக்கள்.
வீடியோ நாடாக்கள் வாடகை சேவை.
(40071)(14-13)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 27 - 03 - 1924
உதிர்வு 06 - 01 - 2004

அமரர்
**வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்**

(இளைப்பாறிய கட்டடப் பொறியியலாளர், கல்வித் திணைக்களம்)

திதி : பூர்வபட்ச சதுர்த்தசி


அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய்
வாழ்ந்தீர்கள் ஐயா!
எத்தனை ஆண்டுகள் சென்றிடினும்
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சங்களை விட்டு அகலாது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
தில்லைக் கூத்தனைப் பிரார்த்திக்கிறோம்.

லட்சுமி பதி
நடுத்தெரு, காரைநகர்.

மனைவி, சகோதரிகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(40075)(12-13-15)

## ஓராம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 1929 - 03 - 18
மறைவு 2004 - 01 - 05

**அமரர் மாணிக்கம் கிருஷ்ணன்**

திதி சதுர்த்தசி (25-12-2004)

அன்பால் அரவணைத்து
ஆதரவால் எமைக் காத்து
கல்வி, தொழிலில் சிறக்க வைத்து
இல்லறத்தை நல்லறமாக
எம்மை ஏங்கவிடாமல்
ஐக்கியமாய் வாழவைத்து
என்றும் எம் உயிரில் கலந்திருக்கும்
எமது பாசமிகு தந்தையே
ஓராண்டென்ன ஓராயிரம்
ஆண்டானாலும் அகலாது உங்கள் நினைவு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

19, கோண்டலடி லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## நினைவலைகளில் 31ஆம் நாள்



மலர்வு 1929.05.15 உதிர்வு 2004.11.25

**அமரர் இராசையா விஜயலெட்சுமி**

நீங்கள் இல்லாத இடைவெளி
நிரப்ப முடியாத பெருவெளி
துக்கக் கதவுகளைத் திறந்துவிட்டு
தூக்கக் கதவுகளைத் தாழிட்டு
நிரந்தரமாய் தூங்கிவிட்டீர்கள்
உங்கள் இதயத்தின் நேசத்தை
எங்களால் என்றும் மறக்க முடியாது.
உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை வேண்டிநிற்கும்:

31/5, புதுவீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சூரன் பண்டாரி

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சூரன் பண்டாரி நேற்று (24.12.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூரன் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும் கிருஸ்ணபிள்ளை (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான கந்தையா, மாணிக்கம், தங்கம்மா, சின்னமணி, சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2004) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி, வல்வை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமக்கள், பெறாமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(40070)(42-12-13-15)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு 'யுனிசெவ்' நிறுவனம் பொருளுதவி

கிளிநொச்சி,டிசெ.25

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் நவம்பர் மாதம் தொடங்கி, இம்மாதம் வரை பெய்த கடும் மழையினால் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு யுனிசெவ் நிறுவனம் உணவில்லாத பொருள்களை வழங்கியுள்ளது.

இவ்விரு மாவட்ட அரச அதிபர்களிடமிருந்து பெறப்பட்ட புள்ளி விவரங்களின்படி 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளப் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பாதிப்புக்குள்ளான 2 ஆயிரத்து 166 குடும்பங்களுக்கு, உணவில்லாத நிவாரணப் பொருள்கள் அரசசார்பற்ற இணையங்களின் சமாசம் ஊடாகவும், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட 2ஆயிரத்து 460 குடும்பங்களுக்கு உணவில்லா பொருள்கள் உதவி அரச அதிபர் ஊடாகவும் வழங்கப்பட்டன.

இரு மாவட்டங்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட உணவில்லாத பொருள்களின் விவரம் வருமாறு:-

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 3ஆயிரத்து 180 பாய்கள், ஆயிரத்து 880,30 லீற்றர் நீர்கொளளும் பிளாஸ்ரிக் வாளிகள், ஆயிரத்து 19 சமையல் பாத்திரங்கள், 6 ஆயிரத்து 500 சவர்க்காரங்கள், 05 நீர்த்தாங்கிகள் என்பனவும்-

கிளிநொச்சி மாவட்டத்திற்கு 308, 30 லீற்றர் நீர் கொள்ளக்கூடிய பிளாஸ்ரிக் வாளிகள், 500 12 லீற்றர் நீர் கொள்ளக்கூடிய பிளாஸ்ரிக் வாளிகள், 5 ஆயிரத்து 851 சவர்க்காரங்கள், 733 சமையற பாத்திரங்கள், 12 நீர்த்தாங்கிகள், 02 ரோல் பிளாஸ்ரிக் சீற், 3ஆயிரம் பாய்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

இப்பொருள்கள் கிராம அலுவலர் பிரதேசத்திற்குரிய உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்களின் மேற்பார்வையில் 'யுனிசெவ்' நிறுவனத்தின் கண்காணிப்பில் வழங்கப்பட்டன. (8-2004



## 12 ஆம்கட்டை வீதி கடும் சேதம்

வேரவில்,டிசெ.25

வேரவில் 12 ஆம் கட்டைவீதி சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாது பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

12 ஆம் கட்டை வீதியில் உள்ள இரு கடவைகளில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. அத்துடன், வீதியும் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் போக்குவரத்து செய்யும் பேருந்துகள் யாவும் வேரவில் - கிரஞ்சி - பல்லவராயன் கட்டு ஊடாக மன்னார் வீதிச் சந்திக்குச் செல்கின்றன.

இந்த வீதியூடாகப் போக்குவரத்து செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். இதனால் உரியவர்கள் இரு கடவைகளிலும் தேங்கி நிற்கும் வெள்ளத்தை வெளியேற்றக் கூடியவாறு கால்வாய்களை அமைத்துத் தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (8-323-404-204)




## அடிப்படை வசதிகள் இல்லாது அவதியுறும் கௌதாரிமுனை மக்கள்

பூநகரி,டிசெ.25

பூநகரி, கௌதாரிமுனைப் பிரதேசத்தில் அடிப்படை வசதிகள் போதியளவு இல்லாமையால் அப்பகுதி மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

பூநகரியிலிருந்து கௌதாரிமுனை செல்லும் வீதி மிகவும் மோசமான நிலையிலுள்ளதால் போக்குவரத்தில் சிரமங்கள ஏற்படுவதோடு, அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பெறுவதிலும் சிரமப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (8-202-403)

# வெள்ளத்தினால் 234 குடும்பங்கள் நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளன

கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 234 குடும்பங்கள் அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளன.

அவர்களின் விவரம் வருமாறு:-

பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த 49 குடும்பங்களும், முரசுமோட்டை ஐயன் கோயிலடியைச் சேர்ந்த 21 குடும்பங்களும், கல்மடு நகரைச் சேர்ந்த 65 குடும்பங்களும், புளியம்பொக்கணை நாகேந்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த 99 குடும்பங்களுமே கண்டாவளைப் பிரதேசத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளன.

இவர்களுக்கான சமைத்த உணவு வகைகளினை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனம் வழங்கிவருகின்றது.

மேலும் கண்டாவளைப் பிரதேச செயலரின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி செயலகத்தினரால் உணவு அல்லாத பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தினரால் மருநது வகைகளும் வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களை வைத்தியர் எஸ்.குணரட்ணம் நேரில் சென்று பார்வையிட்டு மருந்துகளை வழங்கி வருகின்றமையும் குறிபிடத்தக்கது.(8-203-352)

## செஞ்சிலுவைச் சங்கம் உதவி

பூநகரி,டிசெ.25

மழைவெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளவர்களைக் கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச்சங்கத்தினர் பார்வையிட்டுவருவதுடன் அவர்களுக்குரிய நிவாரணப் பொருள்களையும் வழங்கிவருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்ட செஞ்சிலுவைச் சங்க செயலாளர் கணேஸ், ஆளுநர் சபை உறுப்பினர்கள் பொ.தங்கராசா, த.இராசரத்தினம், இரா.செல்வராசா, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் இவர்களைச்சென்று பார்வையிட்டு உதவிகள் வழங்கிவருகின்றனர். (8-203-291)

# பளைப் பகுதி மக்களுக்கு மின்சாரம் கிடைக்கவில்லை

பரந்தன்,டிசெ.25

வீடுகளுக்கு மின்சாரம் தருவதாக பிரதேச சபை அறிவித்துச் சில மாதங்களாகியும் இன்னும் மின்சாரம் கிடைக்காதது ஏமாற்றத்தைத் தருவதாகப் பளைப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுன்னாகத்திலிருந்து ஏ-9 வீதியூடாக பளை வரை மின்சாரம் கிடைத்ததும் வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்று பளை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினர் அறிவித்ததையடுத்து பல வீடுகளில் மின் இணைப்பைப் பெறுவதற்கான வேலைகளைச் செய்து முடித்துள்ளார்.

ஆயினும் பளைப் பகுதிக்கு மின்சாரம் கிடைத்துச் சில மாதங்களாகியும் மின்சார விநியோகம் நடைபெறவில்லையென மக்கள் ஏமாற்றம் தெரிவிக்கின்றனர். (8-202-352)

# அன்னபுரம் கிராமத்தை வளமாக்க செயற்றிட்டம்

பூநகரி,டிசெ.25

பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தினர், பிரதேச செயலரின் ஒத்துழைப்புடன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஊடாக இசற்.ஓ.ஏ நிறுவனத்தின் நிதியுதவியுடன் முழங்காவில் அன்னபுரம் கிராமத்தை வளமாக்கும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளனர்.

இத்திட்டத்தின் ஒரு கட்டமாக கடந்த 17 ஆம் திகதி இங்குள்ள குடும்பங்களுக்கு 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவில்லாத பொருள்கள் வழங்கப்பட்டன.

அத்துடன், இக்கிராம வாழ் மக்களுக்கு அரை ஏக்கர் காணிகள் வீதம் பிரதேச செயலரின் ஒத்துழைப்புடன் காணி உத்தியோகத்தரால் காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இக் காணிகளில் வீடு அமைக்கும் பணிக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த 27 ஆம் திகதி நடைபெற்றது.

இந்நிகழ்வில் பூநகரி பிரதேச செயலர், போராளி பாலன், பூநகரி முழங்காவில் அபிவிருத்தி நிறுவனத்தின் இணைப்பாளர், பணியாளர்கள் அகியோர் கலந்துகொண்டனர். (8-291-204)

# வீடுகளை வேய்வதற்கு கிடுகுகள் கிடைக்கவில்லை

பரந்தன்,டிசெ.25

கோரக்கன் கட்டு கிராமத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு வீடுகள் வேய்வதற்கென உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனம் 'ஒக்ஸ்பாம்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் கிடுகுகளை வழங்குவதாகக் கூறியிருந்தும் இதுவரை வழங்கவில்லை என்றும், ஒரு சிலருக்கு வீட்டிற்கு போட்டு வேயமுடியாத கிடுகுகளை வழங்கியுள்ளதாகவும் கோரக்கன் கட்டு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின்போது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

மழைகாலத்திற்கு முன்னரே வேயவேண்டிய வீடுகள் மழையால் நனைந்து பாதிக்கப்பட்டும் அவர்களுக்கான கிடுகுகள் வழங்கப்படவில்லை இருந்தும் 11ஆம் மாதப்பிற்பகுதியில் 26 பயனாளிகளுக்கு மட்டும் கிடுகுகள் வழங்கியுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.(8-03-352)



இசற்.ஓ.ஏ நிறுவன நிதியுதவியுடன் பூநகரி - முழங்காவில் அபிவிருத்தி நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்பவை இணைந்து இடம்பெயர்ந்து முழங்காவில் பண்டிதர் குடியிருப்பிலுள்ள 109 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கவுள்ளன.

இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலர் அடிக்கல் நாட்டுவதைப் படத்தில் காணலாம். *(படம் - வேரவில் செய்தியாளர்)*

# மாவீரர் வெற்றிக்கிண்ணத்தை லக்கிஸ்ரார் அணி சுவீகரித்தது

வட்டக்கச்சி,டிசெ.25

மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்காக களிநொச்சி மாவட்ட அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

கடந்த 22 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற இறிதிப்போட்டியில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி 4:2 என்ற கோல் கணக்கில் நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணியை வென்று சம்பியனானது.

இதன்மூலம், தமிழீழத்தில் எட்டு மாவட்டங்களிலும் இருந்து தெரிவுசெய்யப்படும் அணிகளுக்கிடையில் கேணல் கிட்டு நினைவாக நடத்தப்படவுள்ள உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அணி என்ற அந்தஸ்தினையும் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி பெற்றுள்ளது.

இப்போட்டியின் சிறந்த வீரராக லக்கிஸ்ரார் அணியைச் சேர்ந்த சி.சுதாகரனும், சிறந்த கோல் காப்பாளராக அந்த அணியைச் சேர்ந்த கஜரூபனும் தெரிவுசெய்யப்பட்டனர். (8-405)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், தொட்டிகள் அதற்கான அனைத்துப் பொருள்கள், குருவிகள், கூடுகள், பூங்கன்றுகள், செவ்வரத்தை, குறோட்டன், றோஸ, சாடிகள் என்பன விற்பனைக்குண்டு. 40/11, சீனியர் லேன், வண்ணார்பண்ணை (துட்டாதெருச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.

(39998)

நல்ல நிலையிலுள்ள 14 சிறி XXX தொடரிலக்கமுடைய ரொயாட்டா கரினா கார் (கிறீம்கலர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 222 5623. (40058)

## வீடு, காணி விற்பனைக்கு

பாடசாலைகள், ஆலயங்கள், குருத்துவக் கல்லூரி அமைந்துள்ள சூழலில் சகல வசதி களுடனும் கூடிய வீடும் 7 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணிக்குப் பின்னரும், கிழமை நாள்களில் மாலை 4.00 மணிக்குப் பின்னரும் தொடர்புகொள்ளலாம். தரகர் தேவையில்லை. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். 22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப் பாணம்.

(40021)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக் குண்டு. நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள லாம். புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தஞ்செய்து கொடுக்கப்படும் தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற் றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (40010)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

நல்ல காவலுக்குரிய Great Dane நாய்க் குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.

(40019)

2 மாதம் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டி கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.கமலநாதன், கலையரசு வீதி, நவாலி தெற்கு, மானிப்பாய். (40025)

பொம்மேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக் குண்டு. தொடர்புகளுக்கு: "தரன் பற்றி சார்ச்", ஆனைக்கோட்டை, நவாலி றோட்.

(40012)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான, இருமுறை தடுப்பு மருந்தூட்டப் பட்ட Original Prima Broiler, பேட்டுக்குஞ்சு கள் 03.01.2005 திங்கட்கிழமை விநியோகிக்கப் படும். பருத்தித்துறை - நெல்லியடிக்கிளை களிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுன்னாகம், ஐங்கரன் களஞ் சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச் சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (40020)

## காணவில்லை

சிவப்புநிறமுடைய கன்னிப்பசுவை ஒரு கிழமையாகக் காணவில்லை. இதைக் கண்ட வர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு தொடர்புகொள்ள வும். அல்பிறேட், 25, பாக்றோட், றெக்கிளமேசன, யாழ்ப்பாணம். சன்மானம் வழங்கப்படும்.

(40056)

## Organ/Violin notes

கேள்விஞானம் (200/-), இசைக்குறிப்புகள் (ஒருபாகம் 50/-), மேற்கத்தேய இசை பற்றித் தெரிந்துகொள்வோம் (100/-), Key board exercise (50/-) ஆகிய புத்தகங்கள் சிறப்புத் தள்ளுபடியில் விற்பனையாகின்றன.

இச்சலுகை 25.12.2004 முதல் 02.01.2005 மட்டுமே

**கரலீனா இசை மன்றம்**
75, கோயில் வீதி, நல்லூர்.
T.P.: 0777031293
(நல்லூர் ஆலயத்தில் இருந்து 500M தெற்கே)
(42-19-14) (39896)

## விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் மற்றீரியல், சுடிதார் முகூர்த்தப் புடைவைகள், புடைவை வகைகள், லேடீஸ் ஸ்கேட், ரீசேட், கவுண் ஆகியவை நியாயமான விலையில் விற்பனைக்குண்டு.

ஆடைகள் உடனுக்குடன் தைத்துக்கொடுக்கப்படும்.

**பபு டெக்ஸ் & கொமினிக்கேஷன்,**
இல.30, வளாக வீதி,
திருநெல்வேலி.

## மானியவிலையில் தென்னங்கன்றுகள்

தென்மராட்சி,டிசெ.25

மீசாலை புத்தூர் சந் தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத் தில் மானிய விலையில தென்னங்கன்றுகள் விற்பனை செய்யப் பட்டு வருகின்றன.

நிலைய நாற்று மேடைகளில் உற் பத்தி செய்யப்பட்ட நல்ல இன தென்னங் கன்றுகளே விற்பனை செய்யப்பட்டுவருகின றன.

வீட்டுத் தோட்ட மீள் நடுகைக்கு தென்னங் கன்று முன்னுரிமை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

(8-117)

## கமநலசேவை உப அலுவலகம் திறப்புவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

நல்லூர் கமநல சேவைகள் நிலையத் தின் அரியாலை உப அலுவலகத் திறப்புவிழா வும், பொதுக்கூட்டமும இன்று சனிக்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு அரியாலை யில் நடைபெறவுள் ளன.

அரியாலை விவசாய சம்மேளனத் தலை வர் எஸ்.ரி.பத்மநாதன தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ் வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்ம நாதன் பிரதம விருந் தினராகவும், யாழ்.பல கலைக்கழக உபவேந் தர் பேராசிரியர் சு. மோகனதாஸ், யாழ். மாவட்ட கமநல அபி வருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், நல்லூர் பிரதேசசெயலர் திருமதி சு.தெய்வேந்திரம், யாழ்ப்பாணம் 'நிகொட்' பிரதித் திட்டப் பணிப் பாளர் கே.நவரட்ண ராஜா, யாழ்.மாவட்ட செயலக பிரதம கணக் காளர் சு.சண்முகரத்து னம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

(8-204)

## தாச்சிச் சங்கத்தின் பொதுக்கூட்டம்

கைதடி,டிசெ.25

யாழ்மாவட்ட தாச சிச் சங்கத்தின் வரு டாந்தப் பொதுக்கூட்ட மும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை 26ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். மாவட்டத் தாச்சிச் சங் கத் தலைவர் செ.சண முகலிங்கம் தலைமை யில் கோண்டாவில் நாராயணா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தாச்சிச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் யாழ். மாவட்டத்தி லுள்ள அனைத்து விளையாட்டுக் கழகங் களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

அன்றையதினம் இக்கூட்டத்தில் தமி ழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்த முக்கிய பிரமுகர் களும் கலந்துகொள்ள வுள்ளனர்.

(8-75)

## ஆறாம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**அமரர் சச்சிதானந்தசிவம் ஞானசீலன் - B.Com.**

மலர்வு
29.04.1974

உதிர்வு
29.06.2004

திதி: 25.12.2004

தந்தையாய் மக்களென ஒன்றாய் நாங்கள்
சாற்றுவகை குடும்பமாய் வாழ்ந்தோம்
எம்மில்
மைந்தர்கள் நால்வருடன் ஒருத்தி மகளாய்
வையத்தில் எழுவர்நாம் களிப்பில்
வாழ்ந்தோம்
வந்துற்ற காலத்தில் மைந்தர் தம்மில்
மடிந்தனனே மகனொருவன்
என்றன்றழுதோம்
அந்தோ இன்றவருள்ளும் உன்தன் உயிரை
அந்தகன்தான் ஏன் ஐயோ எடுத்துச்
சென்றான்.

**இன்று (25.12.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

853, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி.

- குடும்பத்தினர்.

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்.

**2007 A/L**

**கணித உயிரியல் பிரிவு**

*எமது வழமையான ஆசிரியர் குழு*

ஆரம்பம்: 27.12.2004

(40031)(42-12-19-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி அனற் மிராண்டா அவர்களின் அன்புச் சகோதரர்

**செல்வின் நிக்ஷன் மிராண்டா**

அவர்களின் (22.12.2004) திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தி யடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்
யா/சென்ஜேம்ஸ் (ஆண்கள்) பாடசாலை.

## முதலாம் ஆண்டு நிறைவில்...



**அமரர் அந்தோனிப்பிள்ளை அமிர்தநாதன்**

தோற்றம்
27.03.1932

மறைவு
25.12.2003

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோ.13.25)

டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம். (40049)(42-19-14)

- குடும்பத்தினர்.

## வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கம்

வடமாநில சுருட்டுத் தயாரிப்பாளர் சங்கத்தில் 19.12.2004 இல் நடைபெற்ற கூட்டத்தில் 1,000 சுருட்டுக்கள் சுருட்டுவதற்கு 01.01.2005 தொடக்கம் 500 ரூபா சம்பளம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**குறிப்பு:-**

**சுருட்டுக்கூலி உயர்வால் 01.01.2005 தொடக்கம் சகல சுருட்டுக்களின் விலைகளும் அதிகரிக்கப் படும் என்பதனை அறியத்தருகின்றோம்.**

வீ.குணரட்ணம்
செயலாளர்.

S.S.சச்சிதானந்தசிவம்
தலைவர்.

உப்புமடம் சந்தி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(40050)(42-19)

## மரண அறிவித்தல்

### மாணிக்கம் முருகானந்தன்

புங்குடுதீவு, 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட முருகானந்தன் (22.12.2004) புதன் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்தியலிங்கம் - தெய் வானையின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (கீதா) அவர்களின் அன்புக் கணவரும் கோமளாம்பிகை (சுவிஸ்), செந்தாமரைச்செல்வி (கனடா), சுரேஸ்குமார் (சுவிஸ்), ரேணுகா (கொழும்பு) ஆகியோ ரின் அன்புத் தந்தையும் நாகரெட்ணம், பரமேஸ்வரன், சத்தியரூபி, அன்ரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பரமேஸ்வரி (கொழும்பு), வயிரவநாதன் (பரிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ் சென்றவர்களான விஜயரெட்ணம், நடராசா, தருமலிங்கம் மற்றும் இலட்சுமி நல்லதங்கம், சிவபாக்கியம், உமாகாந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை (26.12.2004) ஞாயிற றுக்கிழமை காலை 10மணிக்கு பொறளை ஜெயவர்த்தன மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு மாலை 4 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

குணசிங்கபுரம்
CL 3.4, T.P. 451748 (40054)(42)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

# திருவாவடுதுறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தொன்றுதொட்டு நீடிக்கும் தொடர்பு

வடக்கே தமிழகத்திற் காணப்படும் பூர்வீக ஆலயங்களில் ஒன்று திருவாவடுதுறை ஆலயம். திருவாவடுதுறை ஆலயத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் பாலிக்கும் இறைவனின் திருநாமம் மாசிலாமணி.

அருளாளர்களான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் மூவருமே இத்தலத்தின் மீது தேவாரங்களைப் பாடியுள்ளார்கள்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாவடுதுறைப் பெருமான் மீது பாடிய தேவாரப் பதிகத்தில் ஒன்பதாம் பாடலில் -

*"வானநாடனே வழித்துணை மருந்தே*
*மாசிலா மணியே மறைப்பொருளே"*

என்று உள்ளமுருகிக் குறிப்பிடுகின்றார். திருவாவடுதுறையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாசிலாமணிப்பெருமான் மீது மூவரின் தமிழ் ஒருசேரச் செறிந்திருப்பது அற்புதத்திலும் அற்புதமாகும்.

இற்றைக்கு எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தார் என்று கருதப்படுகின்றவராகிய தெய்வத்திருமூலநாயனார் திருவாவடுதுறையிலேயே தங்கியிருந்து ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களைப் பாடியருளினார் என்பது வரலாறு.

இத்துணைச் சிறப்புவாய்ந்த திருவாவடுதுறையிலே சைவத்தமிழ் வளர்ச்சியின்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டதே திருவாவடுதுறை ஆதீனம்.

இற்றைக்கு அறுநூறு வருடங்களுக்கு முன் (14 ஆம் நூற்றாண்டில்) ஸ்தாபிக்கப்பெற்ற திருவாவடுதுறை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வர் அருள்திரு.நமசிவாயமூர்த்திகளாவர். திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோயில்கள் இருபதாகும்.

பழைமையும் பெருமையும் வாய்ந்த திருவாவடுதுறை ஆதீனத்துக்கும், யாழ்ப்பாணத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. இது பழைய சம்பந்தமாகும். இந்தப் பழைய சம்பந்தத்துக்கு அடிநாதமாக அமைந்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களேயாவர்.

### ஆறுமுகநாவலர்

1822 இல் பிறந்தவர் நாவலர் பெருமான். அவர்கள் பதினான்கு ஆண்டுகள் கிறிஸ்தவச் சூழலிலே வாழ்ந்தவர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் (அப்பொழுது பேர்சிவல் பாடசாலை) ஏழுவருடம் மாணவராயும் ஏழு வருடம் ஆசிரியராயும் இருந்தவர்.

சைவப்பிள்ளைகள் சைவப் பாடசாலையிலேயே கற்கவேண்டும் என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தார். 1848இல் வண்ணார்பண்ணையில் சைவப்பாடசாலை ஒன்றை நிறுவினார். அப்பாடசாலைக்குச் சைவப்பிரகாச வித்தியாசாலை என்று பெயரும் சூட்டினார். பாடசாலையிற் படிக்கும் குழந்தைகளுக்கு அப்பொழுது ஏற்ற நூல்கள் அதிகமாக இருக்கவில்லையே என்று சிந்தித்தார். அதனாலே அச்சுக்கூடம் ஒன்றை வாங்கி நூல்களை அச்சிட விரும்பினார். இந்த நோக்கத்தின் அடிப்படையில் இந்தியா சென்றார். வேதாரணியம் மார்க்கமாகச் சென்ற இவர், திருவாவடுதுறையையும் எட்டிப்



பார்த்தார். திருவாவடுதுறையில் அப்பொழுது பதினைந்தாவது குருமகா சந்நிதானமாக அருள திரு. அம்பலவாண தேசிகர் அவர்கள் வீற்றிருந்தார்கள்.

நல்லூர் ஆறுமுகத்தின் கல்விச் சிறப்பை முன்னமே கேள்வியுற்றிருந்த உபய சந்நிதானங்கள் பிரசங்கிக்கும்படி ஆறுமுகத்தை வேண்டினர். பதி, பசு, பாசம் என்கின்ற முப்பொருள் உண்மை பற்றி அழகுசொட்ட ஆறுமுகம் பிரசங்கித்தார். ஆறுமுகத்தின் பிரசங்கத்தை நன்கு செவி மடுத்தவர்களான உபய சந்நிதானம் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் ஆறுமுகத்தின் வாக்கு வன்மையை மிகவும் பாராட்டி "நாவலர்" என்ற பட்டத்தினை அளித்துக் கௌரவித்தனர். அச்சுக்கூடம் வாங்கச் சென்றவரான நல்லூர் ஆறுமுகம் திருவாவடுதுறையில் ஆறுமுக நாவலர் ஆனார். அப்பொழுது நாவலருக்கு வயது 27. பின்னரும் திருவாவடுதுறை ஆதீன அழைப்பையேற்று அங்கு சென்றிருக்கின்றார் நாவலர் பெருமான் அவர்கள். திருவாவடுதுறை ஆதீனம் நாவலரை நன்கு கௌரவித்தது.

சிதம்பரம் மேனிலைப்பள்ளியில் வருடா வருடம் நடைபெறும் நாவலர் குருபூசை விழாவுக்குத் திருவாவடுதுறை ஆதீனம் இன்னும் பேராதரவு நல்கி வருகின்றது. திருவாவடுதுறை ஆதீனத்தினால் கௌரவிக்கப் பெற்ற முதலாவது இலங்கைத் தமிழர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்தான் என்பது விசேடமாகக் குறிப்பிடத்தக்கது.

### சபாபதி நாவலர்

யாழ்ப்பாணத்து வடகோவையில் 1844இல் பிறந்தவர் சபாபதி நாவலர் அவர்கள். இவர் திருவாவடுதுறை ஆதீனத்தை அடைந்து 12 வருடகாலம் ஞானநூல்களைக் கற்றார். திருவாவடுதுறையில் ஆதீன மகா சந்நிதானமாக விளங்கிய சுப்பிரமணிய தேசிக சுவாமிகளிடம் அருள் உபதேசம் பெற்றார். இவரது கல்வித் திறமையை வியந்து சுப்பிரமணிய யோகீந்திரர், நாவலர் என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கிச் சிறப்புச் செய்தார். திருவாவடுதுறை ஆதீன வித்துவானாகவும் நியமிக்கப்பட்டார்.

சபாபதி நாவலர் அவர்களது இறுதிக் காலம் சிதம்பரத்தில் அமைந்தது. சித்தாந்த வித்தியாநுபாலன அச்சியந்திர சாலையை நிறுவி, பத்திரிகைகள், நூல்களை, வெளியிட்டார். 1903இல் சிவபதம் அடைந்தார். அப்பொழுது அவருக்கு வயது 58

சபாபதி நாவலர் அவர்களின் உத்தரக் கிரியைகள் அங்கு நடைபெற்ற சமயத்தில், திருவாவடுதுறை ஆதீனத்தார் அனுப்பிவைத்த பட்டுப் பீதாம்பரம், மாலை, பரிவட்டம் என்பன அவருக்குச் சாத்தப்பட்டன.

### வித்துவான் சித்.கைலாசபிள்ளை

யாழ்ப்பாணத்து நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். திருவாவடுதுறை ஆதீனத்தின்

ஆசிரியமணி
**சு.பஞ்சாட்சரம்**

16ஆவது குருமகா சந்நிதானம் அருள் திரு. சுப்பிரமணிய தேசிகர் அவர்கள். நல்லூர் சித. கைலாசபிள்ளை அவர்களுக்கு வித்துவான் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

### சுவாமிநாத பண்டிதர்

யாழ்ப்பாணத்து வண்ணை நகர் சுவாமிநாத பண்டிதர் அவர்களின் தேவாரத் தலமுறை நூல் உள்ளிட்ட நூல்கள் திருவாவடுதுறை ஆதீனத்தின் 17ஆவது குருமகா சந்நிதானம் அருள்திரு. அம்பலவாணதேசிகர் அவர்கள் காலத்திற் பதிப்பிக்கப்பட்டன.

### இ.நமசிவாயம்

திருவாவடுதுறை 23ஆவது சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் இலங்கையைச் சேர்ந்த இ.நமசிவாயம் அவர்களுக்கு சித்தாந்த வித்தகர் என்கின்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தார். இந்தக் கௌரவம் 2002இல் இடம்பெற்றது.

### 2004இல் தேவார இசைமணி

இந்த ஆண்டில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு பெரியார்கள் திருவாவடுதுறை ஆதீனத்தினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்கள். ஒருவர் தேவார இசைமணி தாவடியூர் என்.ஆர். திருஞானசம்பந்த ஓதுவார் அவர்கள். மற்றவர் குப்பிளானூர் சைவப்புலவர் ஆசிரியர் ஏரம்பு அனுசாந்தன் அவர்கள்.

சென்ற நூற்றாண்டின் மத்திய காலத்தில் சிறந்த ஓதுவாராக இங்கே விளங்கியவர்களில் ஒருவர்.

தாவடியூர் செ.இராசையா அவர்கள் அவரது அருமைப் புத்திரரே தேவார இசைமணி அவர்கள். தந்தையாரைக் குருவாகக்கொண்ட எஸ்.ஆர். திருஞானசம்பந்தர் அவர்கள் இந்தியா சென்று அங்கும் பல ஓதுவார்களுடன் தங்கி இருந்து திருமுறை இசையில் நன்கு பயிற்சி பெற்றவர். பொருளுக்காகவோ, புகழுக்காகவோ அன்றி தெய்வப்பணி என்ற எண்ணத்துடன் திருமுறை இசை வளர்ச்சிக்குக் கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அரிய பணி ஆற்றியுள்ளார். பண்ணிசைப் புலவர், பண்ணிசை வேந்தர், திருமுறைவித்தகர், கலைஞான கேசரி, அருளிசை அரசு முதலான கௌரவ விருதுகளைக் காலத்துக்குக்காலம் பெற்றவர்.

திருவாவடுதுறை ஆதீனம் 1985ஆம் ஆண்டு தொடக்கம் ஓதுவார் மூர்த்திகளை அழைத்துப் பலவிதமான சிறப்புக்களையும் செய்துவருகிறது. இந்த ஆண்டு இருபதாவது ஓதுவார் மூர்த்தியாக நமது நாட்டைச் சேர்ந்த தேவார



திருவாவடுதுறை ஆதீனத்தில் இடம்பெற்ற கௌரவிப்பு விழாவில் தாவடியூர் தேவார இசைமணி எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனுக்கு திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிய பரமாசாரிய சுவாமிகள் பொன்னாடை போர்த்துப் பவித்திரமும் அணிவித்ததுடன், பொற்கிழியும் வழங்குகின்றார்.

இசைமணி தாவடியூர் சம்பந்தன் அவர்களை ஆதீனகர்த்தர் திருவாவடுதுறைக்கு அழைத்து அங்கு வைத்துப் பாராட்டிக் கௌரவித்திருப்பது ஈழநாட்டுக்கு அளித்த பெருங்கௌரவமாகும்.

திருவாவடுதுறை ஆதீனமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 17.03.2004 புதன்கிழமையன்று அருள்திரு.நமசிவாய மூர்த்திகள் ஆதிக்கவசமாகப் பட்டாடை போர்த்தியும் பவித்திரம் (மோதிரம்) அணிவித்தும், 3000 ரூபா பொற்கிழி வழங்கியும் தேவார இசைமணி தாவடியூர் எஸ்.ஆர்.திருஞானசம்பந்த ஓதுவார் அவர்களைப் பாராட்டி இருப்பது தேவார இசைமணி பெற்றபெரும் பேறாகும்.

### சைவப்புலவர் ஏ.அநுசாந்தன்

காசிவாசி மகான் செந்திநாதையர் அவர்கள் குப்பிளானைப் பிறந்த இடமாகக் கொண்டவர் நாவலர் காலத்தவர் நாவலருக்குப் பின்னர் சைவ, தமிழ் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தவர். அவரால் குப்பிளானூர் பெருமை பெறுகிறது. திரு.ஏ.அநுசாந்தன் அவர்கள் பிறந்தகமும் குப்பிளான் ஆகும். சைவப்புலவர் ஏ.அநுசாந்தன் சைவாசாரசீலராக இருந்து ஆசிரியப்பணி ஆற்றிவருகிறார். நல்ல சமயப் பிரசாரகரும் ஆவார். அவரது பெருமையை அறிந்த திருவாவடுதுறை ஆதீனம் அவரை ஆதீனப் பிரசாரகராய் நியமித்திருப்பதும் வரவேற்கக்கூடியதே.

இவ்வாற்றால் திருவாவடுதுறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் உள்ள சம்பந்தம் இன்றுநேற்று ஏற்பட்ட சம்பந்தமல்ல, பழைய சம்பந்தம் என்பது புலனாகின்றது.

★

# மட்டுநகரில் புதனன்று பலியானவர் புலிகளின் முன்னாள் உறுப்பினராம்

## சடலம் அடையாளம் காணப்பட்டது

மட்டக்களப்பு,டிசெ.25

மட்டக்களப்பு அரசடிச் சந்தியில் கடந்த புதன்கிழமை பிற்பகல் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர் உன்னிச்சை, 8ஆம் கட்டையைச் சேர்ந்த கந்தசாமி சதீஸ் (வயது 22) என்பவரே என்று உறவினர் ஒருவரால் நேற்றுமுன்தினம் அடையாளம் காட்டப்பட்டார்.

சடலத்தை அடையாளம் காட்டிய சின்ன ஊறணியைச் சேர்ந்த இறந்தவரின் சிறிய தாயாரான நடராஜா தவமணி, இறந்தவர் முன்னர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர் எனத் தெரிவித்தார்.

தனது வீட்டில் வசித்துவந்த இவர், கடந்த 2 வாரகாலமாகப் புதிதாக ஓர் இளைஞருடன் அறிமுகமாகி வெளியே அடிக்கடி சென்று வந்தார் என்றும், சம்பவதினம் அன்றும் அவருடன் சென்றார் என்றும் மட்டக்களப்புப் பொலீஸாரிடம் தவமணி தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளில் இவருடன் வந்த இளைஞராலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸாருக்குச் சந்தேகம் எழுந்துள்ளது.

மோட்டார் சைக்கிளின் திறப்பு மற்றும் ஆவணங்கள் அனைத்தும் அந்த இளைஞரால் கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம் என்றும், அவர் பற்றிய தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் - பொலீஸார் தெரிவித்தனர். (க-8)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றியோருக்கு அபராதம்

தென்மராட்சி,டிசெ.25

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த ஆறு வாகனங்களின் சாரதிகளுக்கு 47 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட ஆறு வாகனங்களின் சாரதிகளுக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

இரண்டு லொறிகளின் சாரதிகளுக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதமும், மூன்று உழவு இயந்திரங்களின் சாரதிகளுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதமும், ஹண்டர் வாகனத்தின் சாரதிக்கு 8 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது. (8-117)

# கடன் தொகையைச் செலுத்துமாறு கோரிக்கை

தென்மராட்சி,டிசெ.25

மீசாலை கமநல சேவைகள் நிலையத்தின் 'சீடா' திட்டத்தின்கீழ் நீரிறைக்கும் இயந்திரங்கள் கடனாகப்பெற்றவர்கள் கடன் தொகையைச் டிசெம்பர் மாதத்திற்குள் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 35 விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் கடனடிப்படையில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (8-117)



இந்த வருடம் 'றீடோ' நிறுவனத்தால் நடத்தப்பட்ட 'பெற்றோர் வீட்டுக் கல்வித்திட்டத்தில்' கல்விகற்ற பெற்றோருக்கு நவாலி கிராம அலுவலர் எழில்செல்வன் பரிசில் வழங்குவதையும், அருகில் 'றீடோ' நிறுவனத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் தி.ஜெயக்குமார் நிற்பதனையும் -

பயனாளிகளாக வள நிலையத்தில் கல்விகற்ற பெற்றோரையும் படங்களில் காணலாம். (8)

# கண்ணீர் அஞ்சலி



சுதுமலை மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், உயரப்புலத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட

## சீவரத்தினம் லவன்

அவர்கள் 22.12.2004 அன்று அகால மரணமானதையிட்டு துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காக சுதுமலை புவனேஸ்வரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்,
செந்தூரான் அழகுமாடம், மானிப்பாய்.

(40045)(42-19-14)

# நீங்காத நினைவலைகள்

ஏழாம் ஆண்டு — ஒன்பதாம் ஆண்டு



திருமதி பிலோமினா அந்தோனிப்பிள்ளை — அமரர் டானியல் அந்தோனிப்பிள்ளை

16.04.1935 மண்ணுலகில் 11.06.1926

22.04.1997 விண்ணுலகில் 25.12.1995

ஆண்டொன்று போனால்
வயதொன்று போகும்
ஆண்டுபல கடந்தும்
வயதில் மாற்றமின்றி
புகைப்படங்களாய்
எம்மத்தியில் நீர்!
கலங்குகின்றோம் நாம்!
*மீண்டும் எம்மிடையில்*
*வரமாட்டீர்களா என்ற ஏக்கத்துடன*

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*என்றும் பிரார்த்திக்கும்:*
பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*24, முதலாம் குறுக்குத்தெரு,*
*பாஷையூர்,*
*யாழ்ப்பாணம்.*

(40035)(12-19-14-42)

# தமிழ்ப் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

## ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றன

தகைமைகள்

01. கல்வித்தகைமை: க.பொ.த. உயர்தரத்தில் தமிழ்ப் பாடத்தில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.
02. அகவை: 18 தொடக்கம் 23 வரை

*குறிப்பு:*

01. வேண்டுகை முடிவு நாள்: **31.12.2004**
02. நேர்காணல் நடைபெறும் நாள்: பின்னர் அறிவிக்கப்படும்.
03. நேர்காணல் நடைபெறும் இடம்: மனிதவள மேம்பாட்டுப்பகுதி, நிதித்துறை, நாகதம்பிரான் வீதி, கிளிநொச்சி.
04. நேர்காணலுக்கு வரும்பொழுது கல்வித்தகைமைச் சான்றிதழ் (க.பொ.த.சா.த, க.பொ.த. உ.த.), பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அடையாள அட்டை ஆகியவற்றையும் அவற்றின நிழற்படிகளையும் கொண்டுவருக.
05. பயிற்சிக்காலத்தில் மாதந்தோறும் ரூபா 5,000.00 உதவு தொகையாக வழங்கப்படும். தங்குமிட வசதி உண்டு.
06. வேண்டுகை அனுப்பவேண்டிய முகவரி:
    பொறுப்பாளர்,
    மனிதவள மேம்பாட்டுப்பகுதி,
    நிதித்துறை,
    நாகதம்பிரான் வீதி,
    கிளிநொச்சி.
07. பயிற்சிக்காலம்: ஓர் ஆண்டு
08. பயிற்சியின்பின் ஐந்தாண்டுகள் நிதித்துறையிற் பணியாற்றுதல் வேண்டும்.
09. பயிற்சியின் நிறைவில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். பொருத்தமான பணி வழங்கப்பட்டு நிதித்துறைச் சம்பளத்திட்டத்திற்கமைவாகச் சம்பளம் வழங்கப்படும்.
10. தமிழ் மொழியிற் பற்றுடையவராகவும் ஆற்றலுடையவராகவும் தொடர்ந்து கற்கும் விருப்பமுடையவராகவும் அடையாளங் காணப்படுவோர் தமிழிற் சிறப்புக்கல்வியை மேற்கொள்வதற்கு ஏற்பாடுசெய்யப்படும்.

ஆளுகை,
மனிதவள மேம்பாட்டுப் பகுதி,
நிதித்துறை.

(சி-40003)(39-19-14-42)

## வைத்தியசாலை சென்ற சிறுவனைக் காணவில்லையென முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் தாயாருக்கு உணவு கொண்டுசென்ற சிறுவனைக் காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் மற்றும் யாழ்.பொலீஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த 22ஆம் திகதி மாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தாயாருக்கு உணவு கொண்டு வந்தவரான கொக்குவில், கேணியடியைச் சேர்ந்த யோகலிங்கம் பியூலன் (வயது 14) என்ற சிறுவனையே காணவில்லையென முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இவர் தினமும் தாயாரை வைத்தியசாலையில் பார்க்க துவிச்சக்கர வண்டியில் வந்து வீடு திரும்புவார் என றும் - சம்பவதினம் பிற்பகல் 5.30 மணியளவில் தாயாருக்கு உணவு கொடுத்துவிட்டுத் திரும்பிய சிறுவன் இதுவரை வீடு திரும்பவில்லையென சிறுவனின் உறவினர்கள் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

(8-6-15-7-13)

## ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.00 மணி தொடக்கம் சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில், பஜனைகளும், கலாநிதி சபா ஜெயராசாவின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (8-204)

## மட்டக்களப்பு - கொழும்பு கடுகதி ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு,டிசெ.25

கொழும்பு - மட்டக்களப்புக்கு இடையிலான பயணிகள் கடுகதி ரயில்சேவை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்படுகிறது.

இப்புதிய சேவையில் விசேட வசதிகள் செய்யப்பட்டுள்ளன என ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் இரவு 7.15 மணி அளவில் முதலாவது சேவை ஆரம்பமாக இருந்தது.

இந்தச் சேவை மூலம் மக்கள் பெரும் பயன் அடைவார்கள் என ரயில்வேத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-8)

## திருவாசக விழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியில் அமைந்துள்ள சிவன்கோயிலில் இன்று காலை 7 மணிக்கு திருவாசக விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சங்கீத ஆசிரியர்கள், மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (8-203)

## மகரஜோதிப் பெருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

காரைநகர் வியாவில் ஐயனார் கோயில் மகரஜோதிப் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

சாஸ்தா பீடம் பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் அகில இலங்கை யாழ்.மாவட்ட 18ஆம் படி குருசாமியும் கலந்துகொள்ளவுள்ளார். (8-202)

## சமய அறிவுப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.25

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்படும் சமய அறிவுப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு 5 வலயங்களிலுள்ள 30 பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

மாணவர்கள் தாம் விரும்பும் எந்தவொரு பரீட்சை நிலையத்திலும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சைவசமய விவகாரக் குழுத் தலைவர் கலாநிதி க.குணராசா தெரிவித்துள்ளார். (8-202)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்றிலில் பரிபாலன சபைத் தலைவர் ஆ.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது. (8-202)

## அதிபர், ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

வடமராட்சி கல்விவலயத்திற்குட்பட்ட சகல அதிபர், ஆசிரியர்களுக்குமான 2005 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் பற்றிய கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

(8-204)

# VACANCIES

## Assistant Teachers

Applications are called for the following positions:

**Tamil Honours Degree Holders:** (2 vacancies)

**Dance:** A Graduate of the College of Fine Arts with experience in teaching and training for school performances.

**Eastern Music:** A Graduate of the College of Fine Arts with experience in teaching and training for school performances.

**Geography Honours Degree:** A Special Degree in Geography with teaching experience in the Advanced Level Classes.

**Primary Trained Teachers:** (3 vacancies)

**Montessori (Nursery) Trained Teachers :** (2 vacancies)

**Warden:** with experience in dealing with children in school hostels.

Applications should reach the following address on or before the 3rd of January 2005.

Address:
**The Principal,**
Uduvil Girls College,
Uduvil, Chunnakam.

(C/39997)(42-14-19)

# சொரிகின்றோம் நீரஞ்சலியை...

மலராய் 21 - 04 - 1983



சருகாய் 03 - 12 - 2004

## திருமதி டயானி மஞ்சுதன்

தாய் மடியில் சேயாய் தவழ்ந்து மகிழ்ந்த கண்மணியே!
வாய் மலர மழலை பேசி வளர்ந்து - கல்வி கற்றுயர்ந்தாய்!
தூய திருமண பந்தமதில் இணைந்து வாழ கனடா சென்றாய்!
நேய மனங்கள் ஆவிசோர சட்டென்று காற்றுடன் கலந்தாயோ எம் செல்வமே?

அகவை இருபத்தொன்றதனில் புதுமலர் மணம் மறைய முன்பே!
உலகை எல்லாம் பொய்க்க எங்கு சென்றாய் எம் "டயானி"
திகைப்பினில் சிக்கித் தவிக்கின்றோம் உன் பிரிவால்.....!
இக வாழ்வில் உன் நினைவால் நாம் சொரிகின்றோம் நீரஞ்சலியை.

ரஞ்சி சித்தி, சுமி அக்கா
குடும்பத்தினர்கள்.

(40092)(12-19-14-42)

# மரண அறிவித்தல்

## திருமதி டயானி மஞ்சுதன்

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (க.பொ.த. உயர்தரம், 2002 உயிரியல் பிரிவு) பழைய மாணவியுமாகிய திருமதி டயானி மஞ்சுதன் அவர்கள் 03.12.2004 அன்று கனடாவில் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் த.மஞ்சுதனின் அன்பு மனைவியும் க.கந்தசாமி (ஓய்வுபெற்ற Depot Inspector, கோண்டாவில்), திருமதி கேமலதா கந்தசாமி (உதவிக் கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம், தென்மராட்சி) தம்பதிகளின் ஆருயிர் சிரேஷ்ட புதல்வியும் கனடாவைச் சேர்ந்த தங்கராசா - தணிகாசலதேவி தம்பதிகளின் மருமகளும் க.டிலானி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, A/L 2004 - கணிதப் பிரிவு), க.குலானி (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, தரம் 10) ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரியும் காலஞ்சென்ற க.நடராசா (இராசையா), க.சோமசுந்தரம் (ஓய்வுபெற்ற கிளை மேற்பார்வையாளர், சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்), திருமதி அன்னப்பிள்ளை சோமசுந்தரம், க.வேலுப்பிள்ளை (ஓய்வுபெற்ற Depot Inspector, வவுனியா), திருமதி வே.நாகேஸ்வரி (பேபி), க.கனகசபை (உத்தரவு பெற்ற நில அளவையாளர்), திருமதி க.விமலாதேவி, காலஞ்சென்ற க.நாகராசா, க.கிருஸ்ணராஜா, காலஞ்சென்ற திருமதி கி.லலிதா (ஆசிரியர், மந்துவில் றோ.க.அ.த.க.பா.), த.நவரட்ணவேல் (எழுதுநர், இ.மி.ச., யாழ்ப்பாணம்), திருமதி ரஞ்சிதா நவரட்ணவேல் (பொது சுகாதார தாதிய சகோதரி பயிற்சியாளர் - களுத்துறை) ஆகியோரின் பாசமிகு பெறாமகளும் சோ.மோகனதாஸ் (ஆசிரியர், மட்டுவில் ம.வி.), திருமதி குகதாசன் ரூபறஜனி (லண்டன்), சோ.றங்கதாஸ் (சுவிஸ்), திருமதி சிவகுமார் ரூபவதனி (ஆசிரியர், மல்லாவி ம.ம.வி.) சோ.ஜெயதாஸ் (இத்தாலி), சோ. யசோததாஸ் (உரிமையாளர், ரெக்சகோ குளிரகம், சாவகச்சேரி), திருமதி சிவாகலைச்செல்வி, வே.கலைச்செல்வன் (கனடா), வே. கலைவாணன் (கனடா), வே.கலைறங்கன் (இத்தாலி), திருமதி S. கலைவாணி (கனடா), திருமதி S.கலைரூபி (கனடா), க.முருகவேள் (பொறியியலாளர், நியாப, யாழப்பாணம்), க.சிறிஸ்கந்தவேள் (கணனிப் பொறியியலாளர், Millenium IT), காலஞ்சென்ற க.திருமகள் மற்றும் க.இளங்கோவேள் (யா/இந்துக் கல்லூரி, A/L 2005 உயிரியல்), க.எழில்வேள் (யா/இந்துக கல்லூரி, தரம் 9), திருமதி நடனரூபன் சுமி, ந.சிந்துஜன் (யா/இந்துக் கல்லூரி, A/L 2005 கணிதம்), ந.சஞ்சயன் (யா/இந்துக் கல்லூரி, A/L 2006 உயிரியல்), ந.மீரா (யா/இந்துக் கல்லூரி தரம் 9) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2004) ஞாயிற்றுக்கிழமை புதிய ஸ்ரேசனடி, கண்டிவீதி, மீசாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

(40041)(24-18-45)

தகவல்:
க.கந்தசாமி.

# உதயன் நத்தார் சிறப்பு மலர் 2004

## நீதியோடு கூடிய தீர்வினைத் தமிழ் மக்கள் பெற்றிட நற்கருணை ஆண்டவரைச் சிறப்பாக செபியுங்கள்!!



2004ஆம் ஆண்டுகிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தில்எமது வாழ்த்துக்களையும் ஆசீரையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம். ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவைக்கொண்டாடும் கிறிஸ்மஸ் காலம் நாம் எந்த மன நிலையில் எந்தக் குழப்பத்தில் இருந்தாலும் எமக்கு எப்போதும் ஒரு மகிழ்வின் காலமே தான்.

"உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:14) என்று வாழ்த்திய வான தூதரின் செய்தி எமக்கும் உண்மையில் எப்போதும் ஒரு மகிழ்வான செய்தியாகும். இச்செய்தி ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார் என்ற அறிவிப்பை எப்போதும் ஞாபகம் ஊட்டிக்கொண்டே இருக்கும்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு பற்றிப் பழைய ஏற்பாட்டில் தெரிவிக்கும் "காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக்கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது". (எசாயா 9:2) என்னும் செய்தி இன்றும் எமது வாழ்வனுபவத்தில் ஆழ்ந்து அர்த்தம் காணப்படவேண்டிய செய்தியாகும்.

நீண்ட காலப் போரும் அதன் அனாத்தங்களும் நிறுத்தப்பட்டு சமாதானத்திற்கும் பேச்சுக்குமான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கடந்த 35 மாதங்களுக்கு மேலாக எதுவுமே நகராத நிலையில் இருப்பது தமிழ் மக்கள் மனதுகளில் ஒரு பய உணர்வையே தொடர்ந்தும் இருக்கச் செய்துள்ளது.



யாழ். ஆயரின் செய்தி

விடுதலைப் புலிகளின் தலைவர் 2004ஆம் ஆண்டு மாவீரர் தின உரையில் இடைக்காலத்தீர்வுமின்றி நிரந்தரத் தீர்வுமின்றி நிலையான வாழ்வும் அமைதியுமின்றி நாம் தொடர்ந்தும் அரசியல் வெறுமைக்குள் சிறைபட்டுக்கிடக்க முடியாது என்று தெரிவித்துள்ளார். அத்துடன் காலதாமதம் இன்றிப் பேச்சுக்களை அரம்பிக்கும்படி அவசர வேண்டுகோளையும் அரசுக்கு விடுத்துள்ளார். இவ் வேண்டுகோள் நிராகரிக்கப்படுமேயானால் மீண்டும் போர் மூளும் சூழல்உருவாவது தவிர்க்கப்படமுடியாதது போல்தெரிகின்றது. சர்வதேச உலகும் ஊடகங் களும் இதனைத் தெளிவாகப்படித்து உன்னிப் பாக கவனித்துக் கொண்டிருக்கும் வேளையில் இதன் நிமிர்த்தமாக என்ன விளைவுகள் ஏற்படுமோ என்ற ஏக்க உணர்வில் தமிழ் மக்கள் குழம்பிப் போய் இருக்கின்றார்கள்.

இனியும்போரையும்அதன் கொடுர அனுபவங்களையும் மனதாலும் நினைத்துப் பார்க்க வலிமை யற்றவர்களாகத் தமிழ்மக்கள் இருக்கின்றவேளையில் மீண்டும் ஒரு போர் ஏற்பட்ப் போகின்றது என்ற எண்ணம் கூட தமிழ் மக்கள் மனது களில் ஏற்படாத வாறு நிலைமையை விரைவாகச்சரி செய்ய வேண்டும் என அரசிற்கும் எதிர்க்கட்சிக்கும் தமிழ் மக்கள்பேரால் வேண்டு கோள் விடுக்க விரும்பு கின்றோம். அரசியல்லாபங்களையும் யார் பெயர் பெறு வது என்ற வரட் டுக் கௌரவத் தையும் விடுத்து இலங்கை வாழ் மக்கள் அனை வருக்கும் அமைதியான ஒரு வாழ்வு ஏற்பட வேண்டும். என்ற நோக்குடன் சம்பந் தப்பட்ட அனைவரும் செயற்படும் காலம் இதுவாகும்.

போரினால் மிகமோசமாகத் தாக்கப்பட்ட குடும்பஅமைப்புக்கள் ப்றறிக் கடந்த ஆண்டில் நாம் சிந்தித்துப் பலதிட்டங்களைத் தீட்டிச்செயற்பட்டோம். குறிப்பாக இளைஞர்களின் கட்டுக்கடங்காத வாழ்வு பற்றி கவனம் செலுத்தினோம். அதன் விளைவாக பல மாற்றங்கள் இளைஞர்கள் வாழ்விலும் குடும்ப அமைப்புக்களிலும் ஏற்பட்டுள்ளன.

நற்கருணையாண்டு திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் அவர்களால் பிரகடனப் படுத் தப்பட்ட நிலையில் ஒரு விசேட கருத்தை உங்கள் முன்வைக்க விரும்புகின்றோம். திருவருகைக் கால திருமடலில் நாம் வேண்டிக்கொண்டபடி நற்கருணை ஆண்டுச் செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்ற வேளையில் தடைப் பட்டுப் போய்யுள்ள பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத்தீர்வினை தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ள வழி வகுக்க வேண்டும் என நற்கருணை ஆண்டவரிடம் சிறப்பாகச் செபியுங்கள் என்பதே அவ்வேண்டுகோள் ஆகும்.

உலகின் ஒளியாகப் பிறந்த பாலகன் இயேசு எம்மண்ணில் தோன்றிய சமாதானப் பேச்சுக்கள் என்ற ஒளி எம்மண்ணின் மேலும் மக்கள் மேலும் நிரந்தர ஒளியாக மாறவேண்டி நத்தார் புது வருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

யாழ் ஆயர்.
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

## உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாவதாக...!



2004 ஆம் ஆண்டு கிறிஸ்துவின் பிறப்பு விழாவைக் கொண்டாடும் வேளையில் உதயன் வாசக அன்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக! பூவுலகில் நன்மனதுள்ளோர்க்கு அமைதி உண்டாகுக! என்ற வானதூதரின் வாழ்த்துக்கள் எம் மக்கள் மேலும் மண்ணின் அனுபவங்கள் மேலும் அர்த்தத்தையும் ஆசீரையும் பொழியும் வசனங்கள் ஆகட்டும்.

கிறிஸ்மஸ் விழா இன்று ஓர் உலக விழா. ஆன்மீக ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் உலக மக்கள் அனைவரையும் இணைக்கின்ற ஒரு விழா. இவ்விழா அனைவருக்கும் அன்பையும் அமைதியையும் தருகின்ற ஒரு விழா. கடவுள் நம்மோடு இருக்கின்றார் என்ற ஓர் உணர்வை அடி மனதுகளில் சமய வேறுபாடுகளின்றி அறிவிக்கின்ற ஒரு விழா.

இவ்விழா எமது மண்ணில் வாழ்கின்ற அனைவருக்கும் அவர்களின் வரையறைகளைத் தாண்டி அமைதியையும் ஆசீரையும் கொண்டு வருகின்ற ஒரு விழாவாக இருக்கவேண்டுமென் பதே எமது வேண்டுதலும் விருப்பமும் ஆகும். ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் உலகெங்கும் வாழும் மக்களோ இணைந்து கிறிஸ்மஸ் பெருவிழாவை கொண்டாடுகின்ற வேளையில் புதிய ஆண்டு எமக்கு எப்படி அமையப்போகின் றது என்ற ஓர் ஏக்க உணர்வு எல்லோரிடமும் இருக்கவே செய்கின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக எமது மண்ணில் நிலவிவரும் அமைதிச் சூழல் சற்று மன நிம்மதியைத் தந்தாலும் கடந்த ஓராண்டுக்கு மேலாக எதுவும் நடக்காத ஒரு நிலை ஏக்கத்தையே தருகின்றது. மாவீரர் தினஉரை எமது ஊடகங்களையும் வெளிநாட்டு ஊடகங்களையும் உலக நாடுகளையும் உசார்ப் படுத்தியுள்ளன. சண்டை மூளப்போகிறதோ என்ற ஓர் ஐய நிலையில் எல்லோரும் இருந்தாலும் அதன் தாக்கங்களையும் விளைவுகளையும் அனுப விக்கப்போகிற வர்கள் நாமே என்கின்ற வகையில் எமது மனதுகள் பதைபதைத்துக் கொண்டே இருக்கின்றன. அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கவுணர்வு எம்மை வருடிக்கொண்டு இருக்க இனியும் ஒரு யுத்தத்தை மனதாலும் நினைக்க வல்லமை அற்றவர்களாக தமிழ் மக்கள் இருக் கிறார்கள். யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தமது கிறிஸ்மஸ் தினச் செய்தியில் வெளியிட்ட கருத்து இங்கு கவனத்துடன் நோக்கப்படவேண்டிய ஒன்றாகும். தமது செய்தியில் இனியும் போரையும் அதன் கொடூர அனுபவங்களை யும் மனதாலும் நினைத்துப் பார்க்க வலிமை யற்றவர்களாக தமிழ்மக்கள் இருக்கின்ற வேளையில் மீண்டும் ஒரு போர் ஏற்படப்போகின்றது என்ற எண்ணம் கூட தமிழ் மக்கள் மனதுகளில் ஏற்படாத வாறு நிலை மையை விரைவாகச் சரிசெய்ய வேண்டும் என அரசிற்கும் எதிர்க்கட் சிக்கும் தமிழ்மக்கள் பேரால் வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம். அரசியல் லாபங்களையும் யார் பெயர் பெறுவது என்ற வறட்டுக் கௌரவத்தையும் விடுத்து இலங்கை வாழ் மக்கள் அனைவருக் கும் அமைதியான ஒரு வாழ்வு ஏற்பட வேண்டும் என்ற நோக்குடன் சம்பந்தப்பட்ட அனைவரும் செயல்படும் காலம் இதுவாகும் என்று அழைப்பு விடுத்திருக்கின்றார். இவ்வழைப்பை சம்பந்தப்பட்டவர்கள் செவிமடுக்கவும் அதன்படி செயற்படவும் வேண்டுமென இவ்விழாக்காலத்தில் நாம் எல்லோரும் செபிக்க அழைக்கப்படுகின்றோம்.

எமது நாட்டு குழப்பநிலை பற்றி ஊடகங்கள் தருகின்ற செய்திகள் எமது மண்ணையும் மக்களையும் பொறுத்தவரையில் முழுநம்பிக் கை தருகின்ற செய்திகளாக அமையாவிட்டாலும் நாமே எமது மனதுகளை இறைநம்பிக்கையோடு தேற்றிக்கொள்ள வேண்டியவர்களாகவும் நல் லது நடக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக! பூவுலகில் நன்மனதுள்ளோர்க்கு அமைதி உண்டாகுக! என்ற வானதூதரின் வாழ்த்துக்கள் எந்த வகையில் எமக்கு நன்மை அளிக்கப்போகின்றது என்பது எம்மிலேயே தங்கியுள்ளது. நல்ல மனதுள்ளவர்களாக, நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை உடையவர்களாக என்ன நடந்தாலும் இறைசித்தம் நிறைவேறும் என்ற நிறைவுடையவர்களாக இருக்கின்றபோது உன்னதங் களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக! பூவுலகில் நன் மனதுள்ளோருக்கு அமைதி உண்டாகுக! என்ற வசனங் கள் அர்த்தமும் முழுமையும் பெறுகின்ற வசனங்கள் ஆகலாம். எமது மண்ணில் நாம் பெற்ற கடின அனுபவ ங்கள் நடுவில் வல்ல மையுள்ள இறைவன் நல்லது நடக்க வரம ருள்வார். கல் மனதுகளை இழகவைப்பார். அமைதியும் சமாதானமும் உண்டாக வழிசமை ப்பார். என்றெல் லாம் நாம் நம்புகின்ற போது உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டா குக! பூவுலகில் நன்மன துள்ளோர்க்கு அமைதி உண்டாகுக! என்ற வசனங்கள் அர்த்தமும் முழுமையும் பெறும்.

அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை

## மனித சந்திப்புகளின் கொண்டாட்டம் கிறிஸ்மஸ்

அழிவைத் தேடிச் செல்லும் அநீத சமுதாயம் ஏழை எளியவரை வாழ விடுவதில்லை. பலாத்காரத்தின் கோரப்பிடியில் அவர்களைச் சிக்க வைத்து சாகடிக்கத் துணிந்துவிட்டது. அது. அப்பாவி மக்கள் அன்றா டம்படும் வேதனை, வடிக்கும் கண்ணீர் தாங்கமுடியாத இழப்புக்கள் ஐயகோ வாழ வேண்டிய வர்கள் நொடிப்பொழதில் மொட்டாகத் தறிக்கப்பட்டுவிடுகிறார்கள். காலாகாலமாகச் சேர்த்துவைத்த சொத்துக் கள் இரவோடிரவாகப் பறிமுதல் செய்யப்படுகின்றன. புதிய புதிர்கள், புதிய சவால்கள் முளைத்துக் கிளம்பி வாழ்வை கூறுபோட்டு கசக் கிப் பிழிகின்ற வேளையில் கிறிஸ்மஸ் விழா ஏன்? எப்படி? என்ற பெரும் கேள்வி என்மனதை அடிக்கடி குழப்புகின்றது. உண்மை யில் கிறிஸ்மஸ் விழா என்பது...

அருட்திரு. ஜீவாப்போல்
அ. ம. தி.

புத்தன், யேசு, காந்தி, என்று யேசுவையும் ஒரு சமயத் தலைவராக ஏற்று வீர வணக்கம் செய்யும் ஒரு நினைவு தினமா?

கிறிஸ்துவின் குழந்தைப் பருவத்தை தியானித்து, குழந்தை யேசுவுக்கு தாயாகத் தாலாட்டுப்பாடி, தாய்மையின் மெல்லுணர்வுகளில் திளைத்து பிள்ளைத் தமிழ் பேசிமகிழும் தூக்கவேளையா? குடித்து வெறித்து களியாட்டம், குத்துச்சண்டை போட்டு நானோ நீயோ என்று போட்டியிட்டு, நாகரிகபாணியில் மயங்கி நிற்கும்

(தொடர்ச்சி 13 ஆம் பக்கம்)






# உதயன் நத்தார் சிறப்பு மலர் 2004

## சமூகச் சீர்கேடுகள் தொலைய மீண்டும் யேசு பாலன் பிறக்கிறார்

உலகமே கொண்டாடி மகிழும் நன்நாள் நத்தார் திருநாள். வாழ்த்து மடல்கள், வாழ்த்துப் பரிமாற்றங்கள், விழாக்கள், விருந்துகள், வழிபாடுகள் எல்லாம் 2004 ஆம் ஆண்டு வரையும் நினைவுகூரப்பட்டு பகிரப்படும் கிறிஸ்து பாலன் பிறப்பு விழா இனம், மொழி, நாடு, கண்டம் கடந்து உறவுகள் நினைவுகளாக எங்களுக்காக ஒரு மீட்பர் பிறந்துள்ளார் என்ற செய்தியை மகிழ்ச்சியில் பகிர்ந்து கொள்கிறார்கள்.

எங்கே பிறப்பார்? என்று ஏங்கிய ஆய்வாளர்களும், வானசாஸ்திரிகளும், இறை வல்லுநர்களும், மூப்பர்களும் காத்திருக்க எங்கே பிறந்துள்ளார்? எமக்கும் தெரிவியுங்கள் எனத் தம் அரச பதவிக்கு சவாலாகி விடுமோ என ஒரு கூட்டம் ஏங்கித் தவித்ததும் அந்நாளில் நடந்ததே.

இந்நாள் வரை எம்மத்தியில் இச்செய்தியை பகிர்ந்தவர்கள் யார்? மாட மாளிகையுடன் மன்னர்கள் காத்திருக்க, மாடடைக் குடிலில் மரியன்னை மடியில் மனுமகன் பாலகனாய் பிறந்த செய்தியை பகர்ந்தவர்கள் வயல்வெளியில் இரவுக் காவல் காத்த மந்தைகள் மேய்க்கும் சாதாரண இடையர்கள் மத்தியில் ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது. மிகுந்த அச்சம் கொண்ட இடையர்களிடம் அஞ்சாதீர்கள் இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம் என்ற செய்தி கேட்டு கலங்கி, தெளிந்த இடையர் அக்கணமே தேடி வணங்கியதுடன், இன்றுவரை அந்த மகிழ்வின் செய்தியை பகிர வழி சமைத்தார்கள்.

இன்று உலகம் மகிழும் கிறிஸ்து பிறப்பின் செய்தியை பகிர்ந்தவர்களின் வாரிசுகளாக உங்களிடம் தரப்பட்ட செய்தியை எப்படிப் பகிர்ந்துகொள்வீர். அடுத்த தலைமுறையாக நினைவுடன் சாட்சியம் பகர இன்று நாம் அழைக்கப்பட்டுள்ளதை பொறுப்புடன் ஏற்றுக்கொள்வோமா?

பாலன் பிறந்த செய்தி பாருக்கு பகர்ந்த இடையர் மத்தியில் அவர் பிறப்பையே அழிப்பதற்காக கொலை வெறியுடன் அலைந்த ஏரோது அரச கூட்டத்தின் பழி பாதகச் செயல் அன்று பச்சிளம் பாலகர்களை கொன்று குவித்தது. இதுவே இன்று ஒரு புறம் ஆன்மீக வாஞ்சையுடன் இறை பற்றுறுதியுடன் இறை உறவில் வாழும் மக்கள் மத்தியில் சமூகச் சீர்கேட்டாலும் அடாவடித் தனங்களாலும் மதுவில் மயங்கி உயிரைக் குடித்து ஆன்மீக ஆர்வமின்றிய வன்முறைக் கலாசாரத்தை தூண்டி கொலைவெறியுடன் அலையும் கூட்டத்தின் மத்தியில் மீண்டும் ஒரு கிறிஸ்து பிறப்பின் விழா எமக்குத் தரப்பட்டுள்ளது. அஞ்சாதீர் எங்களுக்காக ஒரு மீட்பர் பிறந்துள்ளார் என்ற நம்பிக்கை ஒளியின் செய்தியை பகிரும்படி சாட்சிய வாழ்வால் நம்பிக்கை ஊட்டும்படி சமூகச் சீரழிவுகள் மத்தியில் இறை அன்பை பிறரன்பால் வெளிப்படுத்த அழைப்பு விடுக்கப்படும் நத்தார் விழாவில் நம்மத்தியில் பால யேசு பிறந்துள்ளார்.

உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்குகந்தோருக்கு அமைதி உண்டாகுக! என்ற புகழ்ப்பாக்களை பாடிப் புகழ்ந்து நல்லுறவால் நல் வாழ்த்தொலி பாரெங்கும் பரவும் பணி வாழ்வால் வாழ்த்துக்கூறி மகிழ்வோம். மனித இச்சைக்கு மதிப்பளிக்காது இறைபக்திக்கும் இறைப் பிரசன்னத்திற்கும் முன்மாதிரியான கிறிஸ்தவ சாட்சிய வாழ்வால் இறை அன்பை வாழ்த்துக்களாக பகர்ந்து மகிழ்வோம்!

-யோசப்பாலா





















அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது தித்திக்கும்
நத்தார் நல்வாழ்த்துக்கள்!

சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகள், பட்டு வேட்டிகள், புதுரக மனங்கவர் சல்வார் கமிசுகள், ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் அனைவருக்குமான ஆடைகளை ஒரே கூரையின் கீழ் பெற்றிட ....... இப்பொழுது யாழ்ப்பாணத்தில்....!

த. சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்

இல. 21, சிறப்பு அங்காடி,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
☎: 222 2826.

(CJ39840) உதயன் Graphics


# வையகம் வணங்கிடும் இறைமகன் யேசு

நாட்காட்டி இதழ்களும் நாளொன்றாய் கழியவே
நிறைவுறும் மார்கழி நினைவினில் கொள்ளும்
மாட்டிடை குடிதனில் வைக்கோலும் மெத்தையாய்
மாண்புறு மேய்ப்பனும் முத்தாக மலர்ந்தார்
ஏட்டினில் தந்தாரே பைபிளெம் பொக்கிசம்
அற்புத நாதரின் உயிருள்ள காவியம்
காட்டிடும் உறவின் கரங்களும் இணையும்
கொலுவான கிறிஸ்மஸ் கழிப்புறும் திருநாள்.

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா.




அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எம்மினிய நத்தார் நல்வாழ்த்துக்கள்!

★ சகலவிதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருள்கள்.
★ கைத்தொழில் மூலப்பொருள்கள்
★ வாசனைத் திரவியங்கள்
★ மற்றும் ஆயுர்வேத மருந்துச் சரக்குகள், அறோவ்ட்மா ஆகிய அனைத்தையும் பெற்றிட...

ஸ்ரீ காந் எசன்ஸ் அன் குறோசறீஸ்

16A, கே.கே.எஸ். வீதி (சத்திரத்துச் சந்தி),
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2219

(CJ39922) உதயன் Graphics



அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

இனிக்கும் இந்த நத்தார் தினத்தில்
அனைவருக்கும் நல்வாழ்த்துகள்!



புத்தம் புதிய ஆடைகளை
நித்தம் நித்தம் அறிமுகம்
செய்யும்

54, பெரிய கடை,
யாழ்ப்பாணம். T.P.: 2899

25, 4ஆம் குறுக்குத் தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.





வினோ நகைப் பூங்கா

(CJ39883) உதயன் Graphics

அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம்மினிய
கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!

★ தங்க நகையுலகில் மங்காப் புகழ்பெற்ற நமபகரமான நகைப்பூங்கா..
அதுதான்!

வினோ நகைப் பூங்கா

★ காலத்தால் மாறாத கண்கவர் நகைகளை வண்ண வண்ண வடிவமைப்பில் பெற்றுக்கொள்ள இன்றே விரையுங்கள்

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2824, 021 222 5394



அனைவருக்கும் எம்மினிய கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!

எத்திக்கிலிருந்தும் வரும் அத்தனை பேருக்கும் ஏற்றவகையில் ஆடைகளைத் தெரிவுசெய்திட இன்றே விரையுங்கள்... இன்றைய நாகரீகத்திற்கேற்ப

※ பட்டுப்புடைவைகள் மற்றும் ※ பஞ்சாபி, சோலிகிற்
※ ஸ்கேட் அன் பிளவுஸ் ※ சூட்டிங் சேட்டிங்
றெடிமேட் ஆடைவகைகள்
அனைத்துக்கும் நீங்கள்
நாடவேண்டிய இடம்...
யாழ்.நகரில்



மகா சில்க்ஸ்

புடைவை நிறுவனம்

இல. 32, 40A,
(நவீன சந்தை உட்புறம்),
யாழ்ப்பாணம்.

இரண்டாவது அகவையில் காலடி எடுத்து வைத்து
ஆடை உலகில் வீறுநடை போடும்



பியூட்*டி சில்க்ஸ்

புடைவை நிறுவனம்

இல. 69, நவீன சந்தை
உட்புறம், யாழ்ப்பாணம்.

(CJ39889) உதயன் Graphics



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் இதயங் கனிந்த கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள்!

MAYOORA GIFT CENTRE

14, NEW MARKET (OUT SIDE) POWER HOUSE ROAD, JAFFNA. TEL: 021 222 2084

★ Dealers in fancy goods
★ Gift items
★ Electronics
★ Electrical & House Hold goods

உங்களுக்கு வேண்டிய
★ அழகுசாதனப் பொருள்கள்
★ அன்பளிப்புப் பொருள்கள்
★ இலத்திரனியல் பொருள்கள்
★ மின்சாரப் பொருள்கள்
★ வீட்டுப்பாவனைப் பொருள்கள்

இத்தனையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்
ஓரிடமாகப் பெற்றிட...



மயூரா அன்பளிப்பு அகம்

14, நவீன சந்தை (வெளிப்புறம்), மின்சாரநிலைய
வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 021 222 2084

# கிறீஸ்து பிறப்பும் சமாதானமும்

நமது சமகால வாழ்வுச் சூழலில் அமைதி, சமாதானம், சந்தோஷம், ஆன்மீக விடுதலை போன்ற நற்செய்தி விழுமியங்கள் பற்றி அதிகம் பேசப்படுகின்றது. அதிலும் தற்போது ஏற்பட்டுள்ள நம் நாட்டு அரசியல் குழப்பங்கள், மீண்டும் ஓர் இரத்த ஆறு ஓடுமா என்ற சந்தேகங்கள் மத்தியிலும் தமிழர்களாகிய நாம் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அனுபவிக்கும் துன்பங்களுக்கும், நினைத்துப்பார்க்க முடியாத மனித அவலங்களுக்கும், கொடூரமான நிகழ்வுகளுக்கும், ஓர் முடிவு வருமா ? நிரந்தர அமைதி கைகூடுமா? என்ற ஆதங்கத்தோடும், அங்கலாய்ப்போடும் எம்வாழ்க்கைப் பயணத்தை நகர்த்துகின்றோம் . வரவிருக்கும் கிறிஸ்து பிறப்பும், புலர இருக்கும் புத்தாண்டும், புதுவாழ்வு தருமா, நாம் எதிர்பார்க்கும் நிலையான அமைதிக்கு, சமாதானத்திற்கு, மகிழ்ச்சிக்கு, நிம்மதியான வாழ்வுக்கு வழிவகுக்குமா இறையாட்சி மண்ணில் மலருமா என்றெல்லாம் ஏங்குகின்றோம். இவை நியாயமான ஏக்கங்கள் எதிர்பார்ப் புக்கள்.

இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போரக்கு ஒளிதரவும், நம்முடைய கால்கள் அமைதிவழியில் நடக்கச்செய்யவும், நம்கடவுளின் பரிவுள்ளத்தாலும், இரக்கத்தாலும், விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது . (லூக்1.78-79) இன்னும் ஏன் ஏக்கம். ஏன் அந்த அங்கலாய்ப்பு. அடிமைத்தளைகளை உடைத்தெறிய. மனித குலம் மீட்படைய இயேசுவிடியலானார். ஏழைகளின் ஏக்கம் போக்க, ஒடுக்கப்பட்டோருக்காய் குரல் கொடுக்க. இயேசு மனிதன் ஆனார். அநீதியை அழித்து, நீதியை, நியாயத்தை, நிலைநாட்டி, அமைதியை ஏற்படுத்தி. அவர் இறைவனின் மகன் ஆனார்.

தம் மனித பிறப்பால் எம்முடன் உறவானார், உயிரானவர், என்றும் உடனிருப்பவர், அன்பு மயமானவர், வாழ்வழித்தோருக்கு நாம்வாழ்வு அளிக்கும்போது, சமூகச் சீரழிவுகளை சீர்தூக்கி சீராக்கும்போது பொய்யான உலகில் உண்மைக்காய் வாழும் போது, போலியான மனிதர்களின் வேலிகளை தகர்க்கும் போது, அநீதி நிறைந்த தற்கால சூழலில் நீதிக்காய் குரல் கொடுக்கையில், போரின் அனர்த்தங்களால் உடல், உளரீதியில் பாதிக்கப்பட்டுள்ள எம்அயலவரின் துயர் துடைக்கும் போது, இருப்பதை இல்லாதவருடன் பகிர்கையில் கிறிஸ்து எம்மில் பிறக்கின்றார்.

சமாதானத்தின் தூதுவனாம் கிறிஸ்து எம் வாழ்வாய் மாறும்போது, எம்மை எதிர்த்து எழ யாரால்முடியும் ? சீயோன்மகளே, மகிழ்ச்சியாய் ஆர்ப்பரி!

**ம.ஆரணி**
கைதடி நுணாவில், சாவகச்சேரி

இஸ்ராயேலே, ஆரவாரம்செய்! ஜெருசலேம் மகளே, உன் முழு உள்ளத்தோடு அகமகிழ்ந்து அக்களி! ஆண்டவர் உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்! இஸ்ராயேலின் அரசனாகிய ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார். அவர் மாவீரர், மீட்பு அளிப்பவர், தம் அன்பினால் உனக்கும் புத்துயிர் அளிப்பார். (செப்ருபானியா3/14-18). எம் இருப்பிற்கு அவரே உயிர், ஊற்று, என் மகிழ்ச்சியான வாழ்வுக்கு, அமைதியான சூழலுக்கு உந்து சக்தியும் அவரே.

இந்த இயேசு மார்கழியில் மட்டுமல்ல மனிதர் வாழ்நாள் முழுதுமே பிறக்க எம் வாழ்வு மாற வேண்டும் . மனிதத்துவத்தில் நாம் வாழும் ஒவ்வொரு கணப்பொழுதும் நிகழ்வதுதான் கிறிஸ்து பிறப்பு எம் உள்ளக்குடில்களில் யேசுபிறந்தால் எம் வாழ்வு மாறும் நிட்சயம் நாம் ஏங்குகின்ற, எதிர் பார்க்கின்ற, நிலையான சமாதானம் எம்மண்ணில் மலரும், நிம்மதியான புதுவாழ்வு உதயமாகும். எம் உள்ளக்குடில்களை இயேசுவிற்காய் என்றும் திறந்திடுவோமா?

செழுமையான மனித வாழ்வு பூவுலகிலும் பூத்துவிட முழுமையான இறையாட்சி இகமதில் உதயமாக நம் நாட்டில் நிலையான சமாதானம் உருவாக மனிதத்தன்மைகள் எம் வாழ்வில் கருவாக பாலகனின் ஆசிகள்.


அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம்மினிய நல்வாழ்த்துக்கள்!
Specialiest in Salvar, Saree, Shirting & Suiting.
நியூ ராகம்ஸ் பட்டுச்சோலை
No. 24,7,8, Modern Market Inside, Jaffna. Tel: 222 7179

அனைவருக்கும் கிறிஸ்மஸ் நல் வாழ்த்துக்கள்!
MRS மகாராசி சில்க்ஸ்
முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு நேரான நிறுவனம்
சேட்டிங்-சூட்டிங், சேட்ஸ்-சோட்ஸ், சோலிகிற், கவுன், சல்வார்கிற், இந்தியன் சாறிகள், பேபி சூட், மற்றும் சிறுவர் சிறுமியர்களுக்கு ஏற்ற ரெடிமேற் ஆடை வகைகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.
59, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம். ☎: 0777 286247

கர்த்தரே தெய்வம்
அன்பர்கள், ஆதரவாளர்கள், விசுவாசிகள், அனைவருக்கும் மேசியாவின் நத்தார் வாழ்த்துக்கள்!
உங்கள் தேவைகளுக்கேற்ப தங்க, வைர நகைகளை நீங்கள் பெற்றிட
நவீன மோஸ்தர்களில் மாசில்லாத நகைகளைப் பெற்றிட உங்கள் அனைத்து உள்ளங்களிலும் நிலைத்து விட்ட இடம்
மேசியா நகை மாடம்
111C, கஸ்தூரியார்.வீதி, யாழ்ப்பாணம். T. P.: 077-6660592

இன்றைய பாலன் பிறந்த பொன்னாளாம் நத்தார் திருநாளில் அனைவருக்கும் எமது நல்வாழ்த்துக்கள்!
எங்கள் 46ஆம் வருட நிறைவை முன்னிட்டு
உன்னதமான மலிவு விற்பனை!
புத்தகங்களுக்கு 20% தொடக்கம் 70% வரையும், உபகரணங்களுக்கு 10% கழிவும் வழங்கப்படும் இந்தியாப் புத்தகங்களுக்கு 3 மடங்கும், 20% கழிவும் வழங்கப்படும்.
ஆல் சிலோன் டிஸ்றிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
அசோகா நகை அகம்
நவநாரீமணிகள் விரும்பும் நாகரீகமான தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்:
Merry Christmas
இல. 111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 6290

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது கிறிஸ்மஸ் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
நியூ சோபனா ஆடையகம்
நவநாகரிகத்துக்கேற்ப அனைத்து ஆடைகளையும் தெரிவு செய்திட நீங்கள் நாட வேண்டிய இடம் :
NEW SHOBHANA TEXTILES
16, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். ☎0777 574027

V.K. Rajaratnam
அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக!
ரேடியோ, கசெற்ஸ், ரீ.வி, வீடியோடெக், மின்விசிறிகள், கொம்பியூட்டர்கள் மற்றும் மின்சாரப் பொருள்கள் பெற்றுக்கொள்ள விஜயஞ்செய்யுங்கள்:
வீ.கே.இராஜரட்னம்
95, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். ☎: 021 222 2056
திருத்திக்கொடுப்பதிலும் விசேஷமான நிறுவனம்

# தந்தை செல்வா காவியம் தந்து அழியாப்புகழ் பெற்ற கவிஞர்



பேசப்பழகி பேச்சாளராக வரலாம். எழுதப்பழகி எழுத்தாளராக வரலாம் ஆனால் நானும் கவிஞனாக வரப்போகின்றேன் என்று கூறி கவிதைகள் எழுதுவதால் மட்டும் ஒருவன் கவிஞனாக வரமுடியாது. பேச்சும் எழுத்தும் பயிறசியால் ஏற்றம் பெறும். ஆனால் கவிஞனோ வெறும் முயற்சியினால் கவிஞனாக மாறமுடியாது. பேச்சாளரையும் எழுத்தாளரையும் உருவாக்கலாம். கவிஞன் அத்தகையவனல்லன். அவனின் பிறப்பிலே கவிதை குடிகொண்டிருக்கும். எனவேதான் கவிஞன் பிறக்கின்றான். பேச்சாளன் உருவாக்கப்படுகின்றான் என்ற கருத்தை கொடுக்கின்ற முறையில் (Poets are born but speakers are made) என்ற கூற்று ஆங்கிலத்தில் எழுந்துள்ளது.

திருவாசகத்தில் வருகின்ற தில்லைக் கூத்தன் என்ற சொற்றொடருக்கும் தில்லைச்சிவன் என்ற சொற்றொடருக்கும் இடையில் பெரும் வேறுபாட்டை நாம் காணவில்லை. எம் நெஞ்சில் நிலைத்து இடம்பெறும் பெயர் தில்லைச் சிவனாகும். காரணம், மிக்க இளமையிலே அவரின் கவிதைகளால் ஆட்கொள்ளப்பட்டவன் நான். இவர் அகவையில் மூத்தவர், அறிவிலும் மூத்தவர். எனவே, மூதறிஞர் தகுதியும் பெற்றவர். இவர் பெற்றெடுத்த பிள்ளைகள் ஏழு. அவர் எழுதிய நூல்கள் பதினேழு. அவரின் கன்னிப் படைப்பு 'கனவுக்கன்னி' என்ற பெயர் தாங்கி வந்தது. இதனையடுத்து 'தாய்' என்ற கவிதை நூல் எம்மை அரவணைக்கின்றது. குஞ்சுக் குழந்தைகளை கண்டால் குட்டி உலகம் என மதிக்கும் இவர், குழந்தைகளின் வஞ்சமிலா வாழ்வில் பாடம் படிக்கும் இவர் 'பாப்பாப்பாட்டு', பூஞ்சிட்டுக்கள்' போன்ற மழலைகளுக்குரிய பாடல்களை வரைந்துள்ளார்.

இவர் படைத்த சிறுகதைகளுள் காவல்வேலி, தம் வரலாற்றின் பட்டுணர்வின் அடிப்படையில் எழுதப்பட்ட அந்தக்காலக் கதைகள் குறிப்பிடத்தக்கவை. இவை நீங்கலாக வேலணை தீவுப் புலவர்கள் வரலாறு, தாழம்பு, தில்லைச்சிவன் கவிதைகள் ஆகியவை எம் நினைவில் நிற்கின்ற நூல்களாகும். 'நான்' என்ற தலைப்பில் தன்னைப் பற்றி எழுதிய தன் வரலாற்றை ஒட்டிய சுய காவியத்தையும் நினைவு கொள்வோமாக.

மேற்குறித்த நூல்கள் அனைத்தும் இவர் பெருமையைப் பேசி நிற்கும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை. எனினும், அவருக்கு எல்லையற்ற அழியாத புகழைத் தந்து நிற்பது அவர் படைத்த இறுதிக் காவியம் 'தந்தைசெல்வா காவியம்' ஆகும்.

இவரின் தகுதியை அறிந்து யாழ்.பல்கலைக் கழக வரலாற்று பேராசிரியர் சிற்றம்பலம் இந்

## நீத்தார் நயப்புரை

நூலுக்கு அளித்துள்ள அறிமுக உரையில் தில்லைச் சிவன் 'தமிழ்ப்பற்றும், சிவபக்தியும் மிக்க சிறந்த அறிஞர். சமகால நிகழ்வில் பங்காளியாகி வாசிப்போரின் மனதைக் கவரும் வண்ணம் தந்தை செல்வாவின் தலைமையில் நடைபெற்ற போராட்ட வரலாற்றினை தந்த அறிஞர் தில்லைச் சிவனுக்கு தமிழுலகம் கடைமைப்பட்டுள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் முகம்



புனர்வாழ்வு புனரமைப்பு நிவாரண நல்லிணக்க அமைச்சின் உலக உணவுத்திட்ட உதவித்திட்ட இணைப்பாளராக இலங்கைத் திட்டமில் சேவை (SLPS) அதிகாரியான இராசதுரை ஜெயமுவானந்தன் நியமனம் பெற்றுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டதாரியான இவர், பொது நிர்வாகத்துறையிலும் பட்டப் பின் டிப்ளோமா (PG. Dip. in Pub. Ad.) பட்டத்தையும் பெற்றவர். எச்சாட்டி, சுதுமலை தெற்கு, மானிப் பாயைச் சேர்ந்த இராதுரை ஜெயமுவானந்தன் இலங்கை திட்டமிடல் சேவை வகுப்பு II தரம் II இல் நியமனம் பெற்று உதவித் திட்டமிடல அதிகாரியாக முதல் நியமனம் பெற்றவர்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனான இவர், சுதுமலையூர் திரு.திருமதி இராசதுரை - மருதனாச்சிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் ஆவார். (8-185)



வலிகாமம் கல்வி வலயத்தில் திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய வைத்திலிங்கம் சச்சிதானந்தன் 39 வருட அரச சேவையைப் பூர்த்திசெய்து கடந்த செப்ரெம்பர் 9 ஆம் திகதி ஓய்வுபெற்றுள்ளார்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், அச்சுவேலி கிறிஸ்தவக் கல்லூரி, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி ஆகியவற்றில் தமது கல்வியை மேற்கொண்டவர். 1965ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் இணைந்துகொண்டார்.

சேவைக்கால ஆலோசகராகவும், பாடசாலை அதிபராகவும், பருத்தித்துறை, கரவெட்டிக் கோட்டக் கல்வி அலுவலகங்களில் திட்டமிடற் பணிப்பாளராகவும் கடமையாற்றிய இவர், யாழ்ப்பாணம் வலயம் இரண்டின் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி ஓய்வுபெறும் வரை வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடற் பிரிவின் பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். (8-152)



தொல்புரம் மூளாய் ஐக்கிய பரஸ்பர சாகாய சங்க நிர்வாகிகளில் ஒருவரான ச.கைலாசநாதன், அதிபர் பதவியிலிருந்து தெல்லிப் பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதிவு உயர்வு பெற்றமையைப் பாராட்டி மேற்படி சங்கத்தினரால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் சங்கத்தின் தலைவர் தி.உதயசூரியன் விழாநாயகருக்கு மாலை அணிவித்து வரவேற்றார்.

(8-28)



டயலொக் ஜீ.எஸ்.எம். நிறுவனத்தால் கடந்த வருடம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மாவட்ட ரீதியாக வழங்கப்பட்ட புலமைப்பரிசிலிற்கு மல்லாவி மத்திய கல்லூரி மாணவியான சுகர்ண்யா ஆதித்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தற்போது உயர்தர கணிதப் பிரிவில் கற்கும் இவர், மேற்படி பரீட்சையில் 8A,B,C பெறுபேறு பெற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன்மை நிலையைப் பெற்றார்.

(ஐ-322)



செல்வி துஷாந்தி சிறீஸ்கந்தசெல்வன் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் 09.12.2004 ஆம் ஆண்டு வியாழக்கிழமை பிரதம நீதியரசர்கள் உட்பட உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கா முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சிறீஸ்கந்தசெல்வன் (அமைப்பாளர் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) கனகாம்பிகை (முன்னாள் உத்தியோகத்தர், யாழ். செயலகம்) ஆகியோரினது சிரேஷ்ட புதல்வியும் யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும் கொழும்பு பல்கலைக்கழக சட்டமாணிப் பட்டதாரியும் ஆவார். (ஐ)

# நூல்வரிசை



நூல்: சபரீசகானம் பக்திப் பாமாலை
ஆசிரியர்: பிரம்மஸ்ரீ கி.அரிகரசுதசர்மா
வெளியீடு: சபரீச ஐயப்பன் தேவஸ்தானம், கோண்டாவில்.

மக்கள் மத்தியில் மதங்களையும் அவற்றின் பெருமைகளையும் புரியவைக்கும் நோக்குடன் எழுச்சி பெற்றவையே சமய நூல்கள் ஆகும். அந்தவகையில், சபரிமலையில் மூலமூர்த்தியாக வீற்றிருந்து அடியார்களுக்கெல்லாம் அருள் பாலித்துக்கொண்டிருக்கின்ற ஐயப்பனின் பெருமைகளையும் விரத முறைகளையும் உச்சாடனம் செய்யும் மந்திரங்களையும் தன்னகத்தே கொண்டமைந்ததாகக் காணப்படுகின்றது 'சபரீசகானம்' என்ற பக்திப்பாமாலை.

ஐயப்பனின் பெருமைகளையெல்லாம் ஈழத்திரு நாட்டிலே பரப்பவேண்டும் என்ற பெரு நோக்கோடு பிரம்மஸ்ரீ கி.அரிகரசுதசர்மா கோண்டாவில் கிழக்கில் பதினெட்டுப்படிகளோடு கூடிய ஓர் ஆலயத்தை அமைத்து ஐயப்பனின் பெருமைகளை மக்கள் கற்றுப் பரவசமடையுமாறு 'சபரீசகானம்' என்ற பக்திப் பாமாலையை வெளியிட்டுள்ளமை இந்து மதத்திற்குக் கிடைத்த ஒரு பெரும் வரப்பிரசாதமாகும். கோண்டாவிலில் அமைந்துள்ள ஐயப்பன் ஆலயத தின் தோற்றத்தினை அட்டைப்படமாகத் தாங்கிய இந்த நூலின் உள்ளே சென்றதும், ஆலயத்தின் கற்பக்கிரகத்திலே வீற்றிருக்கின்ற ஐயப்பனின் அழகுறு வடிவம் காட்சியளிக்கின்றது.

வெளியீட்டுரையில், இந்நூலை ஐயப்ப பக்தர்கள் நாடெங்கும் அதிகரிக்கவேண்டும், விரதம் அனுட்டிப்போர் ஆசாரசீலர்களாகச் சரியான விரத முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுவதற்கு ஏற்றாற்போல் இந்த நூலில் பஜனைப் பாடல்கள், தத்துவங்கள், வழிபாட்டு முறைகள் மற்றும் மந்திரங்களை உள்ளடக்கி வெளியிட்டுள்ளோம். இது ஐயப்ப பக்தர்களுக்குப் பயனுள்ளதாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார் நூலாசிரியர் கி.அரிகரசுதசர்மா.

ஆசியுரைகளை மூன்று அந்தணப் பெருமக்கள் வழங்கியுள்ளார்கள். அண்ணாமலை சர்வ கலாசாலை சிவாச்சார்ய கலாநிதி பூரண தியாகராஜக் குருக்கள் தனது வாழ்த்துச் செய்தியில் நூலாசிரியர் பிரம்மஸ்ரீ கி.அரிகரசுதசர்மா அவர்களைப் போற்றியதுடன், இந்த நூலைப் படிப்பதன்மூலம் நோயற்ற வாழ்வும் குறையற்ற செல்வமும் மன அமைதி முதல் விரும்பிய பேறுகளையும் பெறலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னிந்தியா தமிழ்நாட்டில் உள்ள ஸ்ரீகைலாசநாத வேதசிவாகம பாடசாலையின் ஸ்ரீவித்யாகுரு குருஜீ ஸ்ரீ.ந.பரமேஸ்வர சிவாச்சாரியார், கோண்டாவில் சிவபூதவராஜர் தேவஸ்தான பிரதம குரு பிரம்மஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாதக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கியுள்ளனர். உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் ஆலயத்தின் பிரதம குருவும் கோண டாவில் சபரீச ஐயப்பன் ஆலயத்தின் மகோற்சவக் குருவுமாகிய வேதசிவாகம ஞானபானு க.மு.சோமசுந்தரக் குருக்களின் வாழ்த்துச் செய்தியும், கந்தர்மடம் ஸ்ரீசெல்வநாகபூசணி அம்மன் ஆலயக் குரு வேதாகம வித்வ சிரோமணி சிவஸ்ரீ பா.ஏகநாதக் குருக்களின் வாழ்த்துச் செய்தியும் இடம்பெற்றுள்ளன.

நூலின் பின் அட்டையிலே சபரிமலை ஐயப்பன் தேவஸ்தானம், ஐயப்பனின் தோற்றம் பற்றிய வரலாறு மற்றும் மகிஷி வர்த்தனம் ஆகிய காட்சிகளைக் கொண்ட அழகுறு படம் பல வர்ணங்களில் தத்ரூபமாக வரையப்பட்டுள்ளது.

ஆகவே, ஐயப்பனின் யாத்திரை இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற இக்காலப்பகுதியில் இந்தநூல் வெளியிடப்பட்டிருப்பது விரதமனுஷ்டிப்பவர்களுக்கும் ஐயப்பனின் பூர்வீக வரலாற்றை அறிய அவாவுறுபவர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாகும்.

**- தெல்லியூர் சி.ஹரிகரன்.**



நூல்: நாட்பட்ட சிறுநீரக செயலிழப்புக்குள்ளான நோயாளர்களுக்கு சில யோசனைகள்.
ஆசிரியர்:- வைத்தியக் கலாநிதி த.பேரானந்தராசா (பொதுவைத்திய நிபுணர்)
வெளியீடு:- மருத்துவச் சங்கம், கிளிநொச்சி

ஈழத்தில் கலை இலக்கியத் துறைக்கென சஞ்சிகைகளும், சிற்றிதழ்களும் வெளிவருதல் வளர்ச்சி பெற்றுக்கொண்டே செல்கின்றது. அவ்வாறே மருத்துவத்துறை சார்ந்த வெளியீடுகள், சஞ்சிகைகளாக, கட்டுரைத் தொகுதிகளாக, எழுத்துருக்களாக வெளிவருதல் ஆங்காங்கே குறிப்பிடக்கூடிய அளவிற்கு நடைபெற்றுவருகின்றன.

இந்த வகையில், கிளிநொச்சி மருத்துவ சங்க இதழ் வெளியீடான 'நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்குள்ளான நோயாளர்களுக்கு சில ஆலோசனைகள்' என்ற தலைப்பிலான இதழ் வாசகர்கள் ஒவ்வொருவரும் வாசித்துப்பயன் பெறக்கூடியதாகும். 'நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்குள்ளான நோயாளர்களுக்கு சில ஆலோசனைகள்' என்ற தலைப்பிலே டாக்டர். த.பேரானந்தராஜா, பொது வைத்திய நிபுணர் மிகவும் சிறந்த முறையிலே எல்லோருக்கும் எளிதாக விளங்கக்கூடிய வகையில் கருத்துக்களை விளக்கியுள்ளார். சிறுநீரகம் தொடர்பான தொழிற்பாடு, அதனைப் பாதுகாத்தல், சிறுநீரக அமைவிடம், நீரிழிவும் சிறுநீரக நோய்களும் போன்ற சிறு சிறு தலைப்பிலே வைத்தியர் இன்றியே விளங்கக்கூடிய வகையில் அழகுற எடுத்துக்கூறியுள்ளார். சிறுநீரகத்தின் தொழிற்பாடு குறைவடைவதைக் காட்டும் ஆரம்ப அறிகுறிகள் எவையென்பதை இலகுவாக விளக்கியுள்ளார். மேலும் சிறுநீரக செயலிழப்பு ஏற்பட்டவர்கள் பின்பற்ற வேண்டிய உணவுமுறை, சிறுநீரக செயலிழப்பின் போது பயன்படுத்தப்படும் மருந்து வகைகள், நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு மற்றும் இறுதி நிலை சிறுநீரக செயலிழப்பு ஏற்படும்போது செய்யக்கூடிய சிகிச்சை வழிகள் மற்றும் வீட்டில் செய்யக்கூடிய சலப் பரிசோதனை செய்யும் முறைகள், நோய் வராமல் தடுப்பதற்கு இலகுவாகச் செய்யக்கூடிய பயிற்சிகள் எனபவற்றை மிகவும் இலகுநடையிலே சிறுசிறு வினாக்களை வினாவும் முறையிலே விளக்கி எழுதி அனைவருக்கும் பயன்படக்கூடிய மகத்தான பணி புரிந்துள்ளார். டாக்டர் த.பேரானந்த ராஜாவின் பணி பாராட்டிற்குரியதாகும். இவர் மேன்மேலும் பொதுமக்கள் பயன்பெறும் வகையிலே இத்தகைய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்நூலை அனைவரும் உள்வாங்க வேண்டும். பேரானந்தராஜாவின் ஆக்கச் செயற்பாட்டிற்கு பாராட்டுத் தெரிவிப்பதுடன், அவர் இன்னும் பல விடயங்களை எழுதி வெளியிட வேண்டுமென விநயமாக வேண்டுகின்றோம்.

**வைத்திய கலாநிதி ச.ஜெகராஜா**
பொது வைத்திய நிபுணர், மாவட்ட வைத்தியசாலை, கிளிநொச்சி.



நூல்: பொன் விழா மலர் (1954-2004)
கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்
வெளியிடுவோர்: மலர் வெளியீட்டுக் குழுவினர்

1954ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கிளி/ வட்டக்கச்சி மகா வித்தியாலயம் தனது 50 ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக வெளியிடப்பட்ட பொன் விழா மலர் தேடல் உள்ள உள்ளங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

பாடசாலையின் முகப்புத் தோற்றத்தையும், இலச்சினையையும் முகப்புத் தோற்றமாகக் கொண்டுள்ள இம்மலர், இப்பாடசாலையில் கல்விகற்று மண்ணிற்காய் தமைசர்ந்த மாவீரர்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளமை சிறப்பானதோர் அம்சமாகும். பல பெரியார்களினதும் அதிகாரிகளினதும் ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகளையும் தாங்கியுள்ள இம்மலர் அவர்களது படங்களையும், பாடசாலைசார்ந்த படங்களையும் தெளிவான வர்ணப்படங்களாகக் கொண்டுள்ளது.

பாடசாலையின் கடந்த 50 வருட கால அதிபர்களது பெயர் விவரங்களையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களது பெயர்களையும் பல்கலைக்கழகம் சென்றவர்களது பெயர்களையும் தாங்கியுள்ளதுடன் 50 வருட வரலாற்றையும் சுருக்கமாகக் கூறியிருப்பதும் இம்மலருக்கு வலுவூட்டுவனவாகும். கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கி.சின்னராசாவின் கல்வி வளர்ச்சியில் நூலகங்கள் எனும் ஆக்கமும் கரைச்சிப் பிரதேச சபையின் உள்ளூராட்சி உதவியாளர் செல்வி மணிமேகலை குமாரசாமியின் 'ஈழத்து எழுத்திலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியப் பாதிப்புகள் ஒரு பார்வை' எனும் ஆக்கமும் கொழும்பு றோயல் கல்லூரி தமிழ்ப்பிரிவு அதிபர் மா.கணபதிப்பிள்ளையின் '50 ஆண்டுகளில் சாதித்தது என்ன? அடுத்த பத்துக்களில் என்ன செய்யப்போகின்றோம்' எனும் துணிகரமான ஆக்கமும் இம்மலரை மேலும் வலுவாக்கியுள்ளன. அத்துடன், ஆசிரியர்கள், மாணவர்களது கவிதை, கட்டுரை, ஆங்கில ஆக்கங்கள், சிறுகதைகள், பாடல்கள் என பல கோணங்களிலிருந்தான ஆக்கங்களும் தரமானவையே. இங்கு மாணவர்களது எழுத்தாற்றலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதும் ஒரு சிறப்பாகும்.

எனவே, இம்மலரானது பாடசாலையின் வரலாற்றினை மட்டுமன்றி பயனுள்ள பல விடயங்களையும் தாங்கி வெளிவந்திருக்கின்றது. இது ஒரு நேர்த்தியான கணனிப்பதிப்பாக வெளிவந்திருக்கின்றது.

**தி.சிவரூபன்**



உ

புங்குடுதீவு மேற்கு -. இறுப்பிட்டி

## அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலயம்

**ஐங்கரன் அடியார்களே,**

புங்குடுதீவு மேற்கு அரியநாயகன்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் - திருவிழா 16.01.2005 இல் ஆரம்பமாக உள்ளதால் திருவிழா சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நாளை 26.12.2004 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆலய முன்றிலில் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு.ஆ.பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. ஆகவே, தயவுசெய்து நிர்வாக சபை உறுப்பினர்களும் திருவிழா உபயகாரர்களும் தவறாது சமுகமளித்து பரிபாலனசபையுடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

புங்குடுதீவு-06. **-ஆலய பரிபாலன சபையினர்.**

(40027)(42-14-13-12)

## கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக் கழகம்

புத்தாண்டை வரவேற்கும் முகமாக நடத்தும்

*பரிசளிப்பு நிகழ்வும், கலைவிழாவும் - 2004*

**கலைநிகழ்ச்சிகள்:**

- பரதநாட்டியம்
- பட்டிமன்றம் "சீதனக் கொடுமையால் பெரிதும் பாதிக்கப்படுவது ஆண்களா?, பெண்களா?"
- மயிலங்காடு வெற்றிவேல் கலாமன்றம் வழங்கும் "விதியின் பயணங்கள்" நாடகம்
- தேசிய விருது பெற்ற வடமராட்சி பாஸ்கரன் குழுவினரின் "புதிய நிர்மாணிப்பு நடனம்"

இடம்: **கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கலையரங்கம்**
காலம்: 26.12.2004 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: **மாலை 4.00 மணி**
T.P.: 021 222 6712.

குறிப்பு: 26. 12. 2004 அன்று காலை 6. 00 மணிக்கு 'மரதன் ஓட்ட நிகழ்வு' கிறிஸ்தவ கல்லூரியிலிருந்து ஆரம்பமாகும். பதிவுகளைக் கல்லூரியிலும், சோபி கொமினிகேசனிலும் நிகழ்வு ஆரம்ப இடத்திலும் மேற்கொள்ளலாம்.

(40046)(42-13-14-12)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 14 - 02 - 1919 | 21 - 12 - 1998 |

அமரர்


**சாமிநாதக்குருக்கள்**
**சிவஸ்ரீ பஞ்சாட்சரக் குருக்கள்**
(மானிப்பாய்)

ஆண்டுகள் ஆறு ஆனதோ - ஐயா?
ஆறாத்துயரில் தவிக்கின்றோம் - ஐயா!
மீளாத்துயில் கொண்ட உம் முகத்தை நாம்
மீண்டும் ஒருமுறை காண்பதெப்போ ஐயா?
ஆண்டுகள் ஆறு போனாலும் ஐயா உம்
ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம் ஐயா!

சந்தைபடி,
மானிப்பாய். (39941)(12-14-13)

ப.விநாயகமூர்த்தி குருக்கள்
(மகன்)
குடும்பத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 25 - 12 - 1914 | 02 - 01 - 1998 |

**அமரர் மு.பொன்னம்பலம்**
(இளைப்பாறிய அதிபர்)

அன்புடனும் பண்புடனும் எம்மை வழி நடத்தி
சுற்றத்தார் அயலோர் அனைவருக்கும் வழிகாட்டி
எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திய எம்
ஐயாவே!

என்றும் உமை மறவா குடும்பத்தினர்

கெருடாவில்,
தொண்டைமானாறு. (40030)(12-13-14)

மனைவி, மகள்
பேரப்பிள்ளைகள்.

## தந்தைசெல்வா ...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என் மொழியும் கூற்றுக்கு நாமும் வழிமொழி கூறும் நிலையில்தான் இருக்கின்றோம்.

தன் நூலுக்கு வெளியீட்டுரை வழங்கியுள்ள தில்லைச்சிவன் அவர்கள் 'மாயமான்கள் போல வந்து முன்னின்ற மந்திரி பதவிகளில் ஆசைப்படாதவர். சட்டத் தொழிலால் தான் உழைத்த பெரும்பொருளையும் தமிழரின் விடுதலைக்காக செலவிட்டு ஒட்டாண்டியான ஒரே த்லைவர் தந்தை செல்வா என்று அவர் கூறும் கூற்று தந்தை செல்வா அவர்களை அப்படியே படம்பிடித்துக்காட்டுகின்றது.

தனது காவிய நூலில் 'தமிழீழப் போற்றிசை' என்ற தலைப்பில்

**இலங்கை வாழும் நாம் தமிழர், எல்லோரும் ஒரே சாதி**
**ஈழம் எங்கள் தாய்நாடு. இனிய தமிழே எமது மொழி**
**தலம் புகழும் கோணமலை, தையல்பாகர் கோவிலுடன்**
**இலங்கு திருக்கேதீஸ்வரமும், எம்**
**வரலாற்று இருப்புக்களாம்"**

என்ற வரிகள் வாயிலாக எம் வரலாற்றுக் களஞ்சியங்களை அடிக்கடி மறதிக்கு ஆளாகின்ற தமிழருக்கு நினைவூட்டுகின்றார்.

**மீன்பாடும் தேன்நாடும், மேரி அருள் சேர் மன்னாரும்**
**வான் பாயும் குளமருங்கா, வயல் வன்னி வளநாடும்**
**கானும் நெடிய கடலும், மீன் சேர் படுக்கைகளும்**
**பேணும் துறைமுகங்கள் பலவும் பெற்ற எம் தமிழீழம்'**

என்ற பாடல் வரிகள் வாயிலாக, தமிழீழத்தின் பல்துறை வளங்களையும் தமிழீழத்தின் எல்லைகளையும் ஏற்றமுற எடுத்துரைக்கின்றார்.

தோன்ற இருக்கின்ற தமிழீழத்தின் தலைநகராக விளங்கப்போவது திருமலை. இதனை நினைவு கொண்டு.

**'துறைமுகமும் தலைநகரும்,**
**தோப்புகளும் கோணேசர்,**
**உறையுந்தென் கைலைமலை**
**உலாந்தேயர் கோட்டையொடு,**
**நிறைநீர்க்கந் தளாய்குளத்து நீராம்பற் பூமலர்த்தி,**
**சிறையார்வண் டினம்பாடும் திருமலை சேர் தமிழீழம்**

எனறு திருமலையின் புகழை அவர் பாடுகின்றபோது, திருமலையின் புகழை மட்டும் நாம் செவிமடுக்கவில்லை. மாறாக, அவர் பாடலில் வரும் சிறையார் வண்டினம் பாடும் என்ற சொற்றொடர் 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திரு ஞானசம்பந்தரின் தேவாரப்பாடலையும் எம் நினைவலைகளில் மோதச் செய்கின்றது.

மதங்கடந்த நிலையில்தான் தமிழன் வாழ்வு மலரமுடியும் என்ற அவரின் உள்ளத்து உணர்வுகளை எடுத்துரைக்கும் முறையில்

**புத்தம் எங்கள் மதம், புதிய சைவ சித்தாந்தம்**
**இஸ்லாம் கிறீத்துமுது , இந்துமதம் என்று உள**
**எம்மதமும் சம்மதமா, யேத்தியிறை யேகனென்றே**
**அம்முதல்வன் தனைத்தேடும் அஸ்திகரின் தமிழீழம்**

என்ற இப்பாடல் வரிகள் தமிழீழத்தில் சமயப் பொதுமை நிலவவேண்டும் என்பதில் நம் தில்லைச்சிவன் உறுதியாக இருக்கின்றார் என்பதை வெளிப்படுத்துகிறது.

தில்லைச்சிவன் அவர்களை வெறும் கவிஞனாகவோ கதாசிரியனாகவோ அல்லது அரசியல் ஆய்வாளராகவோ நாம் காணவில்லை. இவை அனைத்தையும் மிஞ்சுகின்ற அளவிற்கு 'பண்புடைமையின் திருவுருவமாக' அனைவரையும் ஆட்கொள்கின்ற ஒரு சான்றோனாகவே நாம் அவரைக் காண்கின்றோம்.

**-மா.க.ஈழவேந்தன்**


**CATWAS.COM**

O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவருக்கான புதிய பிரிவுகள்

**Diploma Courses**
- MS-Office 1750/-
- DTP 2000/-
- Hardware 1500/-
- Web page 3000/-
- Video Mixing 2500/-

**Certificate Courses**

- O/L பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு! உங்கள் பெறுபேறுகள் வரும் காலப்பகுதிக்கு முன்னர் உங்கள் கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்ய முடியும்.
- MS-Office பாடநெறியில் இணைவோருக்கு மட்டும் அனுமதிக்கட்டணம் இல்லை.
- MS-Office பாடநெறியில் கற்கும் மாணவர்களுக்கு Internet & E-mail இலவசம்.
- பதிவுகள் அனைத்தும் 31.12.2004இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.

No: 26, Somasundram Avenue,
Chundikuli, Jaffna.
(சி-40015) **T.P.: 021 2223805** (24-13-14-12)


## ஈரவிழிகளுடன் ஈராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 19 - 06 - 1925 | 18 - 12 - 2002 |

**திருமதி பூமணி வீரவாகு**

திதி 25.12.2004

எங்கள் அன்புத் தெய்வமே!
அன்பாய் அரவணைத்து ஆதரவாய் வளர்த்தெடுத்து
விண்போல் உயர்த்தி விட்டு வேதனையில் நாம் தவிக்க
மண்ணுலகை விட்டு மறைந்த எம் தெய்வமே!
நாம் அழுது புலம்புகையில் ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ
தோற்றம் மறைந்தாலும் துயரங்கள் மறையவில்லை
காலம் கரைந்தாலும் கவலைகள் தீரவில்லை
ஞாலம் விட்டு அகன்றாலும் நீங்கள்
எம் நெஞ்சை விட்டு அகலவில்லை
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கும்.
உங்கள் ஆத்மா இறையருள் பெற்று சாந்திபெற
எங்கள் கண்ணீரால் அர்ச்சிக்கின்றோம்.

7ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (C/40018)(12-13-14)

குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12 - 12 - 1921 | 26 - 11 - 2004 |

**அமரர் வீ.சு.நடராசா**
(இளைப்பாறிய உதவி ஆணையாளர், விற்பனைத் திணைக்களம்)

எமது பாடசாலை அதிபர் திரு. பொ.அருமைச்சந்திரனின் மாமனாரும், முன்னாள் ஆசிரியர் திருமதி தேவகி அருமைச்சந்திரனின் தகப்பனாரும், எமது பழைய மாணவன் செல்வன் ரமணனின் பாட்டனாரும் ஆகிய இவரின் ஆத்மசாந்திக்காக நாமும் பிரார்த்திப்பதோடு அவர்களின் துயரிலும் பங்கு கொள்கிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
(39894)(12) மு/கற்சிலைமடு அ.த.க.பா.,ஒட்டுசுட்டான்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## 46 ஆம் நாள் நினைவஞ்சலியும் 51 ஆவது பிறந்த தினமும்



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 25 - 12 - 1953 | 10 - 11 - 2004 |

**அமரர் குகதாசன் கமலினி**

அன்னையென தந்தையென
அருகிருந்து அப்போயை
மேன்மை பெறச் செய்வதற்குள்
முழுப்பலத்தைக் காட்டியதேன்
கண்ணயர்ந்து தூங்குதற்கோ?
காலன் வழிசெய்வதற்கோ?
என்னவளே? உன்போல்
ஒளி காட்ட யாருமில்லை!

"குக கமலவாசம்"
காளிகோயிலடி, உடுவில், சுன்னாகம்.
தொ. பே. இல : 0777 6544558 (40042)(12-13-14)

தகவல்:
த.குகதாசன்.

## வலுவிழந்தோருக்கு உதவிப்பொருள்கள்

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவில் ஊனமுற்றோர்களுக்கு மூன்று சக்கர துவிச்சக்கரவண்டிகள், உடுபுடைவைகள் என்பனவும் சமூக நல அமைப்பின்மூலம் பாடசாலைச் சிறார்களுக்கான உபகரணங்களும் - நேற்று வெள்ளிக்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன.

'யுனிசெவ்' நிறுவனத்தின் அன்பளிப்பான மேற்படி பொருள்களை 27 பயனாளிகள் பெற்றுக் கொண்டனர். உதவி அரச அதிபர் பணிமனையின் பிரதம எழுதுநர் கா.ஜெகபாலன் இவற்றை உரியவர்களிடம் கையளித்தார். (எ-111)

## நடுவர் தெரிவிற்கான பயிற்சி வகுப்பு

வடமராட்சி கரபந்தாட்ட சங்கம் நடத்தும் நடுவர்களைத் தெரிவு செய்வதற்கான பயிற்சி வகுப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்களை இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-5-204)

# தேசியத் தலைவரின் பணிப்பின் பேரில் போரினால் பாதிப்புற்றோருக்குப் புனர்வாழ்வு

### நடைமுறைப்படுத்தப்படும் என்கிறார் கேணல் பானு



கிளிநொச்சி,டிசெ.25

தமிழீழத் தேசியத் தலைவரின் வேண்டுகோளின் பேரில் மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதியில் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய புனர்வாழ்வுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு - அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானு தெரிவித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புதிய புனர்வாழ்வுத் திட்டத்தை வைபவரீதியாக நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான வைபவம் கரடியனாறு மகாவித்தியாலய மண்டபத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டப் பணிப்பாளர் எஸ்சுஸ்வர் தலைமையில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள குடும்பங்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் தையல் இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், விவசாய உபகரணங்கள், சேமிப்புப் புத்தகங்கள் ஆகியன வழங்கப்படவிருக்கின்றன. முதற்கட்டமான நேற்று முன்தினம் 50 பேருக்கு இவை வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் கலந்துகொண்ட மட்டு - அம்பாறை கட்டளைத் தளபதி கேணல் பானு உரையாற்றுகையில்:-

எமது தேசியத் தலைவரின் வேண்டுகோளின படி போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மகளுக்கு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 70 தொண்டர்கள் மூலம் 4 ஆயிரம் மாவீரர்களின் பெற்றோர்கள் இனங்காணப்பட்டுள்ளார்கள் இவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு என்றார்.

எமது பிரதேசத்தில் முக்கிய பிரச்சினை போஷாக்குப் பிரச்சினையாகும். இதனை நிவர்த்தி செய்ய பயன் தரு மரங்களையும், போஷாக்கு நிறைந்த பயிர்களையும் வளர்க்க மக்கள் முன்வரவேண்டும் எனவும் கேணல் பானு குறிப்பிட்டார்.

மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மாவட்ட துணைத் தளபதி பிரபா, புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்கள். (8-12)

### பருத்தித்துறை வைத்தியசாலையில் பணிபுரிந்த

# மயக்க மருந்து நிபுணர் தாயகம் திரும்பினார்

வடமராட்சி,டிசெ.25

உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையுடன், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கடந்த ஒரு வருடகாலமாக மயக்க மருந்து ஏற்றும் நிபுணராக கடமையாற்றிய டாக்டர் பியர் தனது ஒரு வருடகால சேவையை முடித்துக்கொண்டு சொந்தநாடான பிரான்சுக்குத் திரும்பியுள்ளார்.

இவ்வைத்தியசாலையில் உலக உணவு நிறுவனத்தின் அனுரணையுடன் சுமார் இரண்டு வருடங்கள் கடமையாற்றிய பிரான்ஸை சேர்ந்த சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் செல்வி வெரனிக்காவுக்கு உதவியாக மயக்க மருந்து ஏற்றும் நிபுணராக இவர் கடமையாற்றி வந்தார். டாக்டர் வெரனிக்கா தனது பதவிக்காலம் முடிந்து தாயகம் திரும்பியதைத் தொடர்ந்து கடந்த 6 மாதங்களாக மயக்க மருந்து ஏற்றும் நிபுணர் டாக்டர் பியர் சத்திரசிகிச்சை கிளினிக்குகளை நடத்தியும் சத்திரசிகிச்சைகளையும் மேற்கொண்டு வந்துள்ளார்.

இவர் தாயகம் திரும்பியதையடுத்து உலக உணவு நிறுவனத்தின் அனுசரணையுடன் இவ் வைத்தியசாலையில் நடைபெற்று வந்த வைத்திய சேவையும் முடிவுற்றது. (8-173)



யாழ்.குருநகர் சென்.றோக்ஸ் சனசமூக நிலையத்தின் இளந்தலைமுறை கழகத்தினர் மிக உயரமான நத்தார் தாத்தாவின் மூலம் 'கரோல்' நிகழ்ச்சியை நடத்திவருகின்றனர்.

இதன் மூலம் கிடைக்கும் பணத்தை அப்பகுதியில் உள்ள வறிய மாணவர்களின் கல்விக்காகப் பயன்படுத்தவுள்ளதாகத் தெரிவித்தனர். (8)

# கிராம உத்தியோகத்தர்களுக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவில்லை

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ். மாவட்டத்தில் புனர்வாழ்வுக் கடமைகளில் ஈடுபடும் கிராம உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லையென வடக்கு - கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையீடுசெய்துள்ளது.

1995ஆம் ஆண்டிலிருந்து புனர்வாழ்வுக் கடமையில் ஈடுபடும் கிராம உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் மேலதிக கொடுப்பனவு வழங்குமாறு சகல மாவட்டச் செயலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அரசு அறிவித்திருந்தது.

ஆயினும் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால் பாதிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்கள் சங்கத்தின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளனர். (8-202)

### திஸநாயக்கா மீதான தண்டனை

# நாயிலும் கேடு கெட்ட தீர்ப்பு என்கிறார் சந்திரசேகரன்

கொழும்பு,டிசெ.23

எஸ்.பி.திஸநாயக்க தனது உரையில், நாய்த் தீர்ப்பு எனக் கூறினார் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டிருக்கின்றார். ஆனால் அவருக்கு இரண்டு வருட கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்தது, நாயிலும் கேடு கெட்ட தீர்ப்பு என்று கூறுவதற்கு நான் அச்சப்படவில்லை.

சிறைத்தண்டனைகளையும், துன்புறுத்தல்களையும் அனுபவரீதியாக உணர்ந்தவன் நான் அதனால் எனக்குப்பட்டதை நான் கூறுவதில தவறில்லை - என்று சவால் விடுத்தார் மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி.சந்திரசேகரன். கொழும்பு ஹைட்பார்க் திடலில் எஸ்.பி. திஸநாயக்கவின் விடுதலை கோரி நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

சந்திரசேகரன் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:-

நாடு முழுவதிலுமிருந்தும் பெருந்திரளான மக்கள் இங்கே கூடியிருந்தாலும் இந்நிகழ்ச்சி மகிழ்ச்சியான நிகழ்ச்சியல்ல. ஒவ்வொருவரினதும் மனதிலும் வேதனையின் பாரத்தைச் சுமத்துகின்ற நிகழ்வாகவே இதனைப் பார்க்கின்றேன்.

மலையக மக்கள் முன்னணியின் சார்பில் நான் இதில் கலந்துகொள்வது எஸ்.பி. திஸநாயக்க என்ற தனிநபருக்காக அல்ல. ஜனநாயக ரீதியில் சுதந்திரமாக செயற்படுபவர்களுக்கு இதுபோன்ற துன்பகரமான சம்பவங்கள் நடக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகவே.

நானும் அரசியல் பழிவாங்கல் படலத்தில் மூன்றுமுறை சிறை சென்றிருக்கின்றேன். தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் தடுப்புக் காவலில் இருந்தவன் நான்.

ஒரு கருத்தை மக்கள் மத்தியில் எடுத்து செல்லும் போது ஏற்படும் இடர்பாடுகள் பற்றி நன்றாக அறிந்தவன் என்ற ரீதியில் எஸ்.பி. இந்த ஆபத்திலிருந்து விடுபட வேண்டும் என்ற ஆதங்கம் எனக்கும் உள்ளது.

நீதிமன்றத் தீர்ப்புகளை சந்தேகங்களை அடிப்படையாகக்கொண்டு விமர்சன ரீதியாகக் கருத்து தெரிவிப்பதை நான் குற்றமாகக் கருதவில்லை. இந்தக் கருத்து சுதந்திரம் உலகம் எங்கும் மதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆனால், எஸ்.பியின் உரையில் ஒரே ஒரு சொல்லை மட்டும் குற்றமாக கருதி இரண்டு வருடங்கள் சிறையில் தள்ளுவது சரியானதா என்பதை சிந்திக்க வேண்டிய அவசியம் நாட்டு மக்கள் சகலருக்கும் இருக்கின்றது - என்றார். (ஐ-க)

# பிரதான பரீட்சைகளின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்படுகின்றன

கொழும்பு,டிசெ.25

தரம் 5 புலமைப்பரிசில் ஜி.சீ.ஈ சாதாரண தரம், ஜி.சீ.ஈ உயர்தரம் ஆகிய பிரதான பரீட்சைகள் மறு சீரமைக்கப்படவிருக்கின்றன.

இதற்கென விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு பரீட்சை மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்த விசேட குழு, தேசிய கல்வி நிறுவனம், தேசிய கல்வி ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சு ஆகியவற்றின் கீழ் நியமிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. கல்வி நிபுணர்கள், கல்விமான்கள் போன்ற கல்வித்துறையைச் சேர்ந்தவர்கள் இக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இப்பரீட்சைகளின் உள்ளடக்கம், கட்டமைப்பு போன்றவை மறு சீரமைப்புக்குள்ளாகவிருக்கின்றன. 2005ஆம் ஆண்டில் இந்த கல்வி சீர்திருத்தங்கள் முற்றுப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரச்சினைகளைத் தீர்க்கும் தகைமை, பகுப்பாய்வுத்திறமை போன்றவற்றை மாணவர்கள் மத்தியில் வளர்க்கும் நோக்கத்துடன் இந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிகின்றது.

சீர் திருத்தங்கள் முழுமைபெற்றதும் அது தொடர்பான அமைச்சரவை பத்திரம் ஒன்று தயாரிக்கப்படும் என்றும் அதன்பிறகு சீர்திருத்தங்கள் அமுல் செய்யப்படும் என்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் ஜெகத் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ப)

# உலக வங்கியின் நிதியுதவியுடன் 21 ஆயிரம் வீடுகள் புனர்நிர்மாணம்

### நான்காண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.25

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் 21 ஆயிரம் வீடுகள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக யாழ்.மாவட்டத்தில் 4 பிரதேச செயலர் பிரிவுகளில் 5 கிராமங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

தெரிவு செய்யப்படும் 5 கிராமங்களிலிருந்தும் 25 வீடுகள் வீதம் 125 வீடுகள் பரீட்சார்த்தமாக கட்டப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையினை யாழ்.செயலக திட்டப்பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை மேற்கொண்டுள்ளார்.

2005 - 2008 ஆம் ஆண்டு வரையான நான்கு ஆண்டு திட்டத்தின் அடிப்படையில் 'நிகாப்' (NEHRP) திட்ட நிதிஒதுக்கீட்டில் கீழ்வரும் ஒழுங்கில் முதற்கட்டம் நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

★ முதலாம் வருடம் - 1448 வீடுகளும்,
★ இரண்டாம் வருடம் - 3620 வீடுகளும்,
★ மூன்றாம் வருடம் - 4706 வீடுகளும்,
★ நான்காம் வருடம் - 4706 வீடுகளும் மொத்தமாக 14 ஆயிரத்து 480 வீடுகள் கட்டிமுடிக்கப்படவுள்ளன.

இதனைவிட யு.என்.டி.பி.நிறுவனம் 2005 இல் 300 வீடுகளை 18 மாதகாலத்தினுள் அமைக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

300 வீடுகள் அமைக்கும் திட்டம் பிரதேச செயலகம், பிரதேசசபை ஆகியவற்றின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-185)

### தெல்லிப்பழை வைத்தியசாலையில்

# புற்றுநோய்க்கான சிகிச்சைகள் மேற்கொள்ளும் திகதிகளில் மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் நாள்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

அங்கு புதன், வெள்ளி, சனி ஆகிய நாளகளில் சிகிச்சைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் திங்கள்,வெள்ளி,புதன் ஆகிய தினங்களிலேயே அங்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும் என தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை - தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சையினை மேற்கொள்ளும் நோயாளர்களின் நலன் கருதி வைத்தியசாலை வரையும் பஸ்சேவைகள் நீடிக்கப்பட்டுள்ளன. (4-6)

## சமுர்த்திப் பயனாளிகளுக்குப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.பிரதேச செயலக யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியினால் வீட்டில் விற்பனை நிலையங்கள் வைத்திருக்கும் சமுர்த்தி பயனாளிகளுக்காக வட்டி இல்லாத கடன் திட்டத்தின் அடிப்படையில் நிலையான பாவனைக்குரிய பொருள்கள் வழங்கப்படவுள்ளதாக யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் எம்.கியூமன் தெரிவித்துள்ளார். (8-190)

# கண்ணீர்க் காணிக்கை

எமது வித்தியாலய ஆசிரியை
திருமதி இரஞ்சிதம் நித்தியானந்தனின் பாசமிகு தாயாரும்
அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு.ப.நித்தியானந்தனின்
அன்பு மாமியாரும் ஆகிய

**திருமதி அருந்ததி அம்மா தம்பையா**

அவர்கள் இயற்கை எய்திய செய்திகேட்டுத் துயரடைவதுடன், அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், சாவகச்சேரி. (40063) (24-14-19)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.


## கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலை ஊழியர்களின் மாதாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (8-204)

## கூட்டுறவுச் சங்க ஒளி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஒளி விழா எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு காங்கேசன்துறை வீதியிலுள்ள சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (8-204)

## மல்லாக நீதிமன்றத்தில் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,டிசெ.25

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திலுள்ள துவிச்சக்கரவண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் என்பனவற்றின் ஏலவிற்பனை எதிர்வரும் 29ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மாவட்ட நீதிமன்ற வளா கத்தில் நடைபெறவுள்ளது.

ஏல விற்பனையில் பொருள்களை உடன் பணம் செலுத்தி வாங்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-204)


## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து.)
### கூறுவிலை கோரல்
### புதிய லொறிக்கு உடற்கோப்பு அமைத்தல்

எமது சங்கம் புதிதாகக் கொள்வனவு செய்த "லங்கா அசோக் லேலண்ட்" கொமேட் சுப்பர் ரக லொறிக்கு உடற் கோப்பு அமைப்பதற்கான கேள்விப் பத்திரம் சங்கத்தால் கோரப்படுகின்றன. கேள்விகோர விரும்புவோர் முழு விவரங்களையும் சங்கத்தில் பெற்று 05.01.2005ஆம் திகதி பிற்பகல் 12.00 மணிக்கு முன்னர் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

க.இராசதுரை
பொதுமுகாமையாளர்,
சங்கானை ப.நோ.கூ. சங்கம்.
(சி-40028) (24-14-19)

மீண்டும்.....

# சிறப்பு நாடக அளிக்கை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்



26.12.2004 ஞாயிறு
பிற்பகல் 3.30 மணிக்கு

தே. தேவானந்தின்

# பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்

நாடகம்

அன்பளிப்பு: 100/=, 50/=, 20/=

Active Theater Movement

**Yamaha Plaza**
யமஹா பிளாஸா
298, K.K.S. Road, Jaffna.

TRRO LTD

(சி-40023)(24-14-19)

# சேவைநலன் பாராட்டு



திருமதி **சகுந்தலா இந்திரராஜா**

அதிபர் தரம் - 1 (S.L.P.S. - I)

எமது பாடசாலையில் பத்தாண்டுகளாக அதிபராகக் கடமையாற்றி, மாணவர்களினதும் பாடசாலையினதும் மேம்பாட்டிற்கு அயராது உழைத்து நேற்று ஓய்வுபெற்றுச் செல்லும் அதிபர் அவர்களின் சேவையைப் பாராட்டுவதோடு, அவரின் ஓய்வுகாலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/புற்றளை மகா வித்தியாலயம்,
புலோலி.
(சி-40037) (24-14-19)

# SUNDHARSON

Distributors of all kind of Electricity goods

அசல் மின் சாதனங்களின் தெரிவுகளுக்கு

## 'சுந்தர்சன்'

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.

- 'ABANS' தயாரிப்புகளின் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்.
- 'Abans' தயாரிப்புகளான LG குளிர்சாதனப்பெட்டிகள், அதி குளிரூட்டிகள், எயர் கொண்டிஷனர்கள், தொலைக்காட்சிப்பெட்டிகள், டெக், VCD&DVD பிளேயர்கள், மைக்ரோ அவன் (Oven)
- 'Abans' தயாரிப்புகளில் புகழ்பெற்ற 'HAIER' தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டிகள்.
- 'ANTON' தயாரிப்புகளின் யாழ். விநியோகத்தர்கள்.
- 'Anton' PVC குழாய்கள், அதன் இணைப்புக்கள், கூரைப்பீலிகள், அதன் இணைப்புக்கள், நீர்த்தாங்கிகள், பிளாஸ்ரிக் பொருள்கள், கதவுகள், வெந்நீர்க்கலன்கள், அதன் இணைப்புக்கள், வலைகள், விவசாயிகளுக்கான நீர்க்குழாய்கள்.
- KELANI CABLESஇன் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள்.
- Kelani Cables இன் அதிசிறந்த தயாரிப்புகளான வீட்டு வயரிங் வயர்கள்.

மற்றும்

- மின் உபகரணங்கள், மின்விசிறிகள், மின் அழுத்திகள் சகலவிதமான மின் குமிழ்கள், ரியூப் லைற் வகைகள் குறைந்த மின்சாரத்தில் கூடிய ஒளியைத்தரும் மின் குமிழ்கள், அதிநவீன தொங்கும் லைற்றுக்கள், மின்சாரப் பரிசுப் பொருள்கள், மின் நீர் இறைக்கும் இயந்திரங்கள், கைப்பம்புகள், எண்ணெயில் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்கள்.
- Orange, Kevilton, Tenby, Somer, Sonki, Sindoo ஆகியவற்றின் தயாரிப்புகளான 'சுவிச்' வகைகள்.
- அதிசக்திவாய்ந்த Dewalt, Black & Decker Drillers, Grinders, Blowers மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- Kanchan, Sunda, Capricorn, Multinational, Jaipan, Sumeet அரைக்கும் மின் சாதனங்கள். Bonri, Nikai, Deck, National, Panasonic றைஸ்குக்கர்கள், பிறஷர் குக்கர்கள் போன்றவற்றை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
- Red heart, Nippon, MPL, Panasonic, Bright, National, Phillips, Black&Decker, Electrolux, AEG மின் அழுத்திகள் Tokyo, Kobashi, Nippon, Belltron பிளாஸ்ரிக் கேத்தில்கள் மற்றும் எலக்ரிக் கேத்தில்களான Sanjo, Bright, Nippon ஆகியவை நியாயவிலையில்.

மற்றும் சகல மின்சாதனங்களையும் ஒரே இடத்தில் அமைந்துள்ள நவீன காட்சியறையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

'சுந்தர்சன்'
யாழ். வீதி, மானிப்பாய்.

T.P./Fax: 021 222 2751
0214591569

'SUNDHARSON'
Jaffna Road, Manipay.

குறிப்பு: ஒரு வீட்டுக்குத் தேவையான பொருள்கள் கொள்முதல் செய்பவர்களுக்கும். abans தயாரிப்புக்களான குளிர்சாதனப்பெட்டி.' சலவை இயந்திரம். தொலைக்காட்சிப்பெட்டி. அதிகுளிரூட்டிகள் போன்றவற்றைக் கொள்வனவு செய்பவர்களுக்கும் அப்பொருள்கள் உரிய இடத்தில் சேர்ப்பதற்கான வாகன வசதி செய்துகொடுக்கப்படும்.

(சி-40021) (33-14-19-24)

"சாமியே சரணம் ஐயப்பா"



# யாழ்.சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்
## கோண்டாவில்

மகர ஜோதி மண்டல பூஜை பூர்த்தி விழா

- இன்று (25.12.2004) சனிக்கிழமை மாலை நெய், தேங்காய் நெய் நிரப்புதல்.
- நாளை (26.12.2004) ஞாயிற்றுக்கிழமை காலை தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைத்து, இருமுடிகட்டி, பாதயாத்திரையாகச் சுன்னாகம் ஐயனார் ஆலயம் சென்று கே.கே.எஸ்.வீதி வழியாக ஆலயத்தை வந்தடைந்து பதினெட்டாம் படி ஏறி நெய் அபிசேஷகம் நடைபெறும்.
- மாலை 7.00 மணிக்கு விஷேட படி பூஜை, பஜனை நடைபெறும்.
- இரவு அன்னதானம் நடைபெறும்.

அனைவரும் வருக! அருள்பெறுக!

- தேவஸ்தானம்.

(40055)(42-14-19-24)

பிரசுர அன்பளிப்பு: **காரை.மணிகண்டன்**

# முயற்சி திறன் விருத்தி மையம்
# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

TRRO LTD

## 2005ஆம் ஆண்டுக்கான தொழிற்பயிற்சி நெறிகள் ஆரம்பம்

'இளைஞர், யுவதிகளின் எதிர்கால வாழ்வை வளம்படுத்தல்' என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எமது நிறுவனத்தால் நடத்தப்பட்டுவருகின்ற தொழில் பயிற்சி நெறிகளுக்குப் புதிதாக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.


| பயிற்சி நெறிகள் | தகைமைகள் | பயிற்சிக்காலம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| தமிழ்தட்டச்சு | G.C.E. O/L சித்தியடைந்திருத்தல் தமிழ் - C | 06 - மாதம் | யாழ்ப்பாணம், இணுவில் வாரநாள், வார இறுதி நாள் |
| ஆங்கில தட்டச்சு | G.C.E. O/L சித்தியடைந்திருத்தல் ஆங்கிலம் - C | 06 - மாதம் | யாழ்ப்பாணம், இணுவில் வாரநாள், வார இறுதி நாள் |
| உடையமைத்தலும் வர்ணம் தீட்டுதலும் | G.C.E. O/L கற்றிருத்தல் | 06 - மாதம் | யாழ்ப்பாணம், இணுவில் வாரநாள் |
| வயறிங், நீவைண்டிங் | G.C.E. O/L கற்றிருத்தல் | 06 - மாதம் | யாழ்ப்பாணம் வார இறுதிநாள் |
| T.V. Radio பழுது பார்த்தல் | G.C.E. O/L கற்றிருத்தல் | 06 - மாதம் | யாழ்ப்பாணம் வாரநாள் |
| புத்தகம் கட்டுதல் | G.C.E. O/L கற்றிருத்தல் | 03 - மாதம் | யாழ்ப்பாணம் வார இறுதி நாள் |

விண்ணப்ப முடிவுதிகதி: 05.01.2005

- பயிற்சிநெறிகளுக்குப் பயிற்சிக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
- சுயவிவரங்கள் தட்டச்சுத்தாளில் எழுதப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(சி-40030) (24-14-19)



மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராபின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறவுள்ளன. முன்னதாக நேற்று நரசிம்மராபின் பூதவுடலுக்கு இந்திய அரசியல் தலைவர்கள் பலர் அஞ்சலி செலுத்தினார்கள். இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி, இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் ஆகியோர் அஞ்சலி செலுத்துவதுடன் நரசிம்மராவின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதைப் படங்களில் காணலாம்.

# அமெ. பாதுகாப்பு அமைச்சர் நேற்று ஈராக்குக்கு விஜயம்!

## காயமடைந்தவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்

மொசூல்,டிசெ.25

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ் பீல்ட் நேற்று ஈராக்கின் மொசூல் நகரில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத்தளத்திற்குச் சென்றுள்ளார்.

ஈராக்கில் செயற்படும் அன்ஸார் அல்-சுன்னா என்ற தீவிரவாத அமைப்பு இந்த இராணுவத்தளம் மீது கிளர்ச்சித் தாக்குதல் மேற்கொண்டு மூன்று நாள்களின் பின்னரே ரம்ஸ் பீல்ட் அங்கு சென்றுள்ளார்.

இத்தாக்குதலின்போது 22பேர் கொல்லப்பட்டனர்; 72 பேருக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

ரம்ஸ் பீல்ட்டின் ஈராக் பயணம் திடீரென இடம்பெற்றிருக்கிறது. நேற்றைய தினமே இவரின் பயணம் குறித்து அறிவிக்கப்பட்டது. பாதுகாப்புக் கருதியே ரம்ஸ்பீல்ட் ஈராக் செல்லவுள்ளார் என்பது அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. மொசூல் நகரில் அவசர வைத்தியப் பிரிவில் சிகிச்சை பெற்றுவரும் அமெரிக்கச் சிப்பாய்களைப் பார்வையிடவே இவர் ஈராக் சென்றார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"எனது விஜயத்தின் நோககம் ஈராக்கில் பணியாற்றும் படையினருக்குக் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவும், அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவுமே" - என்று ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

மொசூல் நகரின் இராணுவத்தளம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு ஈராக் தேசியப் பாதுகாப்புப் படையினரின் உடையணிந்த ஒருவரே காரணம் என்று அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ரம்ஸ் பீல்ட் நேற்று அமெரிக்கப் படையினர் சிகிச்சை பெற்றுவரும் வைத்தியசாலைக்கு உள்ளூர் நேரப்படி காலை 5.30இற்குச் சென்று பார்வையிட்டார். இவ்வைத்தியசாலை, தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடத்திலிருந்து 2கிலோ மீற்றர் தூரத்திலேயே அமைந்திருக்கின்றது.

சதாம் ஹுசைனின் அரசியல் பாவனைக்குட்படுத்தப்பட்ட இடங்களில் தங்கியிருக்கும் அமெரிக்க இராணுவத்தின் 25ஆவது படைப்பிரிவைச் சந்தித்தும் ரம்ஸ் பீல்ட் கலந்துரையாடினார்.

அங்கு அவர்கள் மத்தியில் உரையாற்றுகையில், "நான் உங்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். 10 அல்லது 20 அல்லது 30 ஆண்டுகளின் பின்னர் வரும் காலத்தைச் சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தான் முக்கியமானவர்களாகவும், முக்கிய பணியினைச் செய்தவர்கள் என்பதையும் உணர்வீர்கள். நான் உங்கள் அனைவரையும் மதிக்கிறேன். எனது கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை உங்கள் அனைவருக்கும் தெரிவிக்கின்றேன்." - என்றார் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ் பீல்ட்.

ரம்ஸ்பீல்ட்டின் இந்த விஜயம் குறுகிய நேரத்தில் திட்டமிடப்பட்ட ஒன்றாகும். செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து நேரடித்தகவல் எதனையும் அவர் சொல்லவில்லை. (க-8)

# நேபாளத்தில் போக்குவரத்து ஸ்தம்பிதம்

காத்மண்டு,டிசெ.25

நேபாளத்தில் இராணுவத்தினர் அத்துமீறிய நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் எனக்கூறி மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் வீதிப்புறக்கணிப்பில் ஈடுபடுமாறு விடுத்த போராட்ட எச்சரிக்கையை அடுத்து தலைநகர் காத்மண்டுவுக்கான போக்குவரத்துப் பெருமளவில் ஸ்தம்பித்திருககிறது.

பிரதான வீதிகளில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் தொடராக நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. தலைநகரின் உள்போக்குவரத்தும், தலைநகருக்கான வெளிப்போக்குவரத்தும் தடைப்பட்டிருக்கிறது. இதனால், பொதுமக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆட்பட்டிருக்கின்றனர்.

தனித்தனியான சில சம்பவங்களில் 18 லொறிகளை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் எரித்துச் சேதமாக்கியுள்ளனர் எனச் செய்திச் தெரிவித்தன.

இந்த முற்றுகைப் போராட்டத்தை மாவோஜிஸ்ட் தீவிரவாதிகள் வீதித்தடைகளை வைத்தோ - ஏற்படுத்தியோ - அலலது களத்தில் நேரடியாக இறங்கியோ செயற்படுத்தவில்லை. மாறாக, தமது ஆணையை - உத்தரவை - மீறுவோர் பழிவாங்கப்படுவர் என்ற அச்சுறுத்தலின் அடிப்படையிலேயே செயற்படுத்தியிருக்கிறார்கள் என்று அங்குள்ள வெளிநாட்டுச்செய்தியாளர்கள் •தெரிவித்திருக்கின்றனர்.

நேபாளத்தில் முடியாட்சியை அகற்றவேண்டும் கம்யூனிஷ ஆட்சியை நிறுவவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடந்த ஒன்பது ஆண்டுகளாக ஆயுதப் போராட்டத்தை நடத்திவருகின்றனர்.

இந்தப் போராட்ட நடவடிக்கைகளின் காரணமாக 10ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்; பலர் காயமடைந்துள்ளனர்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் இவ்வாறான வீதித்தடைகளை ஏற்படுத்தி தலைநகர் காத்மண்டுவில் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்துகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (க-8)

# பஸ்மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் ஹொண்டூரஸில் 2பேர் பலி; 16பேர் காயம்!

செம்லெகன்,டிசெ.25

ஹொண்டூரஸ், வடக்குப் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த உள்ளூர் பஸ் ஒன்றின் மீது இனந்தெரியாத ஆயுததாரிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 23பேர் கொல்லப்பட்டனர்; 16பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சூட்டுச் சம்பவம் நேற்றுசெமிலெகன் நகரிலேயே நடைபெற்றது. இந்த நகரம் தலைநகரான டெகுசி சூல்பாவின் வடக்கில் 200 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இந்த பஸ்ஸில் பெண்களும், குழந்தைகளுமே அதிகமாகப் பயணம் செய்தனர். ஓடிக்கொண்டிருந்த பஸ்மீது ஆயுததாரிகள் சரமாரியாகச் சுட்டனர். இதனால், பஸ்ஸினுள் இருந்த பயணிகளில் 16பேர் துடிதுடித்து அந்த இடத்திலேயே பலியாகினர். ஏனையோர் மருத்துவமனையில் உயிரிழந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இத்தாக்குதல் காட்டுமிராண்டித்தனமான செயல் என்றும் - தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகத் தேடிக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - ஹொண்டூரஸ ஜனாதிபதி ரிசச் சாட்டோ மதுரு தெரிவித்தார்.

இத்தாக்குதல் நேற்று உள்ளூர் நேரமான இரவு 7.40 மணிக்கே இடம்பெற்றிருக்கிறது. இந்த பஸ்ஸுக்கு முன்னாலும், பின்னாலும் வந்த கார்களிலேயே துப்பாக்கிதாரிகள் வந்துள்ளனர். பஸ்ஸை ஒரு ஓரமான பகுதிக்குக் கொண்டு சென்றதன் பின்னர் காரைவிட்டு இறங்கி கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியுள்ளனர். 16பேர் இந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். ஏனைய 7பேரும வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றதன் பின்னர் சிகிச்சை பலனளிக்காது உயிர் துறந்தனர்.

இக்கோரச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் தப்பித்துச் சென்றுவிட்டனர் என்றும் - அவர்களைத் தேடும் பணியில் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் என்றும் - பிரதி ஆணையாளர் வில்தர் டொர்ரேஸ் கூறினார். (க-8)

# குளோனிங் முறையில் பூனைக்குட்டி

டெக்சாஸ்,டிசெ.25

குளோனிங் முறையில் பூனைக்குட்டியொன்றை அமெரிக்க மருத்துவ நிறுவனம் ஒன்று உருவாக்கியிருக்கிறது. இதில் என்ன ஆச்சரியம் எனில், இறந்த பூனையொன்றின் முக வடிவத்திலேயே அப்பூனை உருவாக்கப்பட்டிருப்பதே.

அமெரிக்காவைச் சேர்ந்த பணக்காரப் பெண்மணி 17 வருடமாகத் தனது செல்லப்பிராணியாக வளர்த்துவந்த பூனை இறந்துவிட்டது. இதைத் தொடர்ந்து அந்தப் பூனையின் உயிரணுக்களைப பயன்படுத்திப் பூனையொன்றை உருவாக்கித் தருமாறு டெக்சாஸ் மாநிலத்தின் மருத்துவ நிறுவனத்தை அப்பெண் கேட்டுக்கொண்டார்.

ஜெனட்டிக் சேஷிங் என்ற அந்த நிறுவனம் இறந்த பூனையைப் போன்ற ஒரு பூனைக்குட்டியை உருவாக்கியிருக்கிறது. இப்பூனைக்குட்டியை உருவாக்க 50 ஆயிரம் டொலர்கள் அந்த நிறுவனத்திற்கு வழங்கியுள்ளார் அந்தப் பெண்.

இதனையடுத்து, தமக்கும் பூனைக்குட்டிகளை உருவாக்கித்தருமாறு 50 பேர் இந்நிறுவனத்தைக் கேட்டுள்ளனர். அடுத்த ஆண்டுக்குள் இந்த 50 குளோனிங் பூனைகள் தயாராகிவிடும். வர்த்தக ரீதியில் குளோனிங் பூனைக்குட்டி உருவாக்கப்பட்டிருப்பது - உருவாக்கப்படுவது -அமெரிக்காவில் இதுவே முதல் தடவை. (க-8)

# பிரிட்டன் பிரதமரின் மாநாட்டுத் திட்டம் தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது

## பலஸ்தீன பிரதமர் கூரே தெரிவிப்பு

ரமல்லா,டிசெ.25

பலஸ்தீன நிர்வாகத்தைச்சீரமைக்கும் நோக்கில் லண்டனில் மாநாடு ஒன்றை நடத்துவது என்று பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயரின திட்டங்களால் தாம் அதிருப்தியடைந்திருக்கிறார்கள் எனப் பலஸ்தீனப் பிரதமர் அஹமது கூரே தெரிவித்தார்.

பலஸ்தீனர்கள் சமாதானத்தை வலியுறுத்தும், அமைதிக்கான ஒரு மாநாட்டை வேண்டித்தான் நிற்கிறார்கள். ஆனால், பேச்சுக்களை எப்படி நடத்துவது - முன்னெடுப்பது - பேசுவது என்ற பயிற்சி அவர்களுக்குத் தேவையில்லை என்றும் பிரதமர் அஹமது கூரே கூறினார்.

லண்டனில் அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற ஏற்பாடாகிவரும் இஸ்ரேல் - பலஸ்தீன சமாதானப் பேச்சுக்கள் குறித்த மாநாட்டில் தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் கூறியுள்ளார். ஆனால், நடைபெறவுள்ள இந்த மாநாட்டை பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் வரவேற்றிருக்கிறார்.

இரு தரப்புப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவும், பெப்ரவரி மாதம் லண்டனில் நடைபெறவுள்ள மாநாடு குறித்த விளக்கத்தை இரு தலைவர்களுக்கும் விளங்கப்படுத்தவும், அவர்களை இம்மாநாட்டில் கலந்துகொள்ளச் செய்யவுமே பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

பலஸ்தீனத்தில் அடுத்தமாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படும் புதிய நிர்வாகம், எதிர்காலத்தில் இஸ்ரேலுடன் நடத்தவுள்ள பேச்சுகளில் பலனளிக்கும் வகையில் எப்படி நடந்துகொள்வது - பங்குபற்றுவது - என்பதைத் தெளிவுபடுத்துவதே - உதவுவதே இந்த லண்டன் மாநாட்டின் நோக்கம் என பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே பலஸ்தீனப் பிரதமர் அஹமதுகூரே மேற்கண்டவாறு பிரிட்டன் பிரதமரின் திட்டங்கள் தமக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை - பலஸ்தீனத்தில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடுபிடித்துள்ளன. பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் மஹ்மூத் அப்பாஸே இத்தேர்தலில் வெற்றிபெறுவார் என எதிர்வுகூறப்படுகிறது. (க-8)

உலக அரங்கில்

# தென்பகுதிக்கு 2ஆயிரம் படைகளை அனுப்பத் தாய்லாந்து அரசு முடிவு

பாங்கொக்,டிசெ.25

தாய்லாந்தின் தென்பகுதிக்கு இரண்டாயிரம் படையினரை அனுப்புவதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. அங்கு இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தின் தென்பகுதி, முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசமாகும். இங்கு கடந்த ஜனவரி மாதம் இராணுவத் தளம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து இடம்பெற்ற வன்முறைகளில் 500பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

கடந்த செவ்வாயன்று டட்டாணி மாகாணத்தில் பௌத்த ஆசிரியர்கள் இருவர் கொல்லப்பட்டனர். இச்சம்பவத்தைக் கண்டித்து நூற்றுக்கணக்கான பாடசாலைகளை மூடிப் போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

தென் தாய்லாந்தில் முஸ்லிம்கள் நடத்தும் தாக்குதல்களில் இருந்து தமக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும் எனப் போராட்டத்தை நடத்திய பௌத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இப்பகுதியில் இராணுவச சட்டம் அமுலில் இருந்த போதும் பௌத்த பாடசாலைகள் மீதும், ஆசிரியர்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றன. எனவே, இத்தாக்குதல்களை அரசு முறியடிக்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகளில அரசு அவசரமாக ஈடுபடவேண்டும் என்றும் பௌத்த ஆசிரியர்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை-

இது குறித்து முஸ்லிம் சமூகத் தலைவர்கள் கூறுகையில், "தமது சிறுவர்கள் பௌத்தக் கொள்கைகளைப் படிக்கவேண்டும் என்றும்-

"பாடசாலைக் கல்வித் திட்டத்தில் பௌத்த பாடம் கட்டாயமாகப் புகுத்தப்படுவதாகவும்"- குற்றஞ்சாட்டியுள்ளார். (க-8)




வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியினரும் நேற்றுக்காலை யாழ்ப்பாணத்திலுள்ள சட்ட உதவிகள் மன்றத்தின் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள்:பிரபா).*

# நூறு மாணவருக்கு வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தினால் கற்றல் உபகரணம்

வடமராட்சி, டிசெ.25

வடமராட்சியைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த நூறு மாணவர்களுக்கு வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான அறங்காவலர் சபையினர் இலவசமாக கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

அம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், கட்டைவேலி யார்க்கரு வித்தியாலயம், கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை, புற்றளை மகா வித்தியாலயம் -

துன்னாலை தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பாடசாலை, புலோலி மெ.மி.த.க. பாடசாலை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய பத்து பாடசாலைகளிலிருந்து தலா 10 மாணவர்கள் வீதம் தெரிவுசெய்யப்பட்டுக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன், பருத்தித்துறைப் பிரதேச சபையின் செயலாளர் சி.பசுபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

(எ-173)

# ஆஸ்பத்திரி வீதியின் ஒருபகுதிசேதம்

குருநகர்,டிசெ.25

யாழ்.ஆஸ்பத்திரி வீதி குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

யாழ்.போதனா வைத்தியசாலையினுள் மக்கள் பிரவேசிக்கும் வாயில் முன்பாக அமைந்துள்ள பகுதியில் இருமருங்கிலும் அமைந்துள்ள வீதியே இவ்வாறு குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இவ்வீதி நகரின் மிக முக்கியமான வீதியாகவும் அடிக்கடி மக்களால் பயன்படுத்தப்படும் வீதியாகவும் உள்ளது. பகல் நேரங்களில் மக்கள் இவ்வீதியினூடாக அவதானமாக பயணித்தாலும் இரவு நேரங்களில் பயணிப்போர் மிகுந்த சிரமத்தை அனுபவிக்கிறார்கள். மேற்படி வீதியின் பல இடங்களில் வெளிச்சமில்லாத காரணத்தால் இவ்வீதியில் ஆங்காங்கு காணப்படும் பள்ளங்களில் மக்கள் விழுந்தெழும்பிச் செல்லும் நிலையும் உருவாகியுள்ளது.

(எ-51)

# ரெஜி சிறிவர்த்தனவுக்கு நாளை இரங்கல் கூட்டம்


யாழ்ப்பாணம்,டிசெ.25


அண்மையில் தனது 82ஆவதுஅகவையில் அமரராகிய இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் கலை, இலக்கிய, விமர்சகருமாகிய ரெஜி சிறிவர்த்தனவுக்கு இரங்கல் கூட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளது.

சர்வதேச மார்க்சியக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நாவலர் மண்டபத்தில் ஏ.ஜே.கனகரத்தினா தலைமையில் இடம்பெறும்.

வண.பிதா ஜெயசீலன் அடிகள்,சோ.பத்மநாதன், சொ.சிவபாலன் ஆகியோர் உரையாற்றுவர்.

(ஐ)





காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழி திருவாதிரை உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமான போது செளந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் தமது பரிவாரமூர்த்திகளுடன் வீதியுலா வந்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

*(படம்:காரைநகர்ச் செய்தியாளர்)*

# ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாசக விழா இன்றும், நாளையும் நடைபெறும்

காரைநகர் மணிவாசகர் சபை நடத்தும் திருவாசக விழா இன்றும், நாளையும் காரைநகர் ஈழத்துச் சிதம்பர வசந்தமண்டபத்தில் நடைபெறவுள்ளது

முதல்நாள் நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 6மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் காரைநகர் மணிவாசகர் சபையால் நடத்தப்பட்ட சைவசமயபாடப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் தங்கப் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

தொடர்ந்து 'தாயிற் சிறந்த தயவான தத்துவனே' என்ற தலைப்பில் யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் குமாரவேல் சொற்பொழிவாற்றுவார்.

இரண்டாம்நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் சு.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும். இதில் பிரபல சமயப் பேச்சாளர்கள் பலரது சொற்பொழிவுகளும், கல்லூரி மாணவர்களின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறும்

இன்றைய நிகழ்வில் தங்கப்பதக்கம்பெறும் மாணவர்களின் விவரம் வருமாறு:-

வே.சோபனா தரம் 3 (வலந்தலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை), ந.புஷ்பமேனன் தரம் 8 (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), க.திவாகரன் தரம் 9 (யாழ்ற்றன் கல்லூரி). (எ-73)

புலமைப்பரிசில் 2005
போட்டிப் பரீட்சை
26.12.2004 காலை 10.00 மணிக்கு இடம்பெற இருக்கும் மேற்படிப் போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாவும் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத, வலிகாமம், தென்மராட்சி விண்ணப்பதாரிகள் எமது யாழ்ப்பாணத் தலைமை அலுவலகத்துடனும், வடமராட்சி விண்ணப்பதாரிகள் நெல்லியடிக் கிளை அலுவலகத்துடனும் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.
இயக்குநர்,
(C/40033) IIS, யாழ்ப்பாணம்.




# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பற்சிகிச்சைப் பிரிவு இயங்கும்

## திங்களன்று வைபவரீதியான நிகழ்வு

தென்மராட்சி,டிசெ.25

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது

நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 11 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரனால் இந்தப்பிரிவு ஆரம்பித்து வைக்கப்படும்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

பற்சிகிச்சைப் பிரிவுக்கென டாக்டர் சண்முகராசா பாலகுமார் கடந்த பத்தாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(எ-117)

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

தென்மராட்சி, டிசெம்பர்.25

தென்மராட்சி பிரதேசத்தில் இதுவரை விசர்நோய்த்தடுப்பூசி மருந்து ஏற்றாத வளர்ப்புநாய்களுக் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருகிறது. சாவகச்சேரி கால்நடை மருத்துவநிலையத்தில் இத்தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டு வருவதாக கால்நடை வைத்தியர் திருமதி மகேந்திரராசா தெரிவித்துள்ளார்.

(எ-117)

நத்தார் - புத்தாண்டுப் பரிசு
SLT - PASSPORT
பாவனையாளருக்கு வெளிநாட்டு உறவுகளிடம் சென்று வர இலவச விமானச் சீட்டு
விவரங்களுக்கு:
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 2225392
(C/40036)

கடை மூடப்பட்டதிற்கான அறிவித்தல்
யாழ்.நகரில் இயங்கி வந்த எமது மல்லிகா மிக்ஷர் மாளிகையையும் ஆனைக்கோட்டை, மானிப்பாயில் இயங்கி வந்த மல்லிகா மிக்ஷர் தொழிலகத்தையும் இன்று முதல் முற்றாக முடிவிடுகின்றோம் என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.
மல்லிகா மிக்ஷர் மாளிகை,
சி.தேவிகாராணி
(C/40035)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் தர்மலிங்கம் திருநாவுக்கரசு

(சுந்தரம்பிள்ளை முன்னாள் பதுளை வர்த்தகரும். யாழ். கரசன்ஸ் எலெக்ரிக்கல்ஸ் ஸ்தாபகரும்)

திதி: சதுர்த்தசி 25.12.2004

தோற்றம் 14.03.1914 — மறைவு 08.01.2001

மனிதருள் மாணிக்கமாய்
மாண்புடன் வாழ்ந்திருந்து
புனிதவாழ்வு வாழ்ந்து இடையற சேர்ந்த
எமது தந்தையின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மாரியம்மன் கோவில் வீதி,
3ஆம் வட்டாரம், புங்குடுதீவு.

-குடும்பத்தினர்.

(40084)(29-11-45)

## மரண அறிவித்தல்கள்

### அந்தோனிமுத்து கபிரியேல்பிள்ளை



மாதகலைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிமுத்து கபிரியேல்பிள்ளை அவர்கள் நேற்று (24.12. 2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மேரிறோசாலின் அன்புக் கணவரும் பாமலா, யக்சன், கிச்சன், யான்சன், சறோசா, ராசகுமார், ஜசிந்தா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.12.2004) சனிக்கிழமை பி.ப. 2மணிக்கு கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முள்ளி வீதி, அரியாலை. (40086)(29-11-45)

தகவல்: பிள்ளைகள்.

### சங்கரப்பிள்ளை கதிரேசம்பிள்ளை

(சின்னத்துரை )

கருகம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கதிரேசம்பிள்ளை (சின்னத்துரை) 22.12.2004 புதன்கிழமை இரவு காலமானார்.

அன்னார் தேவி அவர்களின் அன்புக் கணவரும் சுதாமினி (லண்டன்), லதாமினி (லண்டன்), பத்மலோஜினி (லண்டன்), மோகனதாஸ் (லண்டன்), பிறேமதாஸ் (பொறியியலாளர்), தயாமினி (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.12.2004 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொழும்பிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டிய இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

55/7. சேர்ச் றோட், கொழும்பு -13. (40077)(29-11-45)

மனைவி,பிள்ளைகள்.

### DR.இரத்தினசபாபதி திருநாவுக்கரசு

(கொழும்புத்துறை)

நல்லூரைச் சேர்ந்த டாக்டர் இரத்தினசபாபதி திருநாவுக்கரசு 22.10.2004 புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினசபாபதி கனகசவுந்தரியின் சிரேஷ்ட புத்திரரும் கொழும்புத்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற இராசேந்திரம், தர்மாம்பிகைபிள்ளையின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராமநாதன், விவேகானந்தன் (முன்னாள் இலங்கை வான்படை றோயல் விங் கமாண்டர்), மகேந்திரன், மனோகரன், பத்மநாதன், சுசிலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சசிகலா, இரத்தினகுமாரன் (ரகு), வத்சலா, சுகன்யாவின் அருமைத் தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பூசை 21.11.2004 லண்டன் உயர் சுசற்குன்று முருகன் கோயிலில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

31, Pears Wood Gradens
Stanmore Middleset HN7 IN4 (40081)(29-11-45)

தகவல்:
இரத்தினகுமார்
(ரகு- மகன்) லண்டன்

## மினிபஸ் தரிப்பிடத்துக்கு சுன்னாகத்தில் அடிக்கல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

சுன்னாகம் பஸ் நிலையத்தில் சிற்றூர்திகளின் புதிய தரிப்பிடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லினை அரச அதிபர் செ.பத்மநாதன் நட்டுவைப்பார்.

இவ்வைபவத்தில் யாழ். மாவட்ட உதவிப் போக்குவரத்து ஆணையாளரும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(4-13)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் ஆலய திருவாசக முற்றோதல் இறுதிநாள் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இதில் மாணிக்கவாசகரின் திருவுருவம் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட சப்பரம் அதிகாலை ஒரு மணியளவில் வீதியுலா வரவுள்ளது.

(4-13)

## பொதுக்கூட்டம்

முல்லை மாவட்ட பட்டதாரிகள் சங்க நிர்வாகிகள் தெரிவுக்கான பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல மாவட்டங்களிலும் உள்ள முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துத் துறைப் பட்டதாரிகளையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(4)


ராஜா யாழ்ப்பாணம்
ரசிகப் பெருமக்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்
அர்ஜுன் ரீமாசென் வடிவேல் தேவயானி பிரகாஷ்ராஜ் நடித்த
கிரி
இயக்கம் சுந்தர் C
காட்சிநேரம்: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம் / மனோஹரா? 



நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது
ரசிகப் பெருமக்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்
மம்முட்டி, நந்திதாதாஸ் நடித்த
விஷ்வதுளசி (சீலஸ)
தினசரி : 10.30 2.30, 6.30.,9.30 (பு.நே.)
(சி-39821)

நிர்மலா? சங்கானை
ரசிகப் பெருமக்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்
தனுஷ்,பியா நடித்த
ட்ரீம்ஸ் (சீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
THE MUMMY RETURNS

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
ரசிகப் பெருமக்களுக்கு எமது நத்தார் வாழ்த்துக்கள்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக அர்ஜுன் (இருவேடம்) சாயாசிங் லைலா வடிவேல் நடித்த
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00(பு.நே.)
ஜெய் சூர்யா





முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா, யாழ்.பெயின்ற் காடின், 326,K.K.S.றோட், யாழ்ப்பாணம். (C/29651)


## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் வேலுப்பிள்ளை நடராசா

(இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர்)

திதி: 25.12.2004

தோற்றம் 10.11.1916 — மறைவு 23.12.1996

தக்கார் தகவிலார் என்பது அவர் அவர்
எச்சத்தால் காணப்படும்.
ஆண்டுகள் எட்டு சென்றாலும்
உம் நினைவில் நிற்கும்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி. (40083)(29-11-45)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சிலம்பு வெற்றிவேலு (ஆசாரியார்)

(முன்னாள் கிராமசபை உறுப்பினர் - உடுப்பிட்டி )

கரணவாய் கிழக்கு குருக்கள் பகுதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிலம்பு வெற்றிவேலு 23.12.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும் ஆறுமுகத்தின் அன்புச் சகோதரனும் யோகேஸ்வரி (அமரர்) பாலசுப்பிரமணியம் (அமரர்), புவனேஸ்வரி, சிவசுப்பிரமணியம் (கனடா), பரமேஸ்வரி, ஞானசம்பந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மகாலிங்கம் (கிளி), அனுஷா (கனடா), சிவகுருநாதன் (அமரர்), சாந்தினி ஆகியோரது அன்பு மாமனாரும் சசிகலா (கனடா), சசிகரன் (கனடா), றதீஸ்கரன் (றதீஸ் பந்தல் சேவை), சிந்துஷன் (கனடா), அனுஷன் (கனடா), வருணி (கனடா), ஜீவிதா, சுஜீவன், அபிராம், அருண்ராம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.12.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, வெல்லன்கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

(சி-40040)(29-11-45)

தகவல்
வெ.ஞானசம்பந்தன் (மகன்).

### திருமதி பொன்னம்பலம் செல்லமுத்து

சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் செல்லமுத்து அவர்கள் 23.12.2004 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.



அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் சின்னாச்சிப்பிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் கனகரத்தினம் (மலேசியா), காலஞ்சென்றவர்களான சீனிவாசகம், பூலோகசிங்கம், குமாரசிங்கம் மற்றும் ஜெகநாதன் (கொழும்பு), மார்க்கண்டேயர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), தெய்வநாயகி, வேலுநாதன் (தொழில்நுட்பவியலாளர், கொழும்பு மாநகரசபை), சண்முகநாதன், சிவகுருநாதன் (பிரதி அதிபர், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), விஜயலக்சுமி, தனலக்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, அற்புதராணி, பாலசுப்பிரமணியம் (உரிமையாளர், ஜெயகிருஷ்ணா ஜுவலர்ஸ்), சறோஜாதேவி, பாலேஸ்வரி, தவேந்திராதேவி (ஆசிரியை, இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி), கிருஸ்ணமூர்த்தி (கிளை முகாமையாளர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.சங்கம்), சரவணபவானந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் குறிஞ்சிதமலர் (கனடா), தமயந்தி (லண்டன்), காலஞ்சென்ற பாலகுகன், சுதாஜினி, சுதாகரன் (டோகா), கல்பனா, யோகநாதன், சுதர்சினி, கணேசநாதன், சுதாமதி, தமிழினி, காலஞ்சென்ற தவசொரூபி மற்றும் ஓங்காரமூர்த்தி (டென்மார்க்), சுலோஜினி, கலைக்கவி, மயூரன், தர்மினி, ஜோதிஜி, சுபந்தன், மதுசுதன் (கனடா), சிவரீதன் (லண்டன்), கஜேந்திரன் ஆகியோரின் பேர்த்தியும் சிவலோபாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2004) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சித்திரமேழி, இளவாலை. (40079)(29-11-45)

தகவல்: குடும்பத்தினர்.

### குமாரசாமி தியாகராசா

(ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் மடத்தடி மேற்கு வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி தியாகராசா (ஓய்வுபெற்ற வைத்திய கலாநிதி) அவர்கள் நேற்று (24.12.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.



அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குமாரசாமி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நாராயணசாமி, வடிவேல், முருகேசு (உதவி மின் அத்தியட்சகர், கொழும்பு), காலஞ்சென்ற கந்தசாமி, திருமதி ஞா.மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை (ஆசிரியர்) - தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி இராஜேஸ்வரி திருச்சிற்றம்பலம் (ஆசிரியை), காலஞ்சென்ற பரமேஸ்வரி, திருமதி வசந்தி முருகேசு (இளைப்பாறிய ஆசிரியை), தங்கமணி, ஞானப்பிரகாசம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் சஞ்ஜித், துஷ்யந் ஆகியோரின் மாமனாரும் நிஷாந், கிருஷ்ணவேணி, கிருஷ்ணஜோதி, குருபரன் ஆகியோரின் பெரியப்பாவும் திருமகள் (செல்வதி -அமெரிக்கா), கதிர்மகள் (பட்டு - லண்டன்), பரந்தாமன் (அமெரிக்கா) ஆகியோரின் சிறியதந்தையாரும் சந்திரநாதன் (அமெரிக்கா), ஹரிச்சந்திரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காயத்திரி (வைத்தியக் கல்லூரி, இந்தியா), ஜொனத்தன், சுபநேமி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

மடத்தடி மேற்கு வீதி,
சாவகச்சேரி. (சி-40037)(29-11-45)

திருமதி புவனேஸ்வரி தியாகராசா
(பேபி -மனைவி).


UNIT

சலுகையிலுள்ள கணனித் தொகுதிகள்

இந்தியப் பொறியியலாளர்களின் மேற்பார்வையில்

UNI MULTIMED with DELL Monitor - 49,900/-
UNI DEV EXPERT with DELL Monitor - 66,900/-
UNI ULTRA - SATA EXPERT with DELL Monitor - 89,900/-

Free..!
Higher End Auto Shutdown UPS. Hi-quality 2.1 Higher-End Woofer, Screen Filter, Mouse Pad, Dust Cover & etc.

வூபர்கள் 1500 ரூபா முதல்

X-MAS & NYEAR MEGA OFFER

UNI ULTRA - SATA COMPLETE with DELL Monitor 109,900/- → Free..! GEEPAS 5.1 3800W HI-FI Woofer

தரம் சிறந்ததால்தான் 3 வருட உத்தரவாதம்

மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி / நேரில்

All System With......!
* All Mother Board are Hyper Thread Supported
* All System With 1024 Cache Memory
* Fashioned ATX Casing Along with Front USB and Sound
* 5.1 Channell Surround Sound System
* 8X AGPVGA, 8XUSB 2.0 ports
* Enhanced Multimedia Keyboard
* 100 Mbps Fast Ethernet NIC

OFFER
சகல வன்பொருள்களுக்கும் 3 வருட உதிரிபாக உத்தரவாதத்துடன்
யாவும் கொழும்பை ஒத்த விலையில்

சகல விதமான Memory, Hard Disk, UPS, Processor, VGA Card, Mother Board, CD ROM,Writer, Floppy Drive, PIII Mother Board, DVD ROM, Head Phones, Blank CDs, Internal & External modem, TV Tuner, Net work Switches & Cables, Screen Filters, Cooling Fans, Sound cards, Printers, Scanner & Web Cam மற்றும் கண்ணைக் கவரும் Casing மற்றும் இதர பொருட்களுக்கும்

| | | OFFER |
|---|---|---|
| Keyboard with Mouse | 850/- | 750/- |
| Woofer SP-299 | 4500/- | 3500/- |
| Woofer MS-220AB | 2500/- | 1750/- |
| GPASS 5.1 Woofer | 12500/- | 10500/- |
| Power Supply ATX 400W | 2000/- | 1700/- |
| Mouse | 300/- | 260/- |
| Optical Mouse | 700/- | 625/- |
| Optical Mouse | 1400/- | 1100/- |

இதேபோன்ற சலுகை விலையில்

347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.
MOB:- 077 3134737,077 3134725,077 6093477.

Universal Technology (Pvt.) Ltd.
Station Road, Chunnakam.

## கொடிகாமத்தில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், கூட்டுறவுத்துறையைச் சேர்ந்தோர், அரச திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் வீதியின் இரு மருங்கிலும் கைகோர்த்தவண்ணம் தமது உரிமைக் கோஷங்களை முழங்கினர்.

இவர்களுடன் யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், க.சிவனேசன் மற்றும் திருமதி பத்மினி சிதம்பர நாதன் ஆகியோரும் மனிதசங்கிலிப் போராட்டத்தில் இணைந்துகொண்டனர்.

வானம் மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டதுடன், தூறும் மழையையும் பொருட்படுத்தாது சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும், எழுச்சிக் கோஷங்களை வானதிர ஒலித்தவாறும் இந்த மனித சங்கிலிப் போராட்டம் இடம்பெற்றது.

தொடர்ந்தும் 10.45 மணியளவில் வீதியின் இருபக்கமும் நின்ற மக்கள் யாவரும் கொடிகாமம் பஸ்தரிப்பிடத்திற்கு முன்பாக ஒன்று கூடினார்கள். அங்கு தென்மராட்சிப் பிரதேச வர்த்தக சங்கங்களின் ஒன்றியத் தலைவர் எஸ். சற்குணராசா தலைமையில் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன், க.சிவனேசன் மற்றும் தென்மராட்சிப் பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலாளர் செல்வி தங்கரத்தினம் ஆகியோர் அரசு, விடுதலைப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை வழங்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தி உரை நிகழ்த்தினர்.

போராட்டம் ஆரம்பமாகும் முன்னர் அங்கு பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினரும், பொலீஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். வீதியில் மக்கள் கூடியதும் அவர்கள் கலைந்து சென்றனர். (எ-5-74-31)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் உத்தியோகபூர்வ பதிலைப் புலிகளின் மதியுரைஞர் நேற்றுக்காலை அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்முக்கு அனுப்பிவைத்தார்.

அப்பதிலை நேற்று உடனடியாகவே இலங்கை அரசுத் தரப்புக்குத் தாம் தெரியப்படுத்திவிட்டார் என்பதை எரிக் சொல்ஹெய்ம் புலிகளுக்கு அறிவித்தார் என அறியவந்தது. (க-4)

## பேச்சுக்குத் தெளிவான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனைப் புலிகளின் தலைமை மிகக் கவனமாகப் பரிசீலித்தது. புலிகளின் பதிலை மதியுரைஞர் பாலசிங்கம் நேற்று நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்முக்கு அனுப்பிவைத்தார்.

புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேசுவதற்கு ஜே.வி.பி. கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதாலும்–

• இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெளிவற்ற – ஒன்றுக்கொன்று முரணான– கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தி கடைப்பிடித்து வருவதாலுமே –

பேச்சுக்கு துலாம்பரமான – தெளிவான – திட்டவட்டமான வரையறைகளைக் கொண்ட நிகழ்ச்சி நிரலை முன்வைக்குமாறு தாங்கள் கோருகின்றனர் எனப் புலிகள் இந்த உத்தியோகபூர்வ பதிலில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசு இனி முன்வைக்கும் நிகழ்ச்சி நிரல், விடுதலைப் புலிகள் பிரேரித்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவின் அடிப்படையில் பேச்சு நடத்தத் தயாரா என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்றும் புலிகள் தமது உத்தியோக பூர்வ பதிலில் கோரியிருக்கின்றனர். (க-4-13-12)

## புலிகளின் அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுபவங்களையும் மனத்தா லும் நினைத்துப் பார்க்க வலிமையற்றவர்களாக தமிழ் மக்கள் இருக்கின்ற வேளையில் மீண் டும் ஒரு போர் ஏற்படப் போகின்றது என்ற எண்ணம் கூட தமிழ் மக்களது மனங்களில் ஏற்படாதவாறு நிலைமையை விரைவாகச் சீர்செய்யுமாறு கேட்டு அரசுக்கும், எதிர்க்கட்சிக் கும் அவசர வேண்டுகோளையும் விடுத்திருக்கின்றார் ஆயர்.

ஆயரின்,செய்தி உள்ளே நத்தார் சிறப்பு மலரில் முழுமையாகப் பிரசுரமாகியுள்ளது. (ஐ)

## வவுனியா நகரிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை விடுதலைப் புலிகளிடம் வழங்க வேண்டும்', 'எமது நிலம் எமக்கு வேண்டும்', 'எங்கள் தலைவன் பிரபாகரனே' என்ற கோஷங்களே இம் மனிதசங்கிலிப்போராட்டத்திலும் முழங்கவுள்ளன.

போராட்ட முடிவில் ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது பொதுமக்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் பொது அமைப்புகளும் கல்விச் சமூகமும் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. (4-13)

## பிரதான வீதிகளில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சிப் பிரதேசத்தில் மூன்று இடங்களில் மனித சங்கிலிப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அடுத்த கட்டமாக இந்த மக்கள் போராட்டம் யாழ். நகரின் பிரதான வீதிகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் நான்கு நாள்கள் நகரின் பிரதான வீதிகளில் கைகோர்த்து ஒன்றிணையும் மக்கள் சமாதானத்தை வலியுறுத்திக் கோஷங்களை எழுப்புவர்.

நான்கு தினங்களும் நான்கு வீதிகளில் முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை மனித சங்கிலிப் போராட்டம் நடக்கும்.

முதல் நாள் திங்கட்கிழமை பருத்தித்துறை வீதியில் – யாழ். நகரில் இருந்து கல்வியங்காடு சந்திவரைக்கும் மக்கள் கை கோர்த்துநிற்பர்.

28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பலாலி பிரதான வீதியில் – நகரில் இருந்து திருநெல்வேலிச் சந்தி வரையான பகுதியில் வீதியின் இருமருங்கிலும் மக்கள் போராட்டம் இடம் பெறும்.

அதேபோன்று 29ஆம் திகதி புதன்கிழமை காங்கேசன்துறை வீதியில் – நகரில் இருந்து கொக்குவில் சந்தி வரையான வீதிப் பக்கத்தில் மனித சங்கிலிப் போர் இடம்பெறும்.

நான்காவது நாள் போராட்டம் கண்டி வீதியில் முன்னெடுக்கப்படும்.

இந்தப் போராட்டங்களுக்கான முன்னேற்பாடுகளை யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், பொதுநல சமூக அமைப்புக்களைச் சார்ந்தவர்கள் மற்றும் வர்த்தகர்கள் உட்பட சகல தரப்பினரும் இந்தப் போராட்டங்களில் இணைந்து கொள்ளுமாறு அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த மனித சங்கிலிப் போராட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்று மாலை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் யாழ். மாநகர சபை முன்னாள் ஆணையாளர் சீ.வி. கே.சிவஞானம், யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில், யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஊடகப் பேச்சாளர் பெ.கனகலிங்கம் மற்றும் நல்லூர்க் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர்கலந்துகொண்டு விளக்க மளித்தனர். (ஐ-6-7)

## சட்ட அலுவலக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1996ஆம், 97ஆம் ஆண்டுகாலப் பகுதியில் குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பாக நீதிமன்றங்களில் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. இந்த விசாரணைகளில் படைத் தரப்பில் ஆஜரான அரச சட்டத்தரணி, குறிப்பிட்ட ஆண்டுகளில் படையினர் எவரையும் கைதுசெய்யவில்லை எனத் தெரிவித்திருந்தார் என்றும் –

இதனை யாழ்ப்பாணத்தில் செயற்படும் சட்ட உதவிவழங்கும் மன்றத்தின் அங்கத்தவர்களான சட்டத்தரணிகள் எவரும் கண்டிக்ககாது மௌனம் சாதித்து வருகின்றனர் என்றும்–

இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையிலேயே தாம் இந்த மறியற்போராட்டத்தை நடத்தியதாகவும் அன்னையர் முன்னணித் தலைவி செ.கனகாம் பிகை தெரிவித்தார்.

நேற்றுக்காலை 8மணிக்கு ஆரம்பமான இந்தப்போராட்டம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெற்றது. காணாமற் போனவர்களின் உறவினர்கள் பலரும் கலந்துகொண்ட இந்த மறியற் போராட்டம் எதிர்வரும் முதலாம் திகதிவரை தொடர்ந்து நடத்தப்படும் என அன்னையர் முன்னணித் தலைவி தெரிவித்தார்.

மறியற்போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் –

★ 1996ஆம், 97ஆம்ஆண்டுகளில் கைதாகிக் காணாமற்போனோர் விடயத்தில் சட்ட உதவிமன்றம் மௌனம் சாதிப்பது ஏன்?

★ படையினரால் கைதாகிய அப்பாவித் தமிழர்கள் இல்லையா?

★ சட்ட உதவி மன்றம் தமிழ் மண்ணில் அவசியமா? தேவையா?

★ நீதிமன்றத்தில் தாம் கைதுசெய்யவில்லை எனப் படையினர் அரச சட்டத்தரணி மூலம் வெளிப்படுத்துவதைத் தட்டிக்கேட்க சட்ட உதவி மன்றத்திற்குப் பயமா? அல்லது தமிழ் அப்பாவிகட்கு உதவ நேரமில்லையா? என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

இதேவேளை – சட்ட உதவி வழங்கும் மன்றத்தின் உத்தியோகத்தர்கள் எவரும் நேற்றையதினம் அலுவலகத்துக்குச் சமுகமளிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(எ-6-7-88)

## தேவாலய...

(முதல்ாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள கத்தோலிக்க தேவாயலயங்களில் அந்தந்தப் பகுதிப் பங்குத் தந்தையர்களால் நத்தார் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்த நிகழ்வுகளிலும் ஏராளமான மக்கள் கலந்துகொண்டிருந்தனர் என்று உதயனின் பிரதேச செய்தியாளர்கள் அறிவித்தனர்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் முகமாக நேற்று இரவு முழுவதும் மக்கள் வெடிகளைக் கொளுத்தி ஆரவாரித்தனர். (4-12-13-31)

## உரிமை மறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த செய்தி வருமாறு:-

நத்தாரின் குதூகலம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. மழை வெள்ளத்தோடு நத்தார் இன்னிசை வெள்ளமும் பரவி ஓடுகின்றது.

நத்தார் என்றால் இறைவன் மனிதனாக அவதரித்த தினமாகும். மக்கள் தன்னை தெளிவாக, சரியாக அறிந்துகொள்ளும்படி அவர் மனுவுருவெடுத்து உலகத்திற்கு வந்தார். சாதாரண மனுஷனைப்போல் மனிதனுடைய பாடுகளில். வேதனைகளிலும், பங்குகொண்டார். இறுதியில் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்று அறைகூவல் விடுத்தார்.

2000 ஆண்டுகளாக இயேசு ஆரம்பித்த இயக்கம் மக்களின் வேதனையை அகற்றும் இயக்கமாகவும், அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்காக குரல்கொடுக்கும் இயக்கமாகவும் செயற்பட்டுவருகின்றது. பசித்தவர்களுக்கு இரங்கு என்பதுதான் இயேசு பிரானின் அதிமுக்கியமானகட்டளை. அப்புனிதனின் பிறந்தநாளிலே திக்கற்றவர்களுக்கும் தனிமையில் இருப்பவர்களுக்கும் உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கும் சேவை செய்வதற்காக நம்மை நாமே அர்ப்பணம் செய்வோமாக.

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


**2004 O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான பயிற்சி நெறி**

**Diploma in Visualize Management**

Computer fundamentals, GUI fundamentals, OS fundamentals, IT fundamentals, Windows Operation, Document management, Print Spooling & job management through MS Word, Creating and delivering presentation through MS POWERPOINT, Accelerating and amusing accounts through worksheet & Spread Sheet Via MS EXCEL.

Note:- இப்பிரிவுக்கு மட்டும் பதிவுக் கட்டணம் அறவிடப்படமாட்டாது.

காலம் 3 மாதங்கள்

| | |
|---|---|
| கட்டணம் | ~~2500/=~~ |
| சலுகைக் கட்டணம் | 1250/= |

புதிய பிரிவு ஆரம்பம் 29.12.2004

**Softview Computer College**

www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
scclanka@hotmail.com
T.P: 021 2225170
0777846811

**தர்மா மற்ஸ் அக்கடமி**

(கல்வி உலகின் புதிய வழிகாட்டி)

தரம் 3 முதல் O/L வரை

சண்டிலிப்பாய் கிளை: சங்கானை

**கல்வியாண்டு - 2005 எமது ஆசிரியர் குழு!**

கணிதம்: K.S.தர்மா, K.S.ராஜா, சிவகௌரி, சசிகலா
தமிழ்: S.P. சாந்தன், கோகுலரதன், கௌசலா
விஞ்ஞானம்: K.S.குணசீலன், சுரேஷ்
ஆங்கிலம்: ஜெயந்தன், சத்தியதாசன் (Grammer)
வர்த்தகம்: கமல், சிவகௌரி
சமூக.வரலாறு: பார்த்தீபன்
சமயம்: K.S.ராஜ், மிதுனா, சோபனா
புவியியல்: பார்த்தீபன்
விவசாயம்: ரமணன்
சுகாதாரம்: கௌரி

★ பிரத்தியேக கணித வகுப்புகள் வாரத்தில் 14 மணித்தியாலங்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர் K.S. தர்மா

★ தரம் 5 இற்கான புலமைப்பரிசில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

அனைத்து வகுப்புக்களும் கிழமை நாள்களில் மாலை 4 மணி-6மணி சனி, ஞாயிறுகளில் காலை 6.30-10.30, பி.ப. 1-6வரை

குறிப்பு:- எமது நிறுவனத்தின் கிளை III 5.1.2005இல் பெரிய விளான் பிள்ளையார் கோயிலுக்கருகில் உதயமாகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

(40038)(29-11-45), நிர்வாகி.

**COLLEGE OF ENGLISH**

பிறவுண் வீதி -யாழ்.

O/L எடுத்த மாணவர்களிற்கு
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By: Mr.T.THANENDRAN
(S.L.T.S-2 II) B.Com. (Hons) M.M.Spl., H.N.Dip in ACC., P.G.Dip in Edu.
ஆரம்பம்: 25.12.2004 சனி 3.30 p.m.
(40015) T.P.: 0777686713

**கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி**

2007 A/L
கணிதம், உயிரியல், வர்த்தகம், கலைப் பிரிவுகள்
எமது வழமையான தனித்துவமான ஆசிரியர் குழு.
ஆரம்பம்: 27.12.2004 மு.ப. 9 மணி

ENGLISH CLASS
பிரிவு -I (சி-40039)
ஆரம்பம்: 27.12.2004 பி.ப. 2 மணி
O/L எடுத்த மாணவர்களுக்காக

**ஈசன் கல்வி நிலையம்**

கே.கே.எஸ்.வீதி, கோண்டாவில்.
எமது தனித்துவம்மிக்க வழமையான ஆசிரியர்குழுவுடன்
**A/L 2007**
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள் அனைத்தும் ஆரம்பம்
காலம்: 02.01.2005 (Sun.) 9.00 a.m. (40082)

**நத்தார் நல்வாழ்த்துக்கள்**
என்றும் நாங்கள் உங்களுடன்
347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna, Sri Lanka.

**NEW SCIENCE CENTRE**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
**A/L 2007**
உடனடியாக ஆரம்மாக இருக்கிறது. பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.
(40072) -நிர்வாகி

'குரும்பசிட்டி'
வளர்மதி - சனசமூகநிலையம்
**திருவெம்பாவை வழிபாடு**
இடம்: களவாவோடை அருள்மிகு வசந்தநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
காலம்: 26.12.2004 ஞாயிறு காலை 6 மணிமுதல் (40087)
கிராம மக்களை அன்புடன் அழைக்கின்றோம். நிர்வாகம்.


## மரண அறிவித்தல்

### திருமதி விஜயரட்ணம் சாந்தினிதேவி



34/1 இராமநாதன் வீதி, கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரட்ணம் சாந்தினிதேவி நேற்று (24.12.2004) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் விஜயரட்ணத்தின் அன்பு மனைவியும் கந்தசாமி - காலஞ்சென்ற பூமணி ஆகியோரின் அன்பு மகளும் வினோத், சங்கீதா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறிஸ்கந்தராசா (சுவிஸ்), நந்தினி, சுமதி, சுபா, சுஜாதா ஆகியோரின் சகோதரியும் டிலியா(சுவிஸ்), மூர்த்தி கணேசலிங்கம், சிவபாலன், உதயகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.12.2004 சனிக்கிழமை 3 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயரட்ணம்
(கணவர்).

(40085)(22-11-45-29)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# உதயன் நத்தார் சிறப்பு மலர் 2004

## பாலகன் யேசு உதித்த நன்நாளில் — சமாதானமும், புதுவாழ்வும் கிடைக்கட்டும்!

அகஸ்துஸ் பிறப்பித்த கட்டளையின்படி, சனமதிப்பீட்டில் கணிக்கப்படவேண்டுமாயின், தாவீது குலத்தைச் சேர்ந்த சூசையும் அவர் மனைவி மரியாளும் பெத்தலகேம் சிற்றூருக்குப் போகவேண்டியதாயிற்று. மரியாள் எதிர்பார்க்கும் பாலன் அவ்விடத்தில் பிறப்பாரென்றும். பெத்தலகேம் நகரின் குடிமகனாகக் கணிக்கப்படுவாரென்றும், பெற்றோர் கனவு கண்டனர். ஆனால், அப்படியான சனமதிப்பீட்டுக் கணக்கில் புதிதாகப் பிறந்த பாலன் இயேசு கணிக்கப்பட்டதைப் பற்றி நற்செய்தியாளர் அனைவரும் மௌனம் சாதிக்கின்றனர்.

அன்று இறைவன் மனிதனுக்காக மனிதனாகப் பிறந்தும், மனிதன் அவரைத் தனது மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளவில்லைப் போல் தோன்றுகிறது.


சமகால நிகழ்ச்சிகள் பல அடித்தள உண்மைகளை எமக்கு உணர்த்துகின்றன. மனிதன் இறைவனை மனித உருவில் இனம் காணவும், ஏற்கவும் மறுக்கின்றான் என்பதே அவைகளில் முக்கியமானமொன்றாகும்.

இறைவனை நாம் இறைவனாக நேரில் காண்பதும் அனுபவிப்பதும் எமது இவ்வுலக சுபாவத்துக்கு அப்பாற்பட்டது. ஆகவே, இறைவன் தாமே எமது இவ்வுலக சுபாவத்துக் குரிய மனித உருவத்தை எடுத்து எம்முன் நிற்கும்பொழுதும் நாம் அவரை இனங்காணத் தவறிவிடுகிறோம்.

இன்று நம்மைச் சூழ்ந்திருக்கும் அந்தகாரத்தின் மத்தியில் ஒளிக்கும், நீதிக்கும், சமாதானத்துக்கும், விடுதலைக்குமான ஏக்கத்துடன் தவிப்போடு வாழ்க்கையை நடத்துகின்றோம். வசதி வாய்ப்புகள் படைத்தோர் ஏதோ ஒருவித்தில் வெளிநாடுகளுக்குச் சென்று விட எஞ்சியிருப்போர் கஷ்டங்கள், துயரங்கள், துன்பங்களுக்கு மத்தியில் அல்லல் வாழ்க்கை வாழ்ந்துவருகின்றனர்.

இன்னும் பலர் உடல் அவயவங்களை இழந்தவர்களாக, உணவு, உடை பற்றாக் குறை, உறைவிட வசதியீனம் என்பனவற்றுடன் எம்முன்னே வாழ்ந்து வருகின்றனர்.

எமது விடுதலைக்கும், நல்வாழ்வுக்கும் மாற்றார் மட்டும்தான் முட்டுக்கட்டை எனக் கணிப்பதும் தவறு. எம்மவர்கள் அன்பு, கருணை, இரக்கம், ஈகை ஆகிய நற்குணங்களை




மறந்து சுயநல வாழ்வென்ற பாவத்தின் பால் நாட்டம் கொண்டு வாழ்கிறோம்.

நாம் நமக்கென வாழும் கலாசாரம் எம்மத்தியில் அடர்த்தியாக வளர்ந்து காணப்படுகிறது. அவலமான அழிவை எதிர்நோக்கும்வேளையில் கூட நானோ நீயோ தப்புவது என்றும், என் மனைவி, என் மக்கள், என் சொத்து, என் சுற்றம் என்ற குறுகிய வட்டத்துக்குள் வாழும் சாத்தானைப் போன்ற கலாசார நோக்கு எம்மிடம் விரவிக்காணப்படுகிறது.

இந்த வேளையில்தான் கிறிஸ்துவின் பிறப்பும், அவர் கணக்கெடுக்கப்படாத முறையும் எமது சிந்தனையில் மாற்றத்தை - புதிய கலாசாரமொன்றை உருவாக்கவேண்டும். மற்றைய மனிதனில் மறைந்திருக்கும் தெய்வத்தைக் காணவும், மற்றவரை எதிரிகளாகவன்றி, நண்பனாகவும், சகோதரனாகவும் இனங்கண்டு, ஏற்று மதிப்பளிக்கவும் அவனுடன் உள்ளத்தைப் பங்கிடவும் ஆன துணிவு எமக்கு ஏற்படவேண்டும்.

எங்கள் காலத்தில் எமக்குச் சமாதானத்தைத் தரும் (Give Peace in our time O'Lord) என்ற வாசக சத்தை நாம் எமது பிரார்த்தனையாக ஆண்டவரிடம் சமர்ப்பிக்கின்றோம். சமாதான சகவாழ்வும் அமைதியும் எப்போதோ ஒரு வேளையில் கிட்டும் என்ற எதிர்பார்ப்பு எம் எல்லோர் மத்தியிலும் உண்டு. அதை மறுபிறப்பில் அனுபவிக்கலாம் என்றோ அல்லது எமது வாழ்வின் கடைசி வேளையில் அனுபவிக்கலாம் என்றோ நம்புவது எமக்கு ஆறுதலையோ நிம்மதியையோ தரப்போவதில்லை.

பண்டைக்காலத்தில் கூட சமாதானத்துக்கான வேண்டுகை பல சந்தர்ப்பங்களிலும் தேவையாயிருந்து வந்துள்ளது. வல்லரசுகளும் பேரரசுகளும் கூட உலகில் சமாதானத்தை நிலைநிறுத்தும் நோக்குடனேயே செயலாற்றி வந்துள்ளன. வரலாற்றில் தோன்றிய பெரிய பேரரசான உரோமப் பேரரசு 'ரோம சமாதானம்' எனத் தமது ஆளுகையை வர்ணித்தது. ஆனால், அடக்கி ஒடுக்கப்பட்ட, சுயாதீனமற்ற அடிமை வாழ்வே அந்த அரசின் கீழ் வாழ்ந்தவர்களுக்கு வாய்த்தது. அப்பேரரசின் ஒரு பாகத்தில் அமைந்த பலஸ்தீன நாட்டில் நடந்தேறிய சம்பவமொன்றே கிறிஸ்மஸ் பண்டிகை என்பதாகக் காலம் காலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அவலப்பட்ட மக்களுக்கு 'பயப்படாதிருங்கள்' இதோ, எல்லா ஜனத்துக்கும் சந்தோஷத்தைத் தரும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக் கிறேன்' என்ற தூதர்களின் செய்தி வந்தது. அதுவே 'பூமியிலே மாதானம் மனுஷர் மேல் பிரியம்' என்ற நற்செய்தியாய் அமைந்தது.

தேவதூதர்கள் சமாதானத்தை ஒரு சம்பவத்தோடு இணைத்தே கூறினார்கள். 'இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காகத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார்' என்பதே அந்நற்செய்தியாய் அமைந்தது.

இரட்சகரின் பிறப்புக்கும், ஆண்டவரே மானி ரூபமெடுத்து மானிடர் மத்தியில் தோன்றியதற்கும் ஒரு தொடர்பு உள்ளது. சமாதானத்தின் தூதராக வந்துதித்தவர். மக்களின் அவஸ்தைகளை அனுபவிப்பவராகவே வந்துதித்தவர். பிறப்புக்கே இடமில்லாமல் மாட்டுத் தொழுவம் அரசின் எதிர்ப்பினால் அகதியாக ஓட்டம். பிள்ளைகளை இழந்த தாய்மாரின் ஓலம் போன்ற இன்றைய எமது அனுபவங்கள் போன்றவையே அன்று இரட்சகராகிய யேசு பிரானின் அனுபவங்களாக அமைந்தன.

அந்தவகையில், பாலன் யேசுவின் பிறப்பு அடிமைத்தளையில் வாழ்ந்த, வாழும் மனித சமூதாயத்துக்கு விடுதலை வாழ்வின் நம்பிக்கை தரும் பிறப்பாக அமைந்தது. மக்களின் மீட்பர் கடவுளின் குழந்தையாய் பிறந்திருக்கின்றார். மக்களின் அழிவை விரும்பாமல் முழு விடுதலையுடனான நல்வாழ்வு மனித இனத்துக்குக் கிடைக்கும் பொருட்டு இறைமகன் இயேசு மனிதரானார். இன்றை பரபரப்பு மிக்க சூழலில் மக்களின் துன்பம், துயரம், கண்ணீர் யாவையும் பாலகன் இயேசு துடைக்கவேண்டிப் பிரார்த்திப்போம். பாலன் கிறிஸ்துவின் பிறப்பினால் வரும் நிறைவான புதுவாழ்வும் - சமாதானமும் யாவர்க்கும் கிட்டவேண்டுமென எல்லாம் வல்ல இம்மானுவேலாகிய இயேசு கிறிஸ்துவைப் பணிவோமாக. ★★★

-தேவநேசன்



# உதயன் நத்தார் சிறப்பு மலர் 2004




## மானிடர்க்கோர் திருநாளோ!

சிப்பியிலே முத்தும்,
சேற்றினிலே தாமரையும்,
இத்தரைக்கு எடுத்தியம்பும்
தத்துவமாய்
வந்துதித்தோன்.
சத்திரத்தில் தங்குதற்கும்
தகுதியில்லா ஏழையன்புப்
பத்தினியாள் கருவறையின்
பொக்கிஷமே யேசுபிரான்!

தன்னிலை மறந்தலையும்
தறிகெட்ட செம்மறியாய்
மண்ணுலகோர்
அலைந்துழல்தல்
மாற்றி நன்னெறி காட்ட
மண்ணுலகு செய்த பெரும்
மாதவத்தால்
வந்துதித்தோன்

சொன்ன வழி நடந்து விடின்
மண்ணுலகும் விண்ணுலகே!

பாமரரும் புரிந்துணரும்
பான்மையிலே உவமைகளாய்,
மாண்புமிகு தத்துவங்கள்
போதனையாய் தந்த மகான்.
வேதனைகள் தாங்கியவன்,
வெஞ்சிலுவைப் பாரமதை
தோள்சுமந்தோன்
சனனதினம்
மானிடர்க்கோர் திருநாளே!

புத்தூர். வே.இளையகுட்டி













பாரினில் அமைதி பற்றிப்பரவிட, தேடிவரும் இத்திருநாளில்
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
இனிய நத்தார், புதுவருட நல்வாழ்த்துக்கள்

- காலத்துக்குக் காலம் ஈடு இணையற்ற புத்தம் புது டிசைன்களில் நகைகளை நவீனமாக வடிவமைப்பவர்கள்.
- காலத்தால் அழியாத, கற்பனைக்கும் எட்டாத அற்புத எழில்மிகு ஆபரணப் படைப்பாளர்கள்.
- தங்க நகையுலகில் மங்காப் புகழுடன் ஒளி வீசி, தமக்கென தனியிடம் வகித்து நிற்பவர்கள்.

நியூ நகுலா ஜீவல்லரி
74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 5511

நியூ லலிதாஸ் ஜீவல்லரி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3433


## எப்போ வந்து நீ பிறப்பீர்?

மந்தைகளாய்
ஆன நாங்கள்
தீவனத் தொட்டியருகே
மனங்களை ஓடவிட்டோம்
இறைவா!
உம் பிறப்பால்
புத் தொளியை
வாழ்வதற்கு
ஊட்டாயோ?

உண்மைகளைக்
கொலை செய்து
பொய்மை மீது
கூடாரமமைத்து
பெருமை பேசும்
எங்கள்
சிறுமையை நோக்காது
தண்மையாய்
பாலகனே
பாரினில் மீண்டும் வா!

எம்மீது போடப்பட்ட
எண்ணற்ற சிலுவைகள்
வாழ்வை
கல்லறை நோக்கி
நசுக்குகின்றதே
இயேசையா!
உன் புதுப்பிறப்பால்
காயங்களையாற்றி
கைபிடித்து தூக்கையா!
கொக்கின் வாயில்
சிறுமீனாய்
துடிதுடிக்கும்
எம் வாழ்வுக்கு
அப்பனே உம்மருளால்
பாதுகாப்புத் தந்திடவா!

போர் முழக்கம்
பாரெங்கிலும்
வேரோடிப் போனதையா
ஏர்பிடித்து
உழுவதற்கும்
சட்டந்தடை போடுதையா
ஊர் முழுக்க
உம் தயவை
ஏங்கி ஏங்கி நாமிருக்க
எப்போ வந்து
நீர் பிறப்பீர்
எம் வாழ்வை
மாற்றுதற்கு!

பாலகனே பாருமையா
பாதகங்கள் நீளுதையா
உதிரம் குடித்து
உண்டி பருக்கும்
ஊன் செயலை
மாற்றுமையா
இன்முகமாய்
இன்னிசையாய்
எம் வாழ்வை
ஆக்குமையா!

**சூரியநிலா**
ஈச்சமோட்டை




பகவான் இயேசு அவதரித்த இந்நத்தார் திருநாளில் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

1 வருட உத்தரவாதம் உண்டு | விலை 14,000/= மட்டும் | IDD 25/= மட்டும்



அழைப்புக்களுக்கான கட்டண விவரம்

| | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம். கையிருப்பு முடியும் முன் உடனே விரையுங்கள்.
மேலதிக விவரங்களுக்கு:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி


Office: இல. 185, முதலாம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 7070, 0712 399 220, 0777 281 521.

Shop: இல. 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கையடக்க தொலைபேசி உடன் திருத்திக் கொடுக்கப்படும்.

(C/39689) உதயன் Graphics





ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ

இல்லம் சிறக்க! உள்ளங் குளிர! ஈடிணையற்ற எழில்மிகு புதுயுக புடைவைத் தினுசுகளை உங்கள் விருப்புக்கேற்ப உவந்தளிக்கும் ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ ஸ்தாபனத்தார் மங்கலம் பொங்கும் இனிய நத்தார், புது வருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றார்கள்!

இல.13,14, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம். Tel:222 3139

(C/39614) உதயன் Graphics





நியூ சகானா ரெக்ஸ்ரைல்ஸ்

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நத்தார் நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

இல. 100, பெரியகடை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி.: 077 6147418

(C/39636) உதயன் Graphics



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்!

FedEx Express®

திருமுருகன் கொம் நெற்

WESTERN UNION

Inland & I.D.D Calls, Internet-Browsing & Email, Fax, Photo Copy, Computer typing & Printing,
Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services,
& Computer-Hand phone Accessories,

259, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835 Fax - 021 222 7836

4, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560 Fax - 021 222 7310

E.mail :- thirumuruglan@lycosmail.com

## மீட்பர் ஜேசு பிறந்துவிட்டார்

இவ்வுலகில் தோன்றுமுன் யாருக்கும் வரலாறு இருந்ததில்லை. கருவாகி உருவாகு முன்னே அவரின் செயலை யாரும் கணக்கிட்டதுமில்லை. மண்ணிலே மனிதன் பிறக்கின்ற அன்றுதான் அவனது வாழ்க்கை தொடங்குகின்றது. இது இறைவனது திட்டம் - இயற்கையின் சட்டம். ஆனால். இயற்கையின் நியதி மாறி ஒருவரின் பிறப்பு பல காலங்கள் முன்பே முன்னறிவிக்கப்பட்டு காத்திருந்து வருகை தந்தவர் எம் குழந்தை ஜேசு.

ஜேசுவின் வருகைக்காக ஏங்கிநின்று எதிர்நோக்கியவர் ஏராளம். வையகம் அவரது வருகைக்காக வாஞ்சையோடு விண்ணோக்கி நின்றது. வாடிய பயிர் வருமழையைத் தேடுவது போல் இறைமகனை மக்கள் எதிர்பார்த்து நின்றனர்.

மார்கழி மாதம் யூதா நாடு. பெத்லகேம் என்னும் சிற்றூர். இருள் நிறைந்த மாட்டுக்குடில். பனி பெய்கின்றது. வாடைக்காற்று வீசுகின்றது. இறைவாக்கினரால் முன்னறிவிக்கப்பட்டபடி கன்னியின் மகனாய் வந்துதித்தார் எம் பரமன் ஜேசு.

மலைக்குகை இவரது மாளிகை. வைக்கோல் இவரது மலரணை. ஆடு. மாடு இவரது உறுதுணை.வெறுமையில் வறுமையில் எழுந்தார் கிறிஸ்து.

இன்று அப்பெருமகன் ஜேசுக் கிறிஸ்துவின் பிறப்புவிழா. இன்றைய இந்நந்நாளில் எம் மனங்களின் அழுக்குகளை அகற்றி தன்னலம் மறந்து பிறர் நலம் பேணுபவர்களாக எம்மை மாற்றுவோம்.

எம்மிடையே உறுதியான ஒற்றுமையையும் அன்பையும் வளர்ப்போம். இந்த ஒற்றுமையே எம் வாழ்வின் மகிழ்வுக்கு இட்டுச்செல்லும்.

பிறர் உரிமைமைகளை மதிக்கப் பழகுவோம்.

கிறிஸ்து பிறப்பு விழா கிறிஸ்தவ மக்கள் அனைவருக்குமே ஒரு பெருவிழா. இப்பெருவிழாவன்று மட்டுமல்ல தொடர்ந்து சில நாள்களுக்கு உலகம் பூராவுமுள்ள கிறிஸ்தவ சமூகங்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கியிருக்கும்.

வருடாவருடம் வரும் திருவிழாத்தானே என்று எண்ணாமல் ஒவ்வொரு வருடமும் புதுவிழாவாக புதுச்சிந்தனைகளுடன் கொண்டாடுகின்றோம்.

இந்தப்பிறப்பு விழாவினை ஆனந்தமாகக் கொண்டாடத் தவறாத நாம் அவர் எமக்குப் போதித்துச் சென்ற சமாதானம். அன்பு என்பவற்றை கடைப்பிடிக்கின்றோமா?

அடக்குமுறைகளைக் களைந்தெறிந்து ஒவ்வொரு மனிதனின் உரிமைகளையும் மதித்துக் கிறிஸ்துஜேசுவின் பிறப்பு விழாவிற்குப் புது அர்த்தம் கொடுப்போம்.

## கனவுகளுடன் உதயமாகும் கிறிஸ்மஸ் பெருவிழா

மனிதர்கள் ஒவ்வொருவரும் வரலாற்றின் கட்டுக்குள் சிக்கி இழுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். யதார்த்தத்தில் வாழ்வில் சொல்லொணாத் துன்பங்களையும், ஏக்கங்களையும் சுமந்தவர்களாக நடமாடுகின்றார்கள். அந்த வகையில் வரலாற்றின் புதியதொரு அத்தியாயத்தைத் திறப்பதற்கு - இன்னுமொரு புதிய ஆண்டிற்கு புதுக்கனவுகளோடு நுழைவதற்கு முழு உலகுமே தன்னைத் தயார்படுத்திக் கொள்கின்றது.

ஆனால், போரின் எச்சங்களுடன் புதுவிடியலைத் தேடி நிற்கும் எமது தேசத்தில்... கருச்சிதைவுகளாகிப்போன எம்மவர்களின் காத்திருப்பு வரிசையில் பிறக்கப்போகும் பாலன் யேசு மூலம் விடியல் கிடைக்குமோ என ஒரு விடியலின் காத்திருப்பு.

தொடர்ந்த இடப்பெயர்வுகளால் மனங்களும் உணர்வுகளும் வடுக்களாகிப் போனதுடன். இனியும் அது தொடருமா? என ஏக்கப் பார்வைகளுடன் பிறக்கப்போகும் பாலன் யேசுவை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் எம்மவர்கள்.

வாழ்க்கையின் துன்பியல் பக்கங்களைப் பார்த்துப் பார்த்து வெறுத்துப்போன எம்மக்களுக்கு கிறிஸ்துவின் பிறப்புச் செய்தி எதைத் தாங்கி வருகின்றது? என்ற ஏக்கம் பெருமளவிலேயே உள்ளன.

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் எல்லோரும் வாருங்கள் என்ற அழைப்புடன் விடும் குழந்தை யேசுவின் பிறப்புடன் எமது வாழ்விலும் நம்பிக்கை ஒளி ஏற்றப்படும். ஆனந்தத்துடன் குழந்தை யேசுவை வரவேற்போம்.



















## பாலன் பிறந்ததினம்!

இன்பம் தழைத்ததினம்
இனிமை செழித்ததினம்
என்பை எமக்கீயும்
இயேசு பிறந்ததினம்!

மனிதம் மலர்ந்ததினம்
மக்கள் மகிழ்ந்ததினம்
புனிதம் பொலிந்ததினம்
பொய்மை புதைந்ததினம்!

ஏற்றம் எழுந்ததினம்
ஏழ்மை ஒழிந்ததினம்
சீற்றம் சிதைந்ததினம்
சித்தம் தெளிந்ததினம்!

அன்பு ஒளிர்ந்ததினம்
அறிவு துளிர்த்ததினம்
துன்பு துடைத்ததினம்
தூய்மை துலங்குதினம்!

பாலன் பிறந்ததினம்
பாவம் பறந்ததினம்
சீலம் சிறந்ததினம்
சிறுமை மறைந்ததினம்!

கூத்தாடி
வி.சி.குஞ்சிதபாதம்.

## மன்னவன் பிறந்துவிட்டார்

எம் வாழ்வின் ஒளிவிளக்காய்
மண்ணில் மைந்தன்
தோன்றிவிட்டார்

கண்ணின் கருமணியெனவே
எம்மைக் காக்க
எம் மன்னன் பிறந்து விட்டார்

இருள் வழி நடக்கும்
மக்களுக்கு
அருள் வழியைக் காட்டிடவும்

நல்லாயனாக எம்மை
வழிநடத்திடவும்
பாலன் ஜேசு பிறந்துவிட்டார்

வாழ்வின் சோகங்கள்
வெயில் கண்ட
பனிபோல மறைந்து விட
பிறரன்பில் நம் வாழ்வை
புது வசந்தத்தின்
வரவாக்குவோம்.

காத்திருப்பின் வாஞ்சைகள்
ஒற்றுமையைத் தேடி
நகருவதாய் பாலன் ஜேசு
வகுத்துவிட்ட பாதைதனில்
கண்ணியமாய்
நாம் வாழ்வோம்.

-சந்தியா



# அமைதியின் தூதர்களாய் எம்மையே மாற்றுவோம்...

மனிதன் வாழ்வில் அன்றாடம் அமைதியைத் தேடித்திரிகின்றான். அமைதியுடன் அவலங்களும் இரண்டறக் கலந்து வாழ்வு என்னும் ஆறு வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த வெள்ளத்தில் மனிதன் அடித்துச் செல்லப்படுகின்றான்.

ஒவ்வொரு மனிதனும் நேசிக்கவும் நேசிக்கப்படவும் ஏங்குகின்றான். உற்சாகம் கொடுத்து உதவிக்கரம் நீட்டி வாழவைக்கும் போது தானும் மற்றவர்களை வாழவைக்க வேண்டும் என விரும்புகின்றான்.

இந்தப் பரஸ்பர வாழ்வுதவியே இன்று மனிதனை வாழ்க்கைப் பாதையில் சீராக வழிநடத்திச் செல்கின்றது.

வாழ்வு என்பது தாயின் உதரத்தில் தொடங்குவதுமல்ல. புதைகுழியில் மடிவதுமல்ல. அது நித்திய வாழ்விலே ஒரு கணமாகும், என்கின்றார் ஓர் அறிஞர்.

இந்த ஒரு கண வாழ்வில் நாம்படும் துன்பங்கள், சஞ்சலங்கள், பிரச்சினைகள் எவ்வளவு. அவற்றையெல்லாம் வெற்றிகொண்டு அந்த ஒரு கணத்தையும் மகிழ்வானதாக்குவது நம் ஒவ்வொருவரிலேயுமே தங்கியுள்ளது.

சாந்தம், அன்பு, பரஸ்பர விட்டுக்கொடுப்பு, தியாகச் சேவைச் சிந்தனை இவைகள் மனிதனின் உள்ளத்தைத் தொட்டு ஓய்வும் அமைதியும் கொடுப்பதுண்டு. இந்த அமைதி இல்லாவிடில் வாழ்வு முற்றாகக் கசந்து விடும்.

தன்னறிவும், தூய சிந்தனையுமே உண்மை அமைதிக்கு அடித்தளமாகும். மனிதன் தன்னை போலி வேடங்களிலிருந்து விடுதலையாக்கி தன்னறிவு பெற்றவனாகவும் சிந்தனை சொல், செயல் என்பவற்றில் தூயவனாகவும் வாழும் போது உண்மையான அமைதியையும், உறவுகளையும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

அமைதியின் தேவனாய் பிறந்துள்ள ஜேசுவின் தூதர்களாக நாம் எம் வாழ்வில் செயற்படுவோம். எம்மிடம் பிறந்த பாலன் எதிர்பார்க்கும் அமைதிக்குணங்களைத் தோற்றுவிப்போம்.

''அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே...''

## பூமியில் வந்துதித்தார்!

ஆநிரைத் தொழுவத் துள்ளே
அடைமழை குளிருந் தாக்க
பூவெனப் பொலிந்து பாலன்
பூமியில் வந் துதித்தார்!

மரியம்மை ஈன் றெடுத்த
மனுக் குலத்தின் இரட்சகரை
உரிமையுடன் சூசையப்பர்
உளமார அணைத் திட்டார்!

வானதூதன் வழங்கிய செய்தியால்
வரிசையாகவே வந்தனர் ஆயர்
தேனாயினிக்கும் தேவ குமாரனை
தெண்டனிட்டனர் தெளிந்த சிந்தையர்

இருளகற்றும் ஒளி விளக்காய்
இவ்வுலகி லவ தரித்த
கருணைவள்ளல் ஏசு பிரான்
கழல்தொழவே கவலை யறும்!

தென்மல்லை ஜ. பஸ்ரதன்
















## மற்றவர்களிடம் மறைந்திருக்கும் தெய்வத்தைக் கண்டவர் இயேசு பிரான்

இயேசு பெருமானுக்கு இன்று பிறந்த நாள். உலகெங்கிலும் வாழும் கிறிஸ்தவ மக்கள் மனச் சிரத்தையுடன் கொண்டாடும் திருநாள்.

இயேசு அடக்கப்பட்டோருக்காகவும் ஒடுக்கப் பட்டோருக்காகவும் குரல் கொடுத்து மக்கள் எல்லோரும் ஏற்றத்தாழ்வின்றி சமாதானமாகவும் சமத்துவமாகவும் சகோதரத்துவத்துடனும் வாழவேண்டும் என்ற இலட்சியம் உடையவர். அன்பு, கருணை, மானிடம் ஆகிய மூன்று தத்துவங்களையும் அவரது போதனைகளும், வாழ்க்கையும் எடுத்துக்காட்டியிருக்கின்றன.

மற்றையவர்களிடம் மறைந்திருக்கும் தெய்வத்தைக் கண்டவர் இயேசு பிரான். அதனால் அவர்களுக்குச் சேவை செய்வதில் இன்பம் கண்டார். மற்றவர்களின் துன்பங்களை நீக்குவதிலும், பாதிக்கப்பட்டோருக்கு விடுதலை பெற்றுக் கொடுப்பதிலும் இறைவனைக் கண்டார். அவை இறைவனுக்குச் செய்யும் தொண்டுகள் என நினைத்தார்.

அவரின் நன்னாளான இந்நாளில் அமைதிக்காக ஏங்குகின்ற எம் நெஞ்சங்கள் அடிப்படை உரிமைகளைக் கூட பெற்றுக்கொள்ள முடியாது அந்தரிக்கும் இவ்வேளையிலும் கூட உடன் பிறப்புகளை பழிதீர்த்துக்கொண்டும், அழித்துக் கொண்டும் இருக்கின்றார்கள்.

உண்மையான அமைதிக்கு வழி உண்டு. அதை அறிந்தும் குருடராகவும், ஏற்கமனமில்லாதவராகவும், இருப்பதுதான் எமது துரதிர்ஷ்டமாகும்.

உலகில் இறைவன் தயவு பெற்றவர்களுக்கு அமைதி உண்டாகுக, என்று கிறிஸ்து பிறப்பில் வானவர் கீதம் பாடினர். அமைதி இறைவனால் வழங்கப்படும் உன்னத கொடையாகும். அமைதிக்கான ஆரம்பமும் அத்திபாரமும் இறைவன்தான். தெய்வம் தயவு கொள்ளும்போதுதான் மனிதன் அமைதிகாண முடியும்.

இறைவனது இரக்கம் மழைபோல் பொழியாவிட்டாலும், மனிதன் தன் மனத்தை கல்லாக்கிக்கொண்டு பொய்யும் பிரட்டும், கொலையும், களவும் செய்யத் துணிந்துவிட்டால் இறைவன் என்ற ஒருவர் இல்லாமலேயே போய்விடுவார்.

நெஞ்சத்தின் நின்மதியைக் குலைப்பது பாவமும் பாவப்பழக்கமுமாகும். தூய மனத்தோர் பேறுபெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் கடவுளைக்காண்பர். என்பது இயேசுவின் மலைப்பொழிவின் அமுதவாக்கு.

- காங்கா

## மீண்டும் வந்து தோன்றிடுமோ சமாதானம்

விண்ணுலகில் இறைவனுக்கு
மகிமையும்
மண்ணுலகில் மனிதருக்கு அமைதியும்
உண்டாகுக என்றுரைத்தார்
வானதூதர்.
மண்டியிட்ட இடையரும்
தாழ்பணிந்தார்.

தண்ணொளிக்கும் தாரகைகள்
கண்சிமிட்ட
வெண்ணிலவும் வான்வெளியில்
வட்டமிட
பண்ணிசைக்கும் புள்ளினங்கள்
மகிழ்ந்திட
மண்ணுலகில் மாபரனார் மானிடரானார்

எண்ணிறந்த மக்கள்பாவம் போக்கிடவே
புண்ணிய மாமரியின் உதரத்திலே
கன்னியமாய் தேவன் உதித்ததனால்
பெண்ணியம் பெருமை பெற்று
உயர்ந்ததன்றோ

வண்ணத்தமிழ் வாழும்எம் ஈழமதில்
மண்ணின் மைந்தர் புரிந்த பெரும்
தியாகங்களால்
வென்றிநின்று தேடிய சமாதானம்
என்று நடுவழியில் நிலைதடுமாறியதே

திருமதி தளையசிங்கம் ரூத்
சாவகச்சேரி.

















# ஏழைகளுக்காய் ஏழ்மையாய் ஏழையிடம் பிறந்தார்

இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்(லூக் 2 -11) ஏழை பிறந்த செய்தி ஏழைகளுக்கு அறிவிக்கப்படுகின்றது. கால்நடைகள் மத்தியிலே பிறந்தவரின் செய்தி கால்நடைகளோடு தங்கியிருந்தவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. ஏனெனில், இயேசு பிறந்தது இந்த ஏழை மக்களுக்காகவே. அன்றாட உணவிற்காக, இரவில், பயங்கரத்தையோ, பனியின் குளிரையோ பொருட்படுத்தாது பாதுகாப்பற்ற சூழலில் இயற்கையோடு போராடிக்கொண்டிருந்த இடையர்களுக்குத்தான் மகிழ்ச்சியின் செய்தி வான தூதரால் அறிவிக்கப்பட்டது. இயேசுவின் பிறப்பு அறிவிக்கப்பட்ட முதல் மனிதர்கள் இந்த ஏழைகளே.

இன்று வாழ்விற்காய் போராடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு இல்லிடத்தை தொலைத்து அகதிகளாக அவலவாழ்வு வாழும் மக்களுக்குத் அன்றாட உணவிற்காகத் தங்களையே பணயம் வைத்து காத்துக்கிடக்கின்ற உழைக்கும் வர்க்கத்தினருக்காக இயேசுவின் பிறப்புச் செய்தி ஓர் ஊக்கமருந்துதானே. ஏழையின் எழிய அழைப்பு ஏழைகளுக்கா, ஏழையிடம் ஏழ்மையாகப் பிறந்த இவர் தரும் அழைப்பு என்ன?

கடவுள் ஏழையாக பிறந்தவர் என ஏற்றுக்கொள்ளவேண்டும். செல்வராக இருந்த அவர் ஏழைகளாகிய நாம் செல்வராகும்படி நமக்காக ஏழையானார். (2 கொ 8 9) ஆனால், நாம் அவரை பணக்காரக் கோலத்தில் பார்க்கவே ஆசைப்படுகின்றோம். அவரது ஏழ்மைக் கோலத்தின் அடையாளமாக குடிலைக் கூட பணக்காரத் தன்மையுடன் ஆடம்பரமாக அலங்காரமாகத்தான் அமைக்கின்றோம். நாம் விரும்பும் பணக்காரத் தன்மையை கடவுள் மீது திணிக்கின்றோம். அன்று கடவுள் தனது சாயலாக மனிதனைப் படைத்தார். இன்று மனிதனோ தனது சாயலாக கடவுளைப் பார்க்கிறான். நம் கடவுள் உலக வரலாற்றில் ஏழையாகப் பிறந்தவர் என ஏற்றுக்கொள்ளும் யதார்த்தமான மனநிலை முதலில் நம்மில் உருவாக வேண்டும்.

இயேசு ஏழையாகப் பிறந்தால் நாமும் ஏழையாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. சிந்தனை மாறாத ஏழைகளை வாழ வைக்கவேண்டும் என்பதைத்தான் அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும். அன்பு செய்ய வேண்டும். சக மனிதராகச் சமநிலையில் நடத்த வேண்டும் அவர்களுக்குச் செய்வது இயேசுவிற்கே செய்வது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஏழைகளை வாழவைக்காவிட்டாலும் குறைந்த பட்சம் அவர்களை வாழ விட்டு வைத்தாலே போதும். அவர்கள் வறுமையைப் பயன்படுத்தி அவர்களை விலைக்கு வாங்காமல், அவர்களின் இயலாமையைப் பயன்படுத்தி அவர்களை அடக்கி ஆளாமல், அவர்களின் அறியாமையைப் பயன்படுத்தி அவர்களிடம் இருப்பதை அபகரிக்காமல், அவர்களின் பலவீனத்தைப் பயன்படுத்தி அவர்களை பலிக்கடாவாக்காமல், அவர்களை மனித உருவில், மனித உணர்வில், மனித உறவில், மனித மாண்புடன் வாழ விட்டு வைத்தாலே போதும். ஏழைகள் கோழைகளாக இருக்கும் வரை ஏய்ப்பவர்கள்தான் மேய்ப்பவர்களாக இருப்பார்கள். மேய்ப்பவர்கள் வேண்டுமென்றால் தொடர்ந்து ஏய்ப்பவர்களாக இருக்க முயற்சி செய்யலாம். ஆனால், ஏழைகள் தொடர்ந்து கோழைகளாக இருக்கமாட்டார்கள். ஏனெனில், ஏழையிடம் ஏழையாகப் பிறந்த இயேசு ஓர் ஏழையே ஆனால், கோழை அல்ல.

க. அருள்நேசன்
குருநகர்.

## மானிடர்க்கோர் திருநாளே!

சிப்பியிலே முத்தும்
சேற்றினிலே தாமரையும்
இத்தரைக்கு எடுத்தியம்பும்
தத்துவமாய் வந்துதித்தோன்
சத்திரத்தில் தங்குதற்கும்
தகுதியில்லா ஏழையன்புப்
பத்தினியார் கருவறையின்
பொக்கிஷமே இயேசுபிரான்!

தன்னிலை மறந்தலையும்
நெறிகெட்ட செம்மறியாய்
மன்னுலகோர் அலைந்துழல்தல்
மாற்றிநன் நெறிகாட்ட,
மண்ணுலகு செய்தபெரும்
மாதவத்தால் வந்துதித்தோன்
சொன்னவழி நடந்துவிடின்
மண்ணுலகும் விண்ணுலகே!

பாமரரும் புரிந்துணரும்
பான்மையிலே உவமைகளாய்,
மாண்புமிகு தத்துவங்கள்
போதனையாய் தந்தமகான்
வேதனைகள் தாங்கியவன்,
வெஞ்சிலுவைப் பாரமதை
தோள்சுமந்தோன் சனனதினம்
மானிடர்க்கோர் திருநாளே!

—புத்தூர் வே. இளையகுட்டி




இயேசு பிறந்த பொன்னான நன்னாளில்
அனைவருக்கும் எமது நத்தார் நல்வாழ்த்துக்கள்!
இதோ! அரிய சந்தர்ப்பம்!
GOODWILL COMMUNICATION
48, St.Patrick's, Road, Jaffna. ☎:5636, 3332
இன்ரநெற். ஈ-மெயில். கணனி அச்சுவேலை
நத்தார் பண்டிகையை முன்னிட்டு
இன்ரநெற் 5/=
(C/39664)




பாலன் பிறந்த பசுமையான பொன்னாளாம் நத்தார் திருநாளில்,புதுவருட வாழ்த்துக்களையும் இணைத்து வழங்குவதில் இரட்டிப்பு மகிழ்ச்சி கொள்கின்றார்கள் பெற்றா எசன்ஸ் ஸ்தாபனத்தார்!

ரிச்கேக்

175 ரிச் கேக் தயாரிக்கத் தேவையான மூலப்பொருள்கள்

| | |
|---|---|
| 500g ரவை | 1 போ.கோல்டன் சிரப் |
| 500g பட்டர் | 200 கிராம் கென்டீட் பீல் |
| 500g பிளம்ஸ் | 1 வெனிலா எசன்ஸ் |
| 500g ரெய்சின்ஸ் | 1 ஆமன்ட் சென்ஸ் |
| 500g செரீஸ் | 1/2 ரோஸ் எசன்ஸ் |
| 500g பம்கின் பிரசர்வ் | 1 வைன் கிளாஸ் தேன் |
| 600g கஜு | 2 வைன் கிளாஸ் பிரண்டி |
| 200g கறன்ஸ் | 1/4 தேக்கரண்டி உப்பு |
| 500g ஜின்ஜர் பிரசர்வ் | 27 முட்டை |
| 500g சவ்சவ் | (27மஞ்சல் கரு, |
| 1 போ.ஸ்ட்ரோபரி ஜேம் | 14 வெள்ளைக்கரு) |
| 600g சொவ்ட் சுகர் | (1/4 தேக்கரண்டி சாதிக்காய்) |

இவை அனைத்தையும் தரமாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள

RICH CAKE

செய்யும்முறை

முட்டை, சீனி, வறுத்த ரவை, பட்டர் முதலியவற்றைத் தவிர மற்ற பொருள்களை சிறு துண்டுகளாக வெட்டி 5 நாள்களுக்கு வைக்கவும்.

வெள்ளைக்கருவை சீனியில் சேர்த்து நன்றாக அடித்து வறுத்த ரவையை சேர்க்கவும். அத்துடன் மஞ்சள் கரு, பட்டர் வெட்டிய பொருள்கள் சிறிதளவு பேக்கிங் பவுடரையும் சேர்க்கவும். பிறகு கேக் டிரேயில் போட்டு பேக் செய்யவும்.

PETTAH ESSENCE SUPPLIERS

குறிப்பு 15", 18", 24" அளவுகளில் மின்சார மங்கள வாத்தியங்களும் (Electrics Drums) விற்பனைக்கு உண்டு

பெற்றா எசன்ஸ் சப்ளையர்ஸ்
104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 2386
(C/39525)

